ரிஜிஸ்டர் நெ. 2041. தனிப்பிரதி விலை ஒரு அணா.

# குடி அரசு


| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் — ரூ. | 3—0 |
| 6-மாத சந்தா ,, — ,, | 1--12 |
| வெளி நாட்டிற்கு ,, — ,, | 5—0 |

ஞாயிறுதோறும் வெளிவரும்.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1 க்கு ரூ. 1.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1 க்கு ரூ. 2.
நீடித்த விளம்பரத்துக்கு-தனி விகிதம்

மாலை 8. | ஈரோடு, ஆங்கிரஸ-ஹு மாசி-மீ 15-உ (26—2—1933) | மலர் 44.



## இந்தியாவின் குறைபாடுகள்.

## The Crux of the Indian Problem

என்னும் புஸ்தகத்தை வாங்கிவாசியுங்கள்.



இந்து மக்களின் பகுத்தறிவு வளர்ச்சியை பெருக்க என்றே பம்பாய் அரசாங்கக்கல்வி மந்திரியாய் இருந்த Dr. பரான்ஜ்பே M. A. D; Sc., அவர்களால் எழுதப்பட்டு, லண்டன் பகுத்தறிவு சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவமும், ஆராய்ச்சியும் கொண்டதான அறிய நூல் (+இன் தமிழ் மொழி பெயர்ப்பு) ஆகும். இதில் இந்தியக்கல்வியின் சிர்கேடு, மதம், மதபுத்தகங்களும் அவற்றிலுள்ள குற்றங்களும், பகுத்தறிவு, மரணம், ஒழுக்கம், சோதிடமும் சகுனமும், முதலியனபற்றிய ஆராய்ச்சியும், கண்டனங்களும் நிறைந்த கட்டுரைகள். ஆழ்ந்த அநுபவக்கருத்துக்கள், பாரபட்சமற்ற மணிவாசகங்கள், இந்திய சமுதாய வாழ்க்கையின் அலங்கோலத்தை அறிய விரும்பும் ஒவ்வொருவரும் படிக்கவேண்டுவதவசியம். முகவுரை, முடிவுரையுடன் 160 பக்கங்களுக்கு மேற்கொண்டது. இதில் எப்படிப்பட்ட தேசியம் வேண்டும்? எப்படிப்பட்ட அரசியல்வேண்டும்? என்பவைகளைப்பற்றியும், யாவற்றிற்கும் இந்திய மக்களுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்படவேண்டியதே முக்கிய தேவை என்பதுபற்றியும் தெளிவான நடையில் விளக்கப்பட்டுள்ளது.

இதன் விலை அணா ... ... ... 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா ... 0—6—0

மொத்தமாய் வேண்டியவர்களுக்கு குறைந்த விலைக்கு கொடுக்கப்படும்.

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

## "கடவுளும், பிரபஞ்சமும்"

என்ற சிறந்த ஆராய்ச்சி நூல். கடவுள் ஒருவர் உண்டா என்பதும், கடவுளுக்கும் பிரபஞ்சத்திற்குமுள்ள சம்பந்தா சம்பந்தமும், கடவுளது வேலை என்ன என்பதையும், சவிஸ்தாரமாக ஆராய்ச்சி அறிவுடனும், பூத பௌதிக விஞ்ஞான சாஸ்திர விளக்கங்களுடனும், தக்க மேற்கோள் உதாரணங்களுடனும், இனிய தமிழில், எளிய நடையில், யாவரும் படித்துணரும் வண்ணம் எழுதப்பட்ட ஓர்சிறந்த நூல். "கோழி முதலில் உண்டானதா முட்டைமுதலில் உண்டானதா", "மரம் முந்தியதா, வித்து முந்தியதா", "பில்லி சூனியம்", முதலியன பற்றிய சந்தேகங்களுக்கு விடையும், அநுபந்தமும் சேர்க்கப்பட்டுளது. அதிக பக்கங்கள், குறைந்த விலை. உங்கள் ஆர்டரை இன்றே பதிவு செய்துகொள்ளுங்கள்.

பிரதி 1-க்கு விலை அணா 0-4-0 தனிப்பிரதி வேண்டுவோர் 5-அணா தபாற்பில்லைகள் அனுப்பவேண்டும்

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

Ready for Sale! Ready for Sale!!

## The Crux of the Indian Problem
## By Dr. Paranjpye M. A., D. Sc.

————)G(————

The English edition of the above book published by R. P. A. through Watts & Co., London, is ready for sale with us. All those who are sincerely interested in social advance and rejuvenation must go through Dr. Paranjpye's "Crux of the Indian Problem," a clear and vivid exposition of the present degraded social status of the Hindu Society, its abominable and vain observances practised in the name of Religion & God.

Clear cut ideas! Rationalistic views! Matured sentiments!!

English Print. Well gotup. Neatly bound.

Price per copy ... ... Rs. 1—0—0
For Subscribers of Kudi Arasu As. 0—8—0

Can be had of:—

Kudi Arasu Book Depot, Erode.

ஈ. வெ. ராமசாமியின்
இலங்கை
சொற்பொழிவு.

24. பக்கம் கொண்டது. விலை- 0-0-6 100- புத்தகம் ரூ 1-8-0 தபால் சார்ஜ் வேறு. 2ரூ- அனுப்பினால் 100-புத்தகம் தபால் செலவில்லாமல் அனுப்பப்படும்.

மானேஜர்
'குடி அரசு' ஈரோடு.

Read.
The 'Citizen'
and become a
True Citizen.

The only Monthly Magazine in India purely devoted to the civic, Social and economic Interests of the Indians. Annual Subscription Rs. 2—0—0.

For advertisement please apply to:—

The Publisher
The Citizen
86, East Andar Street,
Teppakulam, Trichy.

"குடி அரசு"
வெளிநாட்டு ஏஜெண்டுகள்.

கோலாலம்பூர்:—
சிலேங்கர் ஸ்டாம்பு கம்பெனி,
மார்க்கட் தெரு.
வி. நைனா முகம்மது அண் கோ.,
7- பிரிக்பீல்ட்ஸ் ரோடு.
எம். எம். அல்லி அண் கோ.,
மார்க்கட் ஸ்ட்ரீட்.

சிங்கப்பூர்:—
எம். முகம்மது டல் பக்கிர்,
அண் கோ.,
34 கார்த் பிரிட்ஜ் ரோடு.
எ. லட்சுமி,
218 ரிவர் வேலி ரோட்.
ஜி. முகமது இப்ராகிம்
134 டேஞ் காங்பகார் ரோடு.

மலாக்கா:—
எ. எஸ். கரிம் அண் கோ.,
51 மில் ரோடு.

பினங்:—
டி. கை. செல்லய்யா,
டெலிபோன் எக்ஸ்சேஞ்,
பர்மா ரோடு.

சுயமரியாதை
இயக்கத் தோழர்கள்.

தோழர்கள் 1 ஈ. வெ. ராமசாமி, 2 ஊ. பு. அ. சௌந்திரபாண்டியம், 3 ஆர். கே. ஷண்முகம், 4. எஸ். ராமநாதன் 5. கைவல்யம், 6. ஈ. வெ. ராமகம்மாள், 7. இந்திராணி பாலசுப்பிரமணியம் 8. சிவகாமி, சிதம்பரனுர் 9. குருசாமி-குஞ்சிதம், 10. நீலாவதி—ராமசுப்பிரமணியம் 11. பொன்னம்பலம், 12. சிவானந்தம். 13. அருணகிரி சுந்தரி, ஆகியவர்களின் போட்டோ படங்கள் 6½ x 4¾ சைஸ்படம் 1-க்கு 0—8—0. ஈ. வெ ரா. 8½ x 6½ 1-க்கு 1—0—0. மொத்தமாய்வாங்குகிறவர்களுக்கு 100க்கு 6—4—0 வீதம் கமிஷன் கழித்துக்கொடுக்கப்படும்.

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் மேல்நாட்டு சுற்றுப்பிரயாணத்தின்போது எடுத்தபடம் 8½ - 6½ சைசில் உள்ள படம் ரூ 1—0—0.

தனிகாப்பி வேண்டியவர்கள் விலைக்குமேல் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். விலாசம்:—

பாலு & Co.,
No. 3 ஒப்பணக்காரத்தெரு,
ஈரோடு

குஷ்டம்
வெண்குஷ்டம் பத்து.

சமீபத்தில் ஏற்பட்டதாயிருந்தாலும்சரி, பாரம்பரையாய் இருந்தாலும்சரி. அபாய நிர்ஜக்ஷன் கிடையாது. 4- வாரங்களில் பூரணகுணம் வியாதி விபரங்களுடன் இங்கிலீஷில்எழுதவும்.

Post Box No- 11413
Calcutta- (k)

'சமத்துவபோதினி'

தாழ்த்தப்பட்டார் சமத்துவம் முன்னேற்றம் கருதி கொழும்பினின்று வெளியாகும் மாதப்பத்திரிகை ஆசிரியர்- வி. நைனுன்.

வருஷ சந்தா—2—8—0
விலாசம்:—சமத்வபோதினி
டிக்கோயா சிலோன்.

பிரமேக நிவாரணி.

நாட்பட்ட பிரமேகம், தந்திமேகம், வெள்ளை, வெட்டை, நீர்சுருக்கு, எரிச்சல், குத்தல், உடனே நிற்கும். நிச்சயமாய் 3 வேளையில் குணம் தரும். தவறாது. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2—0—0.

[illegible]

எமது கியாட்லாக்
இனம்!
சகல வியாதிகளுக்கும் உயர்ந்த மருந்துகள் இருக்கின்றன.
விபரத்திற்கு எழுதுங்கள்.

[illegible] ரூ. 2—0—0.

மலையப்பசாமி,
வைத்தியசாலை, பழநி. S. I.

"தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தளராதுழைப்பவன் தமிழன். வெட்டுஒன்று துண்டிரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனைகள். அறிஞரின் அரிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.
உள்நாடு ரூ. 3—0—0.
வெளிநாடு ரூ. 5—0—0.

விலாசம்—
மானேஜர், "தமிழன்"
ஆண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

# சங்கராச்சாரிகளின் பிரசங்கத்திலுள்ளதைச் சொல்லுவதே யல்லாமல், தூஷிப்பதல்ல.

[கைவல்யம்.]

கும்பகோணம் சங்கராச்சாரி சென்னையில் பல நாள் தங்கிப் பிரசங்கம் செய்து பல வழியாலும் பக்தர்களிடம் பாதகாணிக்கை வாங்கி பசியறியாப்பார்ப்பனர்களின் வயிறைப்பரப்பிவிட்டுப் போனார். இப்பொழுது சென்னைக்குப் பூரி சங்கராச்சாரி வந்திருக்கிறார். இவர்கள் இரண்டுபேர்களும் தென்தேசத்துப்பார்ப்பனர்கள். பூரி சங்கராச்சாரி ஆங்கிலம்படித்தவர். சுவாமி ராமதீர்த்தர், சுவாமி விவேகாநந்தர் முதலியவர்களின் புஸ்தகங்களையும், பிரசங்கங்களையும் படித்திருக்கிறார். தன் பிரசங்கத்திற்கு அனுகூலமாக அவர்கள் சொன்ன சிலவார்த்தைகளைச் சேர்த்துக்கொள்ளுகிறார். ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்கிறார்.

ஆங்கிலம்படித்து ஆங்கிலப்பிரசங்கமாக விருந்தாலும்பார்ப்பனர்கள் மதத்தால் மற்ற சமூகங்களை ஏமாற்றி வஞ்சித்து இன்றுவரையிலும் வந்த அந்த இடத்திலெல்லாம் கடுகளவாவது கூச்சமில்லாமல் அதையே வற்புறுத்தி "சூத்திரர்களான மடையர்களுக்கு" விளங்காமல் சமஸ்கிருத பதத்தாலும், ஆங்கிலேய பாஷையாலும், மடாதிபதியென்கிற பாத்தியதையாலும், சங்கராச்சாரியென்கிற அதிகாரத்தாலும், குருவென்கிற ஆதிக்கத்தாலும், சனாதன தருமமென்கிற அர்த்தமில்லாத தத்துவத்தாலும் வக்கீல் உத்யோகஸ்தன், துபாஷி முதலிய சிஷியர்களின் பலத்தாலும், பழையவஞ்சனையும், கொடுமையும் என்றும் நிலைத்திருக்க பிரசங்கத்தை முடிக்கிறார். அவர் பிரசங்கம் பார்ப்பனர்களுக்கு அர்த்தமானாலும், அர்த்தமாகாவிட்டாலும், தங்களுக்கு அனுகூலமென்பதை அவர்கள் உணர்வார்கள். மற்ற அறிவுள்ளவர்களுக்கும் விளங்கும். சமயத்திற்கு அடிமைப்பட்டுகிடக்கும் பார்ப்பார "தாசிமக்களான சூத்திரர்களுக்கு" அவைவிளங்காது.

ஆதிசங்கராச்சாரியால் இந்துவேதம், வேதாந்த ரூபமாகச்சீர்திருத்தப்பட்டபோது பிராமணர்களுக்கு மாத்திரம் அனுகூலமாயிற்று, மற்ற இந்திய மகாஜனங்களுக்கோ அவர்கள் முன் பார்த்திராத விலங்குகளை உண்டாக்கிவிட்டது என்று சுவாமி விவேகாநந்தர் சொன்னபடி இந்த சங்கராச்சாரிகளும், அவர்கள் பிரசங்கங்களும் பார்ப்பனருக்கு அனுகூலமும் மற்றவர்களுக்குப் பிரதிகூலமென்பதை உணர்ச்சியுள்ளவர்கள் தெரிவார்கள்.

பூரி சங்கராச்சாரி சென்னை கந்தசாமி கோவில் பக்கம் செய்த பிரசங்கத்தில் நியாயத்திற்கும், உண்மைக்கும் விரோதமாகச்சொன்ன பல விஷயங்களை உங்களுக்கு விபரமாக எடுத்துக்காட்டவேண்டும். அதை நீங்கள் படிப்பதற்குள் கீழே சொல்லும் ஒரு விஷயத்தை ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டும்.

அதாவது பூரி சங்கராச்சாரியின் பிரசங்கமுன்னணியில் உட்கார்ந்திருக்கும் வி. வி. சீனிவாச அய்யங்கார், திவான்பகதூர் வி. பாஷியமய்யங்கார், யு. கிருஷ்ணமாச்சாரியார், டி ராஜகோபாலாச்சாரியார், மற்றுமுள்ள அய்யங்கார்கள் இவர்கட்கும், சங்கராச்சாரிக்கும் மதத்தில், அதன் தத்துவத்தில், அதன் சனாதனத்தில, கொள்கையில், அனுஷ்டானங்களில், ஏற்பாட்டில், இவைகளைப்பற்றியெழுதிவைத்திருக்கும் புஸ்தகங்களில் ஏதாவது சம்மந்தமுண்டா? நேசமுண்டா? இவர்களோ சங்கராச்சாரியையும், அவர் மதத்தையும் பிரசன்ன பௌத்தமென்றும், நாஸ்திகமென்றும் சொல்லும் வைணவ மதஸ்தர்கள். சங்கராச்சாரியின் கூட்டமோ வைணவ ஆச்சாரியான ராமானுஜரை கெங்கையில் தள்ளியும், பாஷாணம் வைத்தும் இரண்டுதரம் கொல்லப்பார்த்தவர்கள் என்று அவர்கள் எழுதியும் வைத்திருக்கிறார்கள். இப்படியிருக்க சங்கராச்சாரியை வரவேற்று உபசரிப்பதற்கும் பிரசங்க முனனணியிலிருப்பதற்கும் காரணமென்னவென்பதை ஆலோசித்துப்பார்க்கவேண்டும்.

இந்துவேதத்தின் முக்கிய தத்துவங்களடங்கிய நூலொன்றை வியாசரென்பவர் செய்தார், அதற்கு வியாசசூத்திரமென்கிற பெயருண்டாயிற்று. அதற்கு சங்கரர் உரை எழுதினார், அதற்கு வேதாந்தசூத்திரமென்கிற பெயருண்டாயிற்று. அந்த வியாச சூத்திரத்திற்கு ராமானுஜர், மத்வர், நீலகண்டசிவாச்சாரி முதலியவர்கள் தங்கள் தங்கள் மதங்களை நிலைநிறுத்த அதற்குத்தகுந்தவாறு உரை எழுதி சங்கரர் மதத்தை நாஸ்திகமென்றும், மாயவாதமென்றும், பிரசன்ன பௌத்தமென்றும் தூஷித்து எழுதினார்கள். அப்பொழுது அதற்கு பிர்மசூத்திரமென்கிற பெயரும் உண்டாயிற்று. பிர்மம் என்றால் பிராமணன், வேதம் என்று பெயராம். அந்த வியாசசூத்திரத்திற்கு ஒவ்வொரு ஆச்சாரிகளும் தங்கள் இஷ்டம்போல் ஒன்றுக்கொன்று மாறுபட்டு அர்த்தமெழுதிக் கொண்டார்கள். ஆனால் அந்த வியாச சூத்திரத்தில் அபசூத்திராதிகரணம் அதாவது சூத்திரனை புறக்கணித்த இடமென்கிற ஒருபாகமிருக்கிறது அந்த இடத்தில் மட்டும் எல்லா ஆசாரிகளும் ஒன்றுபோலவே சங்கரரைப்பின்பற்றி ஒரே மாதிரியாக உரை எழுதியிருக்கிறார்கள். வியாசசூத்திரத்தின் மற்ற பாகங்களுக்கெல்லாம் உபநிஷத்துக்களை ஆதாரமாகக்கொண்டு தங்கள் புத்தியில் எட்டிய வரையிலும் அவரவர்கள் இஷ்டம்போல்கடவுள் நிச்சயத்தையும் ஆத்மா நிர்ணயத்தையும் எழுதினார்கள். அபசூத்திரப்பிரகரணத்தில் ஸ்மிருதிகளை ஆதாரமாக வைத்துக்கொண்டு சிரவணம், அத்தியயனம், அர்த்த சிந்தனம் அதாவது, ஓதுதல், கேட்டல், பொருளை ஆராய்தல் முதலிய சூத்திரனுக்குத் தடுக்கப்பட்டிருப்பதையும் ஒருமுகப்பட்டு எழுதியிருக்கிறார்கள். இதைப்பார்த்தவர்களுக்குப் பிராமணர்கள் தங்களுக்குள் எத்தனை மதவிஷயத்தில் வேற்றுமையும், வெறுப்பும் உள்ளவர்களானாலும் மற்ற சமூகங்களை அடக்கி ஆளும் வகையில் ஒருமுகப்பட்டு வேலை செய்கிறவர்களென்பது வெளிப்படும். அதுபோலவே தான் இப்பொழுதிருக்கும் பார்ப்பார்களும் தங்கள் தங்கள் மதவிஷயத்தில் வேற்றுமையும் வெறுப்பு மிகுந்தாலும் மற்றவர்களை அடக்கி ஆதிக்கம் செலுத்தும் வகையில் ஒன்று சேர்ந்து சங்கராச்சாரியை வரவேற்பதும் பிரசங்க முன்னணியில் வைணவப் பார்ப்பார்களிருப்பதும் அவர்கள் திருப்திப் படச்சங்கராச்சாரிகள் கீதையைப்பிரசங்கம் செய்வதும் நடந்துவருகிறது. இது வரையிலும் சங்கராச்சாரியை வைணவப் பார்ப்பார்கள் வரவேற்றதும் சங்கராச்சாரி பகவத்கீதைப் பிரசங்கம் செய்ததும் உண்டா? கும்பகோணச் சங்கராச்சாரியானாலும் பூரி சங்கச்சாரியானாலும் தென் தேசத்துப் பார்ப்பார்கள் தான் அவர்கள். ஆங்கிலேயப்பிரசங்கமானாலும் அந்த ஸ்மிருதியின் கொடுங்கோல் சிம்மாசனத்தில் ஆசனமிட்டு தங்கள் சமூகத்தின் ஆதிக்கத்தை நிலை நிறுத்தி வருகிறார்களென்பதை உணருங்கள்.

இனி பூரி சங்கராச்சாரியின் பிரசங்கத்தைக் கவனிப்போம். சமஸ்கிருத பாஷையில் 15 நிமிஷம் பேசினார். பின் சபையிலிருந்தவர்கள் ஆங்கிலத்தில் பேசும் படியாக சீட்டு அனுப்பினார்கள். விஷத்தை விஷத்தைக் கொண்டே தீர்ப்பதுபோல் ஆங்கிலேய பாஷையினால் ஏற்பட்ட தோஷபுத்தியை அந்த பாஷையினாலேயே தீர்க்கவேண்டியிருக்கிறது. என்றுகூறி ஆங்கிலத்தில் பேசினார்.

இவர் தென்தேசத்துப்பார்ப்பார், ஆங்கிலமும் தமிழும் படித்தவர், சபையிலிருந்தவர்களில் சிலருக்குக் கூட சமஸ்கிருதம் தெரியாது என்பது அவருக்கும் தெரியும். அப்படியிருந்தும் முதலில் சமஸ்கிருதத்தில் ஏன் பேசினார் என்றால் ஆங்கிலேய பாஷை, அந்நியபாஷை, ம்லேச்ச பாஷை அதை பிராமணன் படிக்கக் கூடாது, படித்தால்பிரஷ்டன், அறிவும் ஆச்சாரியனோ பிரசங்கம் செய்தால் அறிவும் அதிக பிரஷ்டு ஆச்சாரி ஸ்தானமே அபத்தமாய்விடும், அதை மறைத்து மற்றவர்களை ஏமாற்றவே முதலில் சமஸ்கிருதத்தில் பேசி சபைகேட்டுக்கொண்டமாதிரியாகக்காட்டி ஆங்கிலத்திற்கு தோஷம் கற்பிப்பதாகவும் சொல்லி ஆங்கிலத்தில் பேசினார். ஆங்கிலத்தில் பேசச்சொல்லுவார்கள் என்பதும் அவருக்குத்தெரியும், அந்தஜாடை தெரிந்தவர்களும் அந்த சபையிலுண்டு.

விஷத்தை விஷத்தைக் கொண்டே தீர்ப்பதுபோல ஆங்கிலேய பாஷையினால் ஏற்பட்ட தோஷபுத்தியை அந்த பாஷையாலே தீர்க்க வேண்டுமென்று சொல்லி ஆங்கிலத்தில் பிரசங்கம் செய்தார். இப்பொழுது ஆங்கிலத்தால் ஏற்பட்ட விஷமென்ன? அதனால் ஏற்பட்ட தோஷபுத்திஎன்ன? என்பதைத்தெரிவோம். இப்பொழுது இந்து சமயத்திலுள்ள தீண்டாமை போதல் எல்லா இந்துக்களுக்கும் ஆலய தெரிசனம் வேண்டும் என்று கேட்பதும் விரும்புவதுமாகும். இவையிரண்டும் சங்கராச்சாரியார் அபிப்பிராயப்படி ஆங்கிலேய பாஷையின் விஷமென்றும், ஆங்கிலேய பாஷையால் ஏற்பட்ட தோஷபுத்தியென்றும் சொல்லுகிறார். தீண்டாமை போகவேண்டுமென்கிற ஆங்கிலேய தோஷ புத்தியைப்போக்கவும் தீண்டாமை இருக்கவேண்டுமென்கிற சமஸ்கிருத தோஷமில்லாத புத்தியை நிலைநிறுத்தவும் ஆங்கிலேயத்திலே பிரசங்கமும் செய்கிறார். அதற்காகவே சென்னையிலும் தங்கியிருக்கிறார்.

வக்கீல் வேலையின செல்வாக்கு, உத்தியோக அதிகாரம். துபாஷி வேலையால் வியாபாரிகளிடமுள்ள சம்பந்தம் முதலியவைகளால் சங்கராச்சாரிகளுக்கு ஏற்பட்ட பாத காணிக்கைகள், பங்களா வாசங்கள், பிராமண போஜனம், மற்ற சாமக்கிரிகைகள், சுகங்கள் முதலியவைகள் ஆங்கில பாஷையினால் ஏற்பட்ட தோஷ புத்தி என்று போன சங்கராச்சாரியும் வந்த பூரிச்சங்கராச்சாரியும்சொல்லவில்லை, மறுக்கவில்லை. ஆங்கில பாஷையால் ஏற்பட்ட விஷமென்று சமஸ்கிருத மருந்தைக் குடிக்கவுமில்லை, குடிக்கச் சொல்லவுமில்லை. இப்பொழுது பார்ப்பார்களுக்குண்டாயிருக்கும் சுகபோகங்கள் ஆங்கிலேய பாஷையால் ஏற்பட்ட தோஷ புத்தி எனவும், விஷமெனவும் தள்ளி விட பூரி சங்கராச்சாரி உபதேசிக்கவுமில்லை. போன சங்கராச்சாரி வந்திருக்கும் சங்கராச்சாரி, மருந்து சன்

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க.

# தோழர் காந்தியின் “கோயில் பிரவேசத்தின் உண்மைத்தோற்றம்”.

## வயிற்றுக்கில்லாதவர்களின் வருங்கால சகாப்தத்தை நசுக்குவதே காந்தீயம்.

(சித்தக்காடு கே. ராமையா)

தோழர் காந்தி அவர்களின் ஆலயப்பிரவேச கிளர்ச்சியில் மயங்கும் தாழ்த்தப்பட்டவர்களுக்கும், ஏனையோர்களுக்கும், சமர்ப்பித்துக்கொள்கிற விண்ணப்பம்.

“ஜனசமுதாயத்துக்கு எவ்விதபிரயோஜனமுமில்லாமல் கோயிலில் இருக்கும் தெய்வங்களை உடைப்பதில் நான் ஒரு முஸ்லீமாகவே இருப்பேன்.” “எம். கே. காந்தி”

தோழர், காந்தி அவர்கள் 1927ம் வருஷத்தில் தமிழ்நாட்டு சுற்றுப்பிரயாணத்தின்போது கும்பகோணத்தில் ஒரு பிரசங்கம் செய்தார். அப்பிரசங்கத்தில் ஆலயம் தொழுவது இந்துமதத்தை புனிதமாக்கும் ஒரு அம்சமென்றோ! அல்லது தாழ்த்தப்பட்டவர்கள் கோயிலுக்குள் போவது ஆத்மார்த்திகமென்றோ! ஞானஜோதியென்றோ! சொல்லவேயில்லை. கோயில்கள் எல்லாம் விபசாரவிடுதி என்று அவருடைய திருவாயால் சொல்லிப் வருவதுமே ஆகிறது.

முன்னொரு தடவை வடநாட்டில் கோயில்பிரவேசசத்தியாக்கிரகம்ஆரம்பித்தகாலையில் கடவுள்எல்லாருடைய மனதிலுமிருக்கிறார். சத்தியாக்கிரகம் வேண்டியதில்லையென்றார்.

ஆனால், அதேகாந்திஅவர்கள் இன்றுசொல்வதென்ன? —காலஞ்சென்ற இந்து மதசீர்திருத்தக்காரரான ராமானுஜாசாரியார் தாழ்த்தப்பட்டவர்களுக்கு “திருக்குலத்தார” என்று திருநாமம் கொடுத்தது மாதிரி நமது காந்தியார் “ஹரிஜனங்கள்”என்றஒருபெயரைக் கொடுத்து சொல்லுகிறார்.

“ஹரி ஜனங்களுக்கு ஆலயப்பிரவேசமென்ற புதிய நம்பிக்கையையும், புதியதோர் வாழ்வையும் அளிப்பதாகும். இக்காரியத்தை கேவலம் பொருளாதார கல்வி முன்னேற்றமென்பது செய்துவிட முடியாது. எப்படி அருணோதயத்துக்குப்பின் சூரியோதயமாகிறதோ அதேபோன்று ஆலயப்பிரவேச உரிமையை ஹரிஜனங்கள் பெற்றுவிடில் இதர பொருளாதார அபிவிர்த்திகள் தானாகவே ஏற்பட்டுவிடும். ஹரிஜனங்களை ஆலயத்துக்குள் விடுவது, இந்துமதத்தை புனிதமாக்குவது ஹரிஜனங்கள் ஆலயதரிசனம் செய்வது அவர்களுடைய குடிசைக்கெல்லாம எட்டிவிடும். ஆனால் ஹரிஜனங்களின் பொருளாதார கல்விமுன்னேற்றம், அதைபெற்றவர்களிடம் மட்டும்தான் எட்டும் என்பதே!”

உலகம் போற்றும் உத்தமர், மகாத்மா, அவதாரபுருஷர், யோகி, ஞானி தபசி போன்ற புராதீன பெயர்களுக்குரிய தோழர் காந்தி அவர்களுக்குகடந்த 10வருஷத்திலும், அதற்குமுனும் விபசார விடுதியாகவும், அதில சத்தியாக்கிரகம் வேண்டியதில்லை என்றும், அத்தெய்வங்களை உடைப்பதற்கு ஒரு முஸ்லீமாகவும் [illegible] [illegible] பூர்த்திகளான தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றத் [illegible] நாட்டம் [illegible] காலையில்

அதே ஆலயமெல்லாம் இந்து மதத்தை புனிதமாக்கும் ஸ்தாபனமாகவும், தாழ்த்தப்பட்டவர்கள் அதில் போய் தரிசனைபுரிந்து விட்டால் அவர்களுடைய பொருளாதார கல்விமுன்னேற்றமெல்லாம் கேவலமாகவும் தானாகவே வந்துவிடுமென்றும், நாக்கில் நரம்பில்லாமல் சொல்வதின் ரகசியமென்ன? கல்வி பொருளாதாரத்தைப்பொறுத்து புராதீன பெரியவர்கள் அதாவது காந்தியைப்போல் உள்ள மகாத்மாக்கள், யோகிகள், ஞானிகள் அவதாரபுருஷர்கள், நாயன்மார்கள், ஆழ்வார்கள், போன்றவர்கள் கடவுளைக்கண்டதாகச் சொல்லி என்னசொன்னார்கள் என்பதை ஆராய்ந்தால் அவ்வழியில்வந்த காந்திசொல்லியதைப்பற்றி ஆச்சரியப்பட வேண்டுவதில்லை. அக்காலத்தியவர் சொன்னதாவது

திருப்பணி செய்வதை (கோயில் கட்டுவதை) மறுமையில் அதாவது பரலோகத்தில் பேரின்பத்தை கொடுக்கக்கூடியபதி தருமமென்று சொல்லிவிட்டு கல்விதருமத்தை இம்மையில் அதாவதுஇந்தஉலகத்தில் அனுபவிக்கக்கூடிய பதார்த்தமாகவும், சொல்லி அர்த்தமற்றபரலோகம் ஒன்று இருப்பதாகவும், அதில் பேரின்பம் அனுபவிப்பதாகவும் சொல்லி கல்வி அபிவிர்த்தியில் மண் அள்ளிப்போட்டார்கள். கல்வினால் பணிசெய்தோர் கைலை விட்டகலா என்பதும்இதுபற்றிசொல்லியதுதான். இக்காரியத்தைசெய்து முடிக்க அக்காலத்து பெரியவர்கள் கடவுள் பெயரை சொல்லிக்கொண்டு கௌபீனதாரியாகவும், நிர்வாணதாரியுமாகவே இருந்து பூர்த்தி செய்ததோடு தங்கள் கௌபீன கோலத்தையும், நிர்வாணகோலத்தையும், தெய்வாம்சமுடையதாகவே அக்காலத்து அரசன் முதல்ஆண்டிஈறாகளைக்கும் படியும்செய்துகொண்டார்கள். அதேபோல்நமது காந்தியும் அரை வேஷ்டியுடன் அவர்கள்செய்து போனகாரியத்தை புனருத்தாரணம் செய்வதற்கு கல்வி பொருளாதாரம் எல்லாம் கேவலமாகவும், ஆலயதரிசனம்ஆத்மார்திகமாயும், ஞானஜோதியாயும் பொதுமக்களிடத்திலும் அதிலும்தாழ்த்தப்பட்டவர்களிடத்திலும் புரியாத வார்த்தைகளை சொல்லி தன்னை பொறுத்தவரை தேவதூதனாகவும், அரைவேஷ்டியை அவதார மகிமையாயும், செய்துகொள்வதற்குரிய வழிகளை பின்பற்றி வருகிறார். இது ஒருவாறு இருக்கட்டும் தோழர் காந்தியார் தன்வாழ்க்கையிலேயே ஒரு கடவுளை பிடித்துக்கொண்டும், வர்ணாசிரமதர்மத்தை பிடித்துக்கொண்டும் தாழ்த்தப்பட்டவர்களை கல்வி, பொருளாதாரம் அரசியல் போன்ற துறைகளில் மேலெழ வொட்டாமல் மகத்தான சூழ்ச்சி செய்து வந்திருக்கிறார். காந்தியாரின் வருணாச்சிரம தர்மப்படி தாழ்த்தப்பட்ட வர்கள் எல்லாம் க்ஷத்திரிய தர்மத்துக்குரிய கல்வி பொருளாதார அரசியல் முன்னேற்றத்துக்குரியவர்கள் அல்ல. அவருடைய சித்தாந்தப்படி செருப்பு தைப்பவன் மகன், செருப்பு தைத்துக் கொண்டிருக்க வேண்டும், அடிமைவேலை செய்பவன மகன் அடிமை வேலை செய்து கொண்டிருக்க வேண்டும். அரசன் மகன் அரசனாகவே இருக்க வேண்டும், ஆண்டி மகன் ஆண்டியாகவே இருக்க வேண்டும், லக்ஷாதிபதி மகன்லக்ஷாதிபதியாகவே இருக்க வேண்டும், பிக்ஷாதிபதி மகன் பிக்ஷாதிபதியாகவே இருக்க வேண்டும், இப்படியே அவனுடைய பிறவியின் பயனை அடைந்தே தீர வேண்டும். இக்கொள்கையை கொண்ட தோழர் காந்தி அவர்களுக்கு தாழ்த்தப்பட்ட வர்கள் அரசியலில் பங்கு கொண்டு கல்வி பொருளாதாரத்தில் அபிவிருத்தி அடைய எப்படித்தான் மனம் சகித்துக் கொண்டிருக்க முடியும்? ஆகவே தாழ்த்தப்பட்டவர்கள் 10 வருஷத்துக்கு இப்பால் அடைந்து வரும் மாறுதலைக்கண்ட காந்தியார் அவைகளை அழித்து விடுவதற்கு சமய சந்தர்ப்பத்துக்கேற்றபடி நடந்து வந்தேயிருக்கிறார். லண்டனில் நடந்த இரண்டாவது வட்ட மேஜைமகாநாட்டுக்குப் போவதில்லை யென்று ஒத்திவைத்த பயணத்தை கடவுள் கட்டளையிட்டதாக புறப்பட்டு போனதுடன் தானே கோடானு கோடி தாழ்த்தப்பட்ட மக்களுக்கும் பிரதிநிதி என்று அவர்கள் வாயில் மண்ணை அள்ளிப் போடுவதற்கும் மகத்தான சூழ்ச்சிகளை அங்கு செய்தும் பார்த்தார். ஆனால் அன்னாருடைய பகீரதப் பிரயத்தனமெல்லாம், தோழர் அம்பேட்கார் அவர்களின் இடைவிடா உழைப்பால் ஒருவாறு செத்து மடிந்தது.

பிறகு, தாழ்த்தப்பட்டவர்களின் சமூகத்தின் வீதாசாரப்படி அரசியல் துறையில் அங்கம் பெற எட்டில் ஒரு பங்கு வீதத்தை சர்க்காரால் தனித்தொகுதி என்ற பெயரால் அளித்தார்கள். இதைக்கண்டதும் தோழர் காந்தியார் காலச்சக்கிர வேகத்தில் செத்துமடியும் வருணாச்சிரமம், பிறவிப்பயன் இவைகளைக் காப்பாற்றுவான் வேண்டி பட்டினி கிடப்பதென்ற ஓர் விஷமத்தை செய்ய ஆரம்பித்து தாழ்த்தப்பட்டவர்கள் தலையில் கை வைக்கப் பிரயத்தனப்பட்டார். இராப் பகல் பட்டினி கிடக்கும் தாழ்தப்பட்ட உழைப்பாளிகள், அதாவது பிறவியின் பயனாகவும், போன ஜென்மத்தில் செய்த பாவத்தாலும், கஷ்டப்படுவதற்கென்றே பிறந்திருப்பவர்கள் வரப்போகும் அரசியலில்க்ஷத்திரிய தர்மத்துக்குரிய எட்டில் ஒரு வீதத்தை அடைவதென்றால் எப்படித்தான் தோழர் காந்தி மனம் சகிப்பார். ஆகவே தனித்தொகுதி கொடுப்பதால் வகுப்புத்துவேஷம் மேலிடுவதாக ஒரு காரணம் சொல்லி பட்டினி கிடக்க ஆரம்பித்தாலும், புனா ஒப்பந்தம் என்பதின் பெயரால் காந்தியாரின் உயிருக்கு அம்பேத்கார் அபயமளித்தாரென்றாலும் காந்தியாரின் எண்ணம் பூரணமடையவில்லை. ஆகவே தீண்டாமையைஒழிக்கப்போவதாய் தனக்கே நம்பிக்கையில்லாத ஆலயங்களை பிடித்துக்கொண்டு அர்த்தமில்லாமல் கண்டதைச் சொல்லி தாழ்த்தப்பட்டவர்களைக் கல்வி பொருளாதாரத்தில் கை வைக்கும் முறையில் நெருங்கி விட்டார். பிரஸ்தாப கிளர்ச்சி அவசியமற்றதென்பதை அம்பேத்கார் அவர்கள் மூன்றாவது மகாநாட்டுக்கு பிரயாணமாகும் சமயம் குறிப்பிட்டிருந்தும் தான் தோன்றியாய் செய்து வருகிறார். வாஸ்தவத்தில் தீண்டாமை ஒழிப்பதென்றால் அது கோயில் பிரவேசம் ஒன்றனால் தான முடியுமா? சமயத்துக்குத் தகுந்தபடி பேசுவதும், ஒரு குறிப்பிட்ட லட்சியத்தில் நம்பிக்கையும், நம்பிக்கையில்லாத இரண்டாட்டில் பால் குடிக்கும் ஆட்டுக் குட்டி சமாசாரமாயிருந்து கொண்டிருக்கும் நமது காந்தியை, அவருடைய பெயருக்காகவும், உடைக்காகவும், அவர் பிடித்திருக்கும் கடவுளுக்காகவும், பொருத்து பகுத்தறிவுள்ள உலகம் எப்படி சகித்துக் கொண்டிருக்க முடியும். பொதுவாகவே இந்திய நாட்டைப் பிடித்திருக்கும் தீண்டாமை என்னும், க்ஷயரோகத்தை ஒழிப்பதற்கு அவசியமானது கேவலம் ஆலயப்பிரவேசமே அல்ல. இது தோழர் காந்தியின் சொந்த ஹோதாவில் 10 வருஷத்துக்கு முன்னும், பின்பும் ஒப்புக்கொண்டிருப்பதை மேலே எடுத்துச் சொன்னோம். ஆனால் இதுகாலை ஆலயப்பிரவேசம் என்பதின் பெயரால் காந்தி அவர்கள் ஆரம்பித்திருக்கும் உண்மைத் தோற்றம் “தாழ்த்தப்பட்டவர்களின்

(தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க)

# "மாமாங்கத்தின் அற்புதம்"

(சித்திரபுத்திரன்)

புராணமரியாதைக்காரன் கேள்வி: ஐயா, சுயமரியாதைக்காரரே கும்பகோண மாமாங்க குளத்தில் ஒரு அற்புதம் நடக்கின்றதே அதற்கு சமாதானம் சொல்லும் பார்ப்போம்.

சுயமரியாதைக்காரன் பதில்:— என்ன அற்புதமய்யா?

பு-ம:—மாமாங்கக்குளம் எவ்வளவு சேராய் இருந்தபோதிலும், கூழாயிருந்தபோதிலும் அதில் அவ்வளவு ஜனங்கள் குளிக்கிறார்களே அந்த குளத்துத்தண்ணீர் ஏன் குறைவதில்லை இதற்கு பதில் சொல்பார்ப்போம்.

சு-ம:—இது ஒரு நல்ல புத்திசாலித்தனமான கேள்விதான், இதன் காரணம் சொல்லுகிறேன், சற்று தயவு செய்து கேள்க்கவேண்டும். அதாவது மாமாங்க குளத்தில் உள்ள தண்ணீரையெல்லாம் முனிசிபாலிட்டியார் இரைத்து விடுவார்கள். பிறகு ஒரு இரண்டு அடி உயரத்தண்ணீர் மாத்திரம் அதில் இருக்கும். அடியில் சிறிது மணலும் கொட்டி வைப்பார்கள். ஜனங்கள் தண்ணீரில் இறங்கியவுடன் மணல், சேரு, ஜனங்களின் அழுக்கு ஆகிய எல்லாம் சேர்ந்து குழம்புமாதிரி அழுக்கு நிரமாக ஆகிவிடும். குளிக்கிற ஜனங்களுடைய உடம்பு, துணிகள் எல்லாம் சேற்றுவேஷக்காரன்போல் கருப்பாக ஆகிவிடும். இந்த நிலையில் குளிக்கும் ஒவ்வொரு நபரும் கொஞ்சம் கொஞ்சம் தண்ணீரை தனது வேஷ்டி நனையும் அளவுக்கு குளத்தைவிட்டு வெளியில் எடுத்துக்கொண்டு போகிறான் என்பது வாஸ்த்தவம்தான். ஆனால் அதற்கு பதிலாக ஒவ்வொரு நபரும் ஆண்பெண் அடங்கலும் அக்குளத்தில் கொஞ்சம் கொஞ்சம் தண்ணீர் விட்டு விடுத்தான் போகிறார்கள்.

பு-ம:— அதெப்படி தண்ணீர் விட்டுவிட்டுப்போகிறார்கள்? நமக்கு அது புரியவில்லையே அவர்களிடம் தண்ணீர் ஏது?

சு-ம:—இதுவும் நல்ல கேள்விதான், பதில் சொல்லுகிறேன். மாமாங்க காலத்தில் கூட்டம் அதிகம். தெருக்களில் எங்கும் பக்கத்தில் மறைவே இருக்காது. ஒரு மனிதன் வீட்டைவிட்டுப்புறப்பட்டால் மாமாங்க குளத்துக்கு போவதற்குள் நசுங்கி பஜ்ஜியாய் விடுவான். இதன் மத்தியில் அவன் மூத்திரம் பெய்ய வேண்டுமானால் வழியில் காலோடு பெய்ந்துகொள்ளவேண்டும் அல்லது குளத்துக்கே போய் ஆகவேண்டும். ஆகவே யாரும் காலோடு பெய்ந்துகொள்ள சம்மதிக்கமாட்டார்கள் எப்படியாவது அடக்கி, அடக்கி அவசரமாய் குளத்துக்குப்போகும்வரை அடக்கிக்கொண்டுதான்போவார்கள். குளத்தில் இறங்கி துணியை நனைத்துக்கொண்டவுடன் இவர்களை அறியாமலே மூத்திரம் வந்துவிடும். அந்தமூத்திரம் மாமாங்க தீர்த்தத்துடன் தீர்த்தமாய் இரண்டறக்கலந்துவிடும். அப்போது அவர்களால் செலவாகும் தண்ணீர் கிட்டதட்ட சரிசமமாகவே பர்த்தியாகிவிடும். ஆகவே, வரவும், செலவும் சரியாகிவிடும்.

பு-ம;—அந்தப்படி அந்தக்குளத்தில் மூத்திரம் சேருமானால் தண்ணீரில் ஒருவித நாற்றமிருக்காதா?

சு-ம:—நாற்றமிருக்கத்தான் செய்யும். தீர்த்தத்தண்ணீரை முகந்து பார்ப்பது மகா பாவம் என்று அவர்களுக்கு சொல்லி வைக்கப்பட்டிருக்கின்றதல்லவா? ஆதலால் யாரும் முகந்து பார்க்கமாட்டார்கள். ருசியும் பார்க்கமாட்டார்கள். ஏனென்றால் அது அவ்வளவு அழுக்காகவும், குளம்பாகவும் இருக்கும். அன்றியும் இன்னம் ஒரு விஷயம் என்னவென்றால் முனிசிபாலிட்டியார் குளத்துத் தண்ணீரில் கெந்தகப்பொடிபோட்டு வைத்திருக்கிறார்கள் ஆதலால் மூத்திரநாற்றம் எது? கந்தக நாற்றம் எது? என்று சுலபத்தில் கண்டு பிடிக்கவும் முடியாது. ஆகவே சிலவுக்கும், வரவுக்கும் தானாகவே சரியாய் போய் விடும். இதற்குக் கடவுள் அற்புதம் ஒன்றும் தேவையில்லை.

ஃ ஃ

## எதை நம்புவது!

தீண்டாமையை ஒழிக்கப்பட்டினி கிடக்கும்படி கடவுள் கட்டளை இட்டிருப்பதாக காந்தி சொல்லுகிறார்.

தீண்டாமையை நிலை நிறுத்துவதற்காக யானை குதிரைகளுடன் பல்லக்கு சவாரி செய்யும்படி கடவுள் கட்டளையிட்டிருப்பதாக சங்கராச்சாரியார் சொல்லுகிறார்.

அவனன்றி ஓரணுவும் அசையாது ஆதலால் மேற்கண்ட இரண்டு காரியங்களும் கடவுள் திருவிளையாடல் என்று கடவுள் பக்தர்களான ஆஸ்திகர்கள் சொல்லுகிறார்கள்.

இந்த மூன்றும் முட்டாள் தனமும், சுயநலம் கொண்ட போக்கிரித்தனமும், பித்தலாட்டமும், ஏமாற்றலும் அல்லது இதில் ஏதாவது ஒன்றாகத்தான் இருக்கவேண்டுமே ஒழிய வேறில்லை என்றும் ரஷியர்கள் சொல்லுகிறார்கள்.

இவற்றுள் எதை நம்புவது. எதை நம்பினால் உண்மையில் தீண்டாமை ஒழியமுடியும்?

# ஆய்ந்து பார்?

(காந்தியோ பரம ஏழை சந்யாசி என்றமெட்டு)

(பாரதிதாஸன்)

1. சாந்தியால் உலகம் தழைப்பது நன்றா?
சமய பேதம் வளர்த்தே தளர்வது நன்றா?
மாந்தரிற் சாதி வகுப்பது சரியா?
மக்கள் ஒரே குலமாய் வாழ்வது சரியா?

2. வாய்ந்த போர்க்குறிபோல் மதக்குறி இனிதா?
மனமொழி மெய்ஒன்றி மகிழுதல் இனிதா?
ஆய்ந்துபார் நெஞ்சமே! அமைதிதான் சிறப்பா?
அண்டைவீட்டைப் பறிக்கும் சண்டைதான் சிறப்பா?

3. காணுமானிடரைக் கனம் செயல் முறையா?
கடவுள் எனும் மயக்கில் கவிழ்ப்பது முறையா?
மாணுறும் தன்னம்பிக்கை வளர்ப்பது நலமா?
வயப்படும் பக்தியினால் பயப்படல் நலமா?

4. வீணரைப் பணிவது மக்களின் கடனா?
மேவும் உழைப்பினிலே ஏவுதல் கடனா?
நாணு மூடவழக்கம் நாடுதல் பெரிதா?
நல்லறிவென்னும் வழிச் செல்லுதல் பெரிதா?

5. கோயிலுக் கென்று கொடுத்திடல் அறமா?
கோடி கொடுக்கும் கல்வி தேடிடல் அறமா?
வாயிலில் வறியரை வளர்த்திடல் அன்போ?
மடத்தில் வீணிற்பொருளைக் கொடுத்திடல் அன்போ?

6. நாயினும் கடையாய் நலிவது மேலா?
நல்ல கூட்டுத்தொழில்கள் நாட்டிடல் மேலா?
ஓய் வறியர் உறங்க இடந்தரல் உயர்வா?
ஊரை வளைக்கும் குருமார் செயல் உயர்வா?

7. மாதர் தம் உரிமை மறுப்பது மாண்பா?
மாதர் முன்னேற்றத்தால் மகிழ்வது மாண்பா?
மேநினி துயர்பட விரும்புதல் இதமா?
விதவைக்கு மறுமணம் உதவுதல் இதமா?

8. கோதையர் காதல் மணம் கொள்வது சீரோ?
குழந்தைக்கு மணம் செய்து கொல்வது சீரோ?
போதனையாற் பெண்கள் பொது வளல் கனமோ?
பொட்டுக் கட்டும் வழக்கம் போக்குதல் கனமோ?

9. பாழ்படும் பழமை சூழ்வது திறமா?
பகுத்தறிவால் நலம் வகுப்பது திறமா?
தாழ்பவர் தம்மைத் தாழ்த்துதல் சால்போ?
தனம் காப்பவர் தங்கள் இனம் காத்தல் சால்போ?

10. ஆழ்வுறும் ஆத்திகம் வைதிகம் சுகமா?
அகிலமேற் சமதர்மம் அமைப்பது சுகமா?
சூழும் நற் பேதம் தொடர்வது வாழ்வோ?
சுயமரியாதையால் உயர்வது வாழ்வோ?

——:0:——

## நன்றி.

எமது திருமணம் பற்றி எமக்கு ஆசி கூறிய பல தோழர்கள் தந்தி மூலமாகவும், கடித மூலமாகவும் அறிவித்திருக்கின்றார்கள்.

அவர்வளுக்குத் தனித் தனியே நன்றி கூற இயலாமை பற்றி வருந்துகின்றோம்.

ஆகவே இச்சிற்றுரையையே எமது நன்றியாக ஏற்றுக் கொள்ளுமாறு அவர்களை வேண்டுகின்றோம். என திருவாரூர் டி. என். இராமன், கனகாம் புஜம் எழுதுகிறார்கள்.

## தஞ்சை ஜில்லா போர்டு தலைவர் தேர்தல்.

தஞ்சை ஜில்லா போர்டிற்கு தலைவராக தோழர் நாடிமுத்துபிள்ளை அவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டார்.

---

## தஞ்சை தாலூகா போர்டு தலைவர் தேர்தல்.

தஞ்சை தாலூகாபோர்டுக்கு தலைவராக டாக்டர் தாஜுடீன் எம. எல். சி. தேர்ந்தெடுக்கப்பட்டார்.

# மாமாங்கத்தை மதியால் மதித்துப் பாருங்கள்.

(கைவல்யம் எழுதுவது.)

விசாரிக்கவல்லது புத்தி, புத்தியெல்லாருக்கும் உண்டு, புத்தியில்லையென்று நினைத்துக் கொள்ளுகிறவர்களில்லை. அப்படியிருந்தாலும் தன்னிடமுள்ள புத்தி ஆலோசித்துப்பார்ப்பவர்க்கே பலனளிப்பதாகும். ஆலோசித்துப்பார்ப்பது அறிவென்றபடி நீங்கள் ஆலோசித்துப் பார்க்கவேண்டிய ஒரு விஷயம் இப்பொழுது உங்களுக்கு ஏற்பட்டிருக்கிறது அதாவது:—

## கும்பகோணத்து மாமாங்கம்.

மாமாங்கமென்றால் என்ன? அதற்குப் போவதால் உண்டாகும் நன்மையென்ன? தீமையென்ன? போனால் பாவம் போகுமா? போகாதா? பாவம் போகுமென்று சொல்லுவது மெய்யா? பொய்யா? அதற்குச் சொல்லப்படும் காரணங்கள் சரியா? தப்பா? என்கிறவைகளை ஆலோசித்துப் பார்ப்பதேயாகும்.

12-வருடத்திற்கு ஒருதரம் மாசிமக நட்சத்திரத்தில் கும்பகோணத்து ஒரு குளத்தில் குளிப்பது மாமாங்கம். குளித்தால் எல்லாபாவமும் போகுமென்பது ஐதிகம்.

## அதற்கு ஆதாரமான புராணக்கதை.

கங்கை, யமுனை, சிந்து, கோதாவரி, காவேரி, துங்கபத்திரா, தாமிரபரணி நர்மதை, சரஸ்வதி முதலிய ஒன்பது நதிகளிலும் பாவிகளான இந்துக்கள் குளித்துக்கழுவிவிட்டுப்போன பாவத்தை அந்நதிகள் தாங்கமுடியாமல் பெண்வேஷமெடுத்து இமயமலைக்குப்போய் சிவபெருமானைக்கண்டு சுவாமி, பாவிகளான இந்துக்கள் எங்களிடம் வந்து குளித்துக்கழுவிவிட்டுப்போன பாவமூட்டைகளைச் சுமக்கமுடியாமல் கஷ்டப்படுகிறோம். அதைத்தீர்க்கவேண்டுமென்று வணங்கினார்கள். அதற்குச் சிவபெருமான் கும்பகோணத்தில் ஒரு குளமிருக்கிறது மாசிமகத்தன்று அதில் குளித்தால் உங்கள் பாவமெல்லாம் போகும், மாசிமகத்தன்று நான் கும்பகோணத்திற்கு கும்பேஸ்வரராகப்போவேன். அப்பொழுது நீங்களும் அங்கே வாருங்கள், அதுவரையிலும் காசியிலிருங்கள் என்று சொன்னார். அதுபோலவே காசியிலிருந்தார்கள். மாசிமகத்தன்று கும்பகோணம்வந்து சிவபெருமானும் நதியான ஒன்பது பெண்களும் அந்தக்குளத்தில் குளித்து கும்பகோணத்தில் கோவில் குடிகொண்டார்கள் என்பதே மாமாங்க புராணம்,

## நதி பெண்ணாகுமா?

நதி பெண்ணாகுமா? நதியில் குளித்தால் பாவம் நதிக்குப்போகுமா? அதில் தங்குமா? நதி பெண்ருபமெடுக்குமா? அந்தப்பாவம் அப்பெண்களுக்குத் தலைச்சுமையாகுமா? அந்தப் பெண்கள் இமயகிரிக்குப்போய் சிவபெருமானைக்கண்டால் அப்பாவம் அங்கே தொலையவேண்டாமா? பின்னும் அவர்கள் மேலிருந்துகொண்டு காசிக்குப்போயும் தொலையாமல் கும்பகோணக்குளத்தின் சேற்றில் புரண்டால் அப்பாவம் போகுமென்று சிவபெருமான் சொன்னது உண்மையாகவிருக்குமா? அவ்வளவு பாவங்களையும் குளம் எப்படி தாங்கிற்று? அது எங்கே போய் தொலைந்தது? சிவபெருமானின் சக்தி எங்கேவேண்டுமானாலும் செல்லுமென்று நினைத்துவிடலாமா? அந்தக் குளத்தில் யானைக்கால், காலரா, மலேரியா, முதலிய விஷக்கிருமிகளை, திரட்டியும், சிவபெருமானின் சக்தியும் அழிக்காமல் ஆஸ்பத்திரி கெந்தகமல்லவா அழிக்கிறது? கெந்தகத்திற்குண்டான சக்திகூட மாமாங்க தீர்த்தத்திற்கில்லாவிட்டால் மகாபாவங்களை நீக்குமென்பதற்கு நியாயமுண்டா? கும்பகோணத்துக்குளம் பாவத்தையெல்லாம் தீர்த்துவிடுமென்று சிவபெருமான் சொல்லியிருந்தால் அவனவன் செய்த பாவத்தை அவனவனே அநுபவிக்கவேண்டுமென்று சிவபெருமான் சொன்ன சாஸ்திரங்களெல்லாம் எதற்கு? நேரத்தையும், பணத்தையும் வீணாகச் செலவழித்து பெண்சாதி பிள்ளைகள் ரயிலிலும் கும்பகோணத்திலும் நெருக்குண்டு, இடியுண்டு, மிதியுண்டு, காலராவிற்கும், அம்மைக்கும் பயந்து அவதிப்பட்டு அலைவது சரியா? ஒரு சேற்றுத்தண்ணீரில் ஆணும், பெண்ணும் அநேகர் விழும்படி தூண்டுகிற குருட்டுத்தன்மையைப் பார்த்தீர்களா? அந்தச்சேற்றைக்கழுவ நல்லதண்ணீர்க்குப்போகும் நிலைமையைத்தெரிந்தீர்களா? நல்ல தண்ணீரில்லாவிட்டால் மாமாங்கத்தீர்த்தம் நாற்றமெடுக்கச்செய்துவிடுமென்பது அநுபோகமல்லவா? பெரும் செலவு செய்து புண்ணியம் தேடப்போகும் உங்கள் குருட்டுப்பக்தி எத்தனை அழகாகத் தோன்றியபோதிலும் தலையில்லாப்படிப்பு பக்தி, ஒழுக்கமுமின்றமில்லா [illegible] கோவிற்குருக்களுடைய காலில் பணத்தைப்போட்டு ஆணும் பெண்ணும் படும் கஷ்டத்திற்கும், அவமானத்திற்கும், உங்கள்பரிதாபகரமான பொறுமைக்கும் ஒரு அளவிருந்தாலும் அறிவு [illegible] இடங்கொள்ளுகிறதா? என்கிற விஷயங்களையெல்லாம் ஆலோசித்துப் பார்க்கவே சுயமரியாதை இயக்கம் சொல்லுகிறது.

## அறிக்கை.

(ம. சிங்காரவேலு B. A. B. L.)

அன்புமிகுந்தசமதர்மதோழர்காள்! ஈரோடு, விருதுநகர், மாயவரம், வேலூர், காஞ்சி முதலிய ஊர்களிலிருந்து, எனது தேகநிலைமையைக் கேட்க விரும்புகிறார்கள். கூடுமானால் குறிப்பிட்ட தேதிகளில் அந்தந்த இடங்களில் கூட்டங்களுக்கு வரும்படியும் கேட்டுக்கொள்ளுகிறார்கள். முதலில் என்னுடைய தேக நிலைமை படுக்கையுடன் கிடக்கவேண்டிய நிலைமையில் நிற்கிறது. கண்களைத்திறக்கமுடியவில்லை. உபாதைசற்றுகுறைந்து வருகிறது. குறைந்தது, இன்னும் 15நாள் வரை படுக்கையில் இருக்க வேண்டுமென்று என் டாக்டர்கள் கூறுகிறார்கள். எனக்கு வந்திருக்கும் நோயை அக்கி (Herpes) என்று கூறுகின்றனர். விசேஷமாக உழைப்பினால் வந்ததென்றும் அபிப்பிராயம். ஆனால், எனது தேகம், கிஞ்சித்தாகிலும் இடங்கொடுக்குமாயின், எனது தோழர்களுக்கு உழைக்காமல், யாருக்கு உபயோகப்பட இருக்கின்றது? மாமண்டூர் 1000குடிமக்கள் தோழர்களை, சந்திக்கமுடியவில்லையே என்ற மனக்கவலை இருந்துகொண்டு வாசிக்கின்றது என்செய்வேன்? யாரைத்திருப்தி செய்வது? டாக்டர் உத்திரவை மீறி ஒற்றைக்கண்ணைத்திறந்து, இந்த கஷ்டத்தை தெரிவித்துக்கொண்டாய் விட்டது இந்த மாதக்கடைசியில்தேகம் முற்றிலும் குணப்படுமென்று நம்புகிறேன். தோழர்களைப்போய் பார்க்கும்படி மனம் தூண்டுகிறது, ஆனால் என்செய்வேன், தேகம்என்னைவிடவில்லையே? சற்றுமன்னித்தருளவும்.

## பாராட்டுகிறோம்.

நாட்டுக்கோட்டை நகரத்து வகுப்பைச் சேர்ந்த காரைக்குடி, முத்துப்பட்டணம் தோழர் மெ. சு. தி. தண்ணீர்மலை அவர்கள் தமது வாழ்க்கைத் துணைவியான தோழர் சு. ப. திருநெல்லை அம்மையாருடன் 4-2-33தேதி ரஜூலா கப்பலில் மலேயா நாட்டுக்குச்சென்றிருக்கும் சேதியை மகிழ்ச்சியுடன் தெரிவிப்பதுடன் துணைவர்கள் இருவரையும் மனமாரப் பாராட்டுகின்றோம்.

நாட்டுக்கோட்டை நகரத்தார்களில் பலர் நீதி, தர்மம், என்பவைகளுக்கு எவ்விதப்பொருள் கொண்டிருப்பினும் தமது மனைவியாருடன் கப்பலேருவதோ, வெளிநாடுகளுக்குச் செல்வதோ மகா குற்றமான காரியம் என்று கருதிவருகிறார்கள். இப்படிப்பட்ட சமூகத்தில் தோழர்கள் தண்ணீர்மலையும், திருநெல்லையம்மையும் துணிந்து சமூகக்கட்டுப்பாடென்னும் மூடக்கட்டை உடைத்தெறிந்த தம் பதிகளாய் கப்பலேறியதை எவரும் [illegible]டாமலிருக்க முடியாது.

# திருவாங்கூரில் சமதர்ம முழக்கம்.

## தோழர்கள் ஈ. வெ. ராமசாமி கேளப்பன் விஜயம்.

திருவாங்கூரைச் சேர்ந்த பரூரை அடுத்துள்ள மூத்தகுன்னத்தில் பரூர் காஸ் மாபாலிட்டன் புரோக்ரிசிங் சங்கத்தாரால் 11, 12 தேதிகளில் ஒரு மகாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அம்மகாநாட்டில் முதல் நாள் தோழர் கே. கேளப்பன் பி. ஏ. அவர்களும், இரண்டாம் நாள் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களும் தலைமை வகிக்க ஏற்பாடுசெய்யப்பட்டிருந்ததுடன் மற்றும்பல பிரபல சமதர்ம வாதிகளும் வர ஏற்பாடு செய்து அவர்களை அழைத்திருந்தார்கள்.

மகாநாடு ஏற்பாடு செய்த ஊரில் உள்ள ஒரு கோவிலில் உற்சவம்நடக்கின்ற சமயமாயிருந்ததாலும், கூட்டம ஏராளமாக வந்துவிட்டதாலும், மகாநாட்டு கொட்டகையில் டிக்கட்டின் பேரிலேயே பிரவேசம் செய்யப்பட்டிருந்தது என்றாலும் இரண்டு நாளும் கொட்டகை 2000 ஜனங்களுக்கு குறையாமல் நிறைந்து இருந்தது. பெண்களும் சுமார் 400, 500 பேர்கள் போல் காணப்பட்டார்கள்.

### 11—2—33 கேளப்பன்.

11-2-33-ந்தேதி பகல் 12-மணிக்கு தோழர்கள். ஈ. வெ. ராமசாமியும், கேளப்பனும், கொச்சியைச சேர்ந்த திருச்சூரில் இருந்து மோட்டாரில் ரோட்டு வழியாக சுமார் 20-மைலும், பிறகு அங்கிருந்து ஸ்டீம் போட்டு வழியாக சுமார் 7-மைலும், பிரயாணமாய் அழைத்துச்செல்லப்பட்டவுடன், மூத்தகுன்னம் போட்டுக்கடவில் ஆடம்பரமாய் வரவேற்கப்பட்டு வாத்தியஙகளுடன் தோழர். பி. கே. குமரன் எம். ஏ., பி. எல்., அவர்களது மாளிகைக்கு அழைத்துச்செல்லப்பட்டு, அங்கிருந்து 3-மணிக்கு பெருங்கூட்டத்துடன் பாண்டு வாத்தியங்களுடன் மகாநாட்டுப் பந்தலுக்கு அழைததுச் செல்லப் பட்டார்கள்.

கூட்டம்துவக்கப்பட்டதும் காரியதரிசி மாதவன் அவர்களால் தோழர் கேளப்பன் அவர்களுக்கு மலையாளத்தில் ஒரு வரவேற்புபபத்திரம் வாசித்துக் கொடுக்கப்பட்டது. பிறகு மகாநாட்டுக்கு கேளப்பன் அக்கிராசனம் வகித்ததும் முகவுரையாக தீண்டாமை கொடுமையைப்பற்றி பேசினார்.

அதன் பிறகு தோழர் எம். பி. பால் எம். ஏ., அவர்களும் பேசினார். தோழர். கே. எம. மகமது இப்ராம் அவர்கள் "அபிநவரஷியா" என்பதைப்பற்றி ஒரு நீண்ட பிரசங்கம் செய்தார். அதில் ரஷியா பொதுவுடமைக்கொள்கைகளை விளக்கியும், பலவற்றை ஆதரித்தும் பேசினார். பிறகு காயஙகுளம தோழர். கே. கோமதி அம்மாள் அவர்கள ஈழவர்கள் கோவிலில் தீண்டாதாரை அனுமதிக்காதது நாராயண குருசுவாமியை அவமதித்து அவருக்கு கெட்ட பேர் விளைவிப்பதாகும் என்று உருக்கமாக பேசினார்.

பிறகு ஈ. வெ. ராமசாமி அவர்கள் நாளையக்கூட்டத்தில் இன்ன இன்ன விஷயங்களைப்பற்றிதான் பேசக்கூடும் என்றும், அதைப்பற்றி அதிருப்தி இருக்கிறவர்கள் தன் மீது மன வருத்தப்படக்கூடாதென்றும் அதை இப்போதே சொல்லி விடுகிறேன் என்றும் சில புரட்சி விஷயங்களை பரிகாசமாகப் பேசி சூசனைகாட்டினார். எலலோரும் சிரித்தவண்ணமாய் இருந்தார்கள்.

பிறகு, தோழர் கேளப்பன் அவர்கள் முடிவுரையில் சமதர்மக்கொள்கைகளையும், ரஷிய முறைகளையும் தாக்குகின்ற மாதிரியில் பேசினார். கூட்ட ஜனங்கள் வாலிபர்களாகவும் இந்து மதத்தைப் பற்றி விரோத பாவம் கொண்டவர்களாகவுமே பெரிதும் இருந்ததினால் கேளப்பன் அவர்களது ஒவ்வொரு வார்த்தைகளையும் ஆக்ஷேபித்து தடங்கல் விளைவித்துக் கொண்டே வந்தார்கள்.

கடைசியாக தோழர் கேளப்பன் அவர்கள் தான் இம்மகாநாட்டுக்குத் தலைவனாக இருந்து பேசுவதாகவும், தனது அபிப்பிராயம் தெரிவிக்க இவ்வளவு ஆக்ஷேபனை இருக்குமானால் தான் பேசாமல் உட்கார்ந்து விடப் போவதாகவும் சொன்ன பிறகு தோழர் ஈ. வெ. இராமசாமியும் எழுந்து சில வார்த்தை சொல்லி தோழர் கேளப்பன் அவர்கள் பேசும் போதே இப்படி இருந்தால் மற்றபடி தான் நாளை பேசும் போது எப்படி இருக்குமோ என்று பயப்படுவதாகவும் சொன்னதோடு உங்கள் இஷ்டப்படி பேச நாங்கள் இங்கு அழைக்கப்பட்டோமா? அல்லது எங்கள் அபிப்பிராயத்தைத் தெரிவிக்க இங்கு அழைக்கப்பட்டோமா? என்பதைமுதலில் தெரிவித்து விட்டால் பிறகு நமக்குள் அபிப்பிராய பேதம் இருக்க இடமிருக்காது என்று கேலியாகப் பேசினார். பிறகு கடைசி வரை பொறுமையாய்க்கேட்டார்கள். பிறகு மகாநாடு இரவு 7-30 மணிக்கு கலைந்து மறுநாள் பகல் 2 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

இரவு ஒரு நாடகம் நடத்திக் காட்டப்பட்டது.

### மறுநாள் 12—2—33
### ஈ. வெ. ராமசாமி.

மறுநாள் பகல் 3 மணிக்கு மகாநாடு துவக்கப்பட்டது. கூட்டம் முதல் நாளைவிட அதிகமாய் இருந்தது. அதுசமயம் எர்ணகுளம் வக்கீல் தோழர் எம். கே. ராமன் பி. ஏ. பி. எல்., எம். எல். சி. அவர்கள் தலைமையில் தோழர் ராமன் அவர்களாலேயே ஈ. வெ. ராமசாமிக்கு ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்து ஒரு நீண்ட உருண்டை மரடப்பியில் போட்டுக் கொடுக்கப்பட்டது. அதற்கு பதில் சொல்லுவதில் மகாநாட்டுத் தலைமை உரையில் சொல்லுவதாகச் சொன்னார்.

பிறகு தோழர் ஈ. வெ. இராமசாமியை மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும்படி தோழர் அய்யப்பன் பி. ஏ. அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு மற்றொரு தோழரால் ஆமோதிக்கப்பட்டு பலத்த கரகோஷத்தில் தலைமை வகித்து முதலில் தலைமையுரையாக பிரசங்கம் துவக்கு முன்பு சில வார்த்தைகள் கூட்டத்தாருடன் பேசுவது போல் பேசினார். அதாவது முதலில் தான் தமிழில் பேசினால் போதுமா அல்லது மலையாளத்தில் மொழிபெயர்ப்பு வேண்டுமா? என்று கேட்டார். அதற்கு பதில் தமிழிலேயே பேசினால் போதும். மொழிபெயர்ப்பு அவசியமில்லை என்று ஏகோபித்து பதில் சொன்னார்கள்.

பிறகு நேற்று தோழர் கேளப்பன் பேசும் போது இடையிடையே இடஞ்சல்கள் காணப்பட்டதைக்காண தான் பயப்படுவதாகவும், உங்களுக்கு இன்னமாதிரிதான் நான் பேசவேணடுமென்று தோன்றினால் அந்தப்படி பேச முயற்சிக்கலாமென்றும், அல்லது தன் இஷ்டப்படி பேசலாமென்றால் அந்தப்படி பேசலாம் என்றும் உங்களுக்கு எது வேண்டும் என்றும் கேட்டார். "உங்கள் இஷ்டம்போல் பேசுங்கள்" என்று சொன்னார்கள்.

பிறகு தோழர் ராமசாமி அவர்கள் பேசினார். அதன் சாரமாவது:—

தோழர்களே இன்று நான் பேசப்போவது உங்களுக்கு சந்தோஷமாக இருக்காது. ஏனெனில் நீங்கள் அநேகமாய் இன்று இங்கு நடக்கும் உற்சவத்திற்காக வந்தவர்கள். மிகுந்த பக்திவான்கள். நானோ அவற்றையெல்லாம் வீண் தெண்டம் என்றும், புரட்டு என்றும் சொல்லுகிறவன். அதுமாத்திரமல்லாமல் உங்களது கடவுள் உணர்ச்சி, மத உணர்ச்சி ஜாதி உணர்ச்சி, தேச உணர்ச்சி ஆகியவைகளையும், உங்களது சமூகத்தில் வெகுகாலமாய் இருந்துவரும் பழக்க வழக்கங்களையும் குற்றம் சொல்வதோடல்லாமல் அடியோடு அழித்து ஒழித்துவிட வேண்டுமென்றும் சொல்லுகின்றவன். இதை நீஙகள் பொறுத்துக் கொண்டிருப்பீர்களா என்பதுஎனது முதல்சந்தேகமாகும். நீங்கள் பொறுத்தாலும் சரி பொறுக்காவிட்டாலும் சரி. அதைப்பற்றி எனக்குக் கவலையில்லை. ஏனென்றால் உங்களிடம் நான் முதலிலேயே என்னிஷ்டப்படி பேச அனுமதி வாங்கிவிட்டேன். ஆனால் நீங்கள் நான் பேசப்போவதைப்பற்றி வருத்தப்படுவதற்குமுன் ஒரு விஷயத்தை மாத்திரம் கவனித்துப்பார்க்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அதென்னவென்றால் நான் ஏன் இப்படிப்பேசுகிறேன். இதனால் எனக்கு என்ன லாபம்? இந்தப்படி பேசுவதனால் யாராவது எனக்குப் பணம் கொடுப்பார்களா? ஒரு மனிதன் என்னைப்போல் வயது சென்ற "கிழவன்" ஒருவன் ஜாதியைக் குற்றம் சொல்லவும் மதத்தைக் குற்றம் சொல்லவும், கடவுளைக் குற்றம் சொல்லவும், கோவிலைக் குற்றம் சொல்லவும், தேசத்தைக் குற்றம் சொல்லவும், அரசாங்கத்தைக் குற்றம் சொல்லவுமான ஒரு கஷ்டமும் துக்கமுமான காரியத்தை ஏன் செய்ய வேண்டும். நான் இதற்குமுன் இவைகளையெல்லாம் ஒரு காலத்தில் ஆதரித்திருப்பது உஙகளில் பலருக்கு நன்றாய்த் தெரியும். தேசியத்திற்காக பலதடவை சிறை சென்றதும், உங்களுக்குத்தெரியும் அப்படியிருக்க இப்போது இப்படிச்சொல்ல என்னகாரணம்? என்பதை யோசித்துப் பாருங்கள். இவைகளால்மக்கள்சமூகத்திற்கு ஏற்பட்ட நன்மை என்ன? என்று யோசித்துப்பாருங்கள்.

உலக சரித்திரம் கிடைத்த காலந் தொட்டு ஜாதி, மதம், கடவுள் தேசம், சமூகம் அரசாங்கம் ஆகியவை இருந்து தான் வந்திருக்கின்றன. இவைகளைப் பற்றிய அபிமானங்களும், சீர்திருத்த முயற்சிகளும் பெரியார்களும், மகாத்மாக்களும் அவ்வப்போது தோன்றியும், பல சீர்திருத்தக்காரியங்களைச் செய்தும் தான்வந்திருக்கின்றனர் இவைகள்எல்லாம் மனிதசமூகத்திற்கு என்னபயன் அளித்திருகின்றன? குறைந்தது ஒரு ஆயிரம் அல்லது 2000 வருஷ சரித்திரங்களையோ அல்லது அக்கால நிலையை உணர்த்தும் புராணக்கதைகளையோ எடுத்துக் கொண்டீர்களேயானால், அன்றைக்கும் இன்றைக்கும் உள்ள வித்தியாசம் என்ன என்பதை யோசித்துப்பாருங்கள். 2000 வருஷத்திற்கு முன் இருந்த சண்டாளனும், ஏழையும், கஷ்டப்படும் கூலியும், பட்டினி கிடந்து, பசியால் வாடி, மழையால் நனைந்து வெயிலால் காய்ந்து உடுக்க உடையில்லாமல் படுக்கப்பாயில்லாமல் இருக்க இடமில்லாமல் அலைந்து திரிந்து அவதிப்படும் மக்களும் கோடியாய் இன்றும்இருந்துதான்வருகின்றார்கள் என்றால் இதுவரை இருந்து வந்தமத அபிமானமும், கடவுள் அபிமானமும், தேச அபிமானமும், அரச அபிமானமும், ஆகியவைகள் இக்கொடுமைகளை ஒழிக்கவோ, அல்லது இனிமேல் உலகில்

இக்கொடுமைகள் இல்லாமல் செய்யவோ முடியவில்லை என்றால் இன்னமும் எத்தனை நாளைக்கு அரைத்த மாவையே அரைத்துக்கொண்டிருப்பது போன்ற முட்டாள்தனமான வேலைகளாகிய மேற்படி அபிமானங்களை காப்பாற்றிக் கொண்டிருப்பது என்று கேட்கிறேன்.

சமீபகாலம்வரை அரசர்களை விஷ்ணு அவதாரமென்றும், விஷ்ணு அம்சமென்றும் சொல்லி வந்ததுடன் ஒவ்வொரு கூட்டங்களிலும் ராஜ விசுவாச தீர்மானம் செய்த பிறகே காரியங்களை துடங்கியும் வந்தோம். அதுபோலவே சர்வத்திற்கும், கடவுளே ஆதாரபூதம் என்றும் அவர் அருள் பெருவதே எல்லாவற்றிற்கும் அவசியமானதென்றும்கருதி எந்தக் காரியம் செய்தாலும், எந்த எண்ணத்தை நினைத்தாலும், எந்தப் பேச்சைப் பேசினாலும், கடவுளை நினைத்து கடவுளை ஸ்தோத்தரித்த பிறகுதான் மற்றகாரியங்களை செய்துவந்தோம். அதுமாத்திரமா "கோயிலில்லாஊரில் குடி இருப்பது பாவம்" என்று காடு மேடுகளில் எல்லாம் ஊர் கிராமங்களிலெல்லாம் கோயில்கள் கட்டினோம் சில கோயில்கள், கோட்டைகள் போல் கொத்தளங்கள் போல் கட்டி பலசுற்றுப்பிரகாரங்கள் விட்டு மதில்களும் வானமளாவக்கோபுரங்களும்கட்டி தங்கத்திலும், வெள்ளியிலும் தாம்பிரத்திலும், சாமிகள் செய்து ரத்தினங்களால் நகை போட்டு ஊரில் யார் பட்டினிகிடந்தாலும் எந்தக்குழந்தைக்கு பால் இல்லாவிட்டாலும், யாருக்கு வேஷ்டி துணி இல்லாமல் நிர்வாணமாய் இருந்தாலும், யாருக்கு பெண்டு இல்லாமல் கஷ்டமாய் இருந்தாலும் சிறிதும் லட்சியமில்லாமல் பால் பழம் பஞ்சாமிர்த அபிஷேகமும் ஆராதனையும், பட்டுபீதாம்பர உடையும் வருஷா வருஷம் கல்யாண திருவிழாக்களும், வைப்பாட்டி திருவிழாக்களும், செய்து வண்ணமாய் இருந்ததுடன் மக்களில் கோடிக்கணக்கானபேருக்கு நாள் ஒன்றுக்கு ஒரு வேளை சாப்பாட்டிற்கும் வழி இல்லாவிட்டாலும் எண்ணிலடங்கா கடவுள்களுக்கு தினம் 1-வேலை 2-வேளை 3-வேளை மூட்டை மூட்டையாய் பொங்கிப்போட்டு ஆராதனை அர்ச்சனை செய்து வந்தோம்.

இவ்வளவு தானா ஒவ்வொரு கோவிலுக்கும், ஒவ்வொரு சாமிக்கும் வருஷம் 10 லட்சம், 20 லட்சம் வரும்படி வரும்படியான பெருமையையும், சொத்துக்களை தேடிவைத்தோம். மத விஷயத்திலும் எத்தனையோ லட்சக்கணக்கான பெயர்கள் அடிக்கடி [illegible] மதத்திற்காகஎன்று தலையைச் சிரைத்தும் [illegible] மூக்கையும் சிரைத்தும், [illegible] காதை ஓட்டை செய்தும் மூக்கை ஓட்டை செய்தும், மண்ணைப்பூசியும், சாம்பலைப்பூசியும், சேற்றைப்பூசியும், சாணியைசாப்பிட்டும், மூத்திரத்தைக் குடித்தும், பட்டினி கிடந்தும் மற்றும் என்ன என்னவோ காட்டுமிராண்டித்தனமான காரியங்களைச் செய்தும் மதத்தைக்காப்பாற்றினோம். இதுபோலவே தேசத்திற்கு என்றும் அடிபட்டும், உதைபட்டும், சிறைசென்றும், தூக்குமேடையில் உயிர்விட்டும் அன்னிய தேசத்தாருடன் போர்புரிவதென்னும் காரியத்தில் 10 லட்சக்கணக்கான பேர் உயிர்விட்டும் தேசாபிமானம் காட்டினோம் இவ்வளவும் இன்று என்ன ஆயிற்று. பழய நிலையை வளர்க்கின்றதா அல்லது புதிதாக எதாவது சௌகரியம் செய்ததா? யோசித்துப்பாருங்கள். இன்று இன்னாட்டில் தற்குறிகள் எவ்வளவு பேர்கள்? 100-க்கு 87½ பேர் தற்குறிகளல்லவா? இன்னாட்டில் ஏழைகள் பாடுபட்டும் பட்டினி கிடப்பவர்கள், தங்கள் பிள்ளைகுட்டிகளை காப்பாற்றமுடியாமல் மானத்தை விற்றும், விபசாரித்தனம் செய்தும் ஜீவிக்க வேண்டியவர்கள் எத்தனைபேர் யோசித்துப்பாருங்கள். இந்த மேல்கண்ட அபிமானங்களுக்கு மரியாதை கொடுத்து இன்னம் எத்தனை ஆயிரவருஷம் பரீக்ஷை பார்ப்பது? அவைகளை சீர்திருத்தம் செய்ய இன்னும் எத்தனை வருஷம் காத்திருப்பது? என்பதை யோசித்துப் பாருங்கள். நான் சொல்லுவதென்ன வென்றால் இனி இந்த அபிமானங்களால் அதாவது ஜாதி, மத, கடவுள், தேசம் அரசு ஆகிய அபிமானங்களால் யாதொரு பயனும் இல்லையென்றும் அவைகள் போலியும் சூட்சியும் நிறைந்தவைமாற்றல்கள் என்றும் தைரியமாய்ச்சொல்லுகின்றேன் ஆகையால் அதை விட்டு விட்டு மனுஷ்ய அபிமானம் என்கின்ற முறையில் ஒருவருக்கு ஒருவர் அபிமானம் வைத்து அன்பு வைத்து மனிதருக்காக மனிதர் உழைப்பதும் அபிமானம்வைப்பதும் என்கின்ற கொள்கையை ஏற்று நடத்த வேண்டும் என்று தான் சொல்லுகின்றேன்.

இனி ஜாதி மதம் கடவுள் தேசம் அரசு ஆகிய எவற்றிற்கும் சிறிதும் இடம்கொடாமலும் மனித அபிமானத்திற்காக மேல் கண்டவைகளில் எதை வேண்டுமானாலும் இழக்கவும் தயாராய் இருக்க வேண்டும். அன்று தான் எல்லோரும் மனிதர்களாக இருக்க முடியும். இதனால் ஆபத்து ஒன்றும் ஏற்பட்டு விடாது என்றே எண்ணுகிறேன். ஆனால் இவைகளை நீங்கள் நன்றாய் யோசித்துப்பாருங்கள். பழய காரியங்கள்பயனளிக்காததாலேயே தான் இதைப்பற்றி பேசுகிறேன். உங்கள் புத்தியைக்கொண்டு ஆராய்ந்து பார்த்து உங்களுக்கு சரியென்று பட்டதைச் செய்யுங்கள் நான் சொல்லுவது குற்றமாகவும் துவேஷமாகவும் இருந்தாலும் இருக்கலாம் என்பதாக பேசினார்.

பிறகு தோழர் கே. ஐயப்பன்பி.ஏ., எம்.எல்.சி, அவர்கள்கடவுள்நம்பிக்கை விஷயத்தில் ஈழவர்களின் நிலையைப் பற்றியும் ஜாதி பேதம் கூடாது என்றும் தங்களை மற்றவர்கள் தாழ்ந்தவர்கள் என்றுகருதிவருத்தப்படுத்துவதைப் பற்றியும் மற்றவர்கள் கோவிலுக்குள் தாங்கள் போக முயற்சிப்பதை பற்றியும் தங்கள் கோவில்களில் மற்ற கீழ் ஜாதிக்காரர்கள் என்பவர்களை விடாமல் இருப்பதைப் பற்றியும் வெகு விரிவாகப் பேசினார். பிறகு தோழர் கோமதி அம்மாள் பெண்களை மதத்தின் பேரால் ஜாதியின் பேரால் சமூகபழக்க வழக்கத்தின் பேரால் ஆண்கள் செய்யும் கொடுமையைப் பற்றி பேசினார். பிறகு தோழர் அந்தோணி அவர்கள் யுக்தி வாதம் பகுத்தறிவு என்பது பற்றி பேசினார். பிறகுநாயர்சமுதாய காரியதரிசி தோழர் மன்னத்து பத்மநாப பிள்ளை அவர்கள் கோவிலின் தன்மையைப் பற்றியும், அதனால் சில ஜனங்கள் எப்படி பயன் பெறுகிறார்கள் என்றும் சில ஜனங்கள் எப்படி நஷ்டமும் கஷ்டமும் அடைகிறார்கள் என்றும் பரிகாசமாய் பேசினார்.

பிறகு, தோழர் கே. கேளப்பன் பி. ஏ. அவர்கள் குருவாயூர் ஆலயப்பிரவேசத்தின் கருத்தை எடுத்துச் சொல்லி எல்லோரும் அதை ஆதரிக்க வேண்டும் என்றும் காந்தியை ஆதரித்தால் தான் ஜாதி பேதம் போகும் என்றும் பேசினார். இந்தச் சமயத்தில் அவர் கடவுளைப் பற்றி உண்டு என்றோ இல்லை என்றோ எவ்வித நிச்சயமும் செய்து கொள்ளவில்லை என்றும், அது தன்னால் முடிவு செய்யக் கூடிய விஷயமல்லவென்றும் மனித சமூக சுயமரியாதையை உத்தேசித்தே தான் ஆலயப் பிரவேச முயற்சி செய்வதாகவும் சொன்னார்.

பிறகு அந்த ஊர் கோவிலுக்குள் தீண்டாதார் என்பவர்களை அனுமதிப்பது என்பதாக முடிவு செய்ததுடன் கோவில் நிர்வாகிகளைபோய் கேட்டுக் கொள்வது என்று மேடையில் இருந்ததலைவர்கள்முடிவு செய்து கொண்டார்கள்.

### ராமசாமி முடிவுரை.

பிறகு தலைவர் என்கின்ற முறையில் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் முடிவுரையாகப் பேசியதின் சாரமாவது:- தோழர்களே! இன்றையமகாநாடு முடிவடைந்துவிட்டது என்றாலும் நிகழ்ச்சிக்குறிப்பில் எனது முடிவுரை பாக்கி இருக்கிறது இனிநான் என்ன சொல்வது என்பது விளங்கவில்லை. ஆனாலும் ஒரு விஷயத்தில் எனது அபிப்பிராயத்தைச்சொல்ல ஆசைப்படுகிறேன். அதென்னவென்றால் இன்று எல்லோரும் கோவில் பிரவேசத்தைப்பற்றி பேசினார்கள், நானும் ஒரு காலம்பற்றி கோவில் பிரவேசத்திற்கு முயற்சித்தவன் தான். ஈரோட்டில் தேவஸ்தான கமிட்டியால் கோவில் பிரவேசம் பாசாக்கினதும் அந்தத் தீர்மானப் படி சிலர் கோவிலுக்குச் சென்றதும் அதனால் கேசுகள் நடந்து தண்டனை ஆனதும் உங்களுக்கு தெரிந்திருக்கலாம். அதனால் பிரயோஜனமில்லை என்கின்ற முடிவுக்கு வந்ததோடு புதிதாக கோவில் பிரவேசம் பெறப்போகும் மக்களுக்கு புதிய கஷ்டங்களும் விளையக் கூடும் என்றே கருதிவிட்டேன். இப்பொழுது வரவர கோவில்களே தேவையில்லை என்றே தோன்றி விட்டது. கடவுளைப்பற்றிய நம்பிக்கை எப்படி இருந்தாலும் கோவிலும், பூசையும், உற்சவமும் அவசியமா? என்று யோசித்துப்பாருங்கள். தோழர் கேளப்பன் அவர்களே கடவுள் உண்டோ இல்லையோ தனக்கு தெரியாது என்று சொன்னார். இந்தமாதிரி சந்தேகப்பட்ட காரியத்துக்கு எவ்வளவு செலவு, மெனக்கேடு, கஷ்டம் என்பதையோசித்துப் பாருங்கள். கடவுள் இருப்பதாக வைத்துக்கொண்டாலும் அது எல்லோருக்கும் ஒன்று போல் இல்லாமல் மக்களை பாழ்படுத்துகிறது. ஒவ்வொருவரும் ஒவ்வொரு அர்த்தம், ஒவ்வொரு குணம், ஒவ்வொரு தோற்றம் சொல்லுகிறார்கள். இந்தமாதிரி இப்போது எதாவது ஒருவஸ்துவைப் பற்றிஒவ்வொருவர் ஒவ்வொருமாதிரி சொன்னால் அதைநீங்கள்ஒப்புக்கொள்ளுவீர்களா? அல்லது அந்த வஸ்துவை நம்புவீர்களா? எந்தக்கடவுளுக்கு எப்படிப்பட்ட தத்துவார்த்தம் சொன்னாலும் அதனால் ஏற்படுகிற பயன் என்ன என்பதும், அதில் என்ன வித்தியாசம் என்பதும் யோசிக்கவேண்டிய காரியமாகும். கோவில்களை எல்லாம் இடித்து விடுவதால் எந்தக் கடவுளுக்கும் எவ்வித நஷ்டமும் ஏற்பட்டு விடாது. ஆகையால் யாரும் பயப்படவேண்டாம் அனாவசியச் செலவும் மதியீனமும் விலகிவிடும். நீங்கள் எந்த முறையில் கடவுளை நிர்ணயத்தாலும் எந்த முறையில் எவ்வளவு நல்ல கருத்தில் மதத்தை நிர்மாணித்தாலும் பலன்கள் எல்லாம் ஒன்றாகத்தான் இருக்குமே தவிர மூடநம்பிக்கை கடவுளைவிட குருட்டுப்பழக்க மதத்தைவிட சீர்திருத்த கடவுளும் பகுத்தறிவு மதமும் ஒன்றும் அதிகமாய் சாதித்துவிடப்போவதில்லை.

எப்படியானாலும் ஒரு கடவுளைசிருஷ்டிப்பதாயிருந்தால் "அவர் நமதுகண்ணுக்குத் தெரிய மாட்டார் அவரை வணங்கினால் பிரார்த்தித்தால் பயன் உண்டு" என்று தான் சொல்லியாக வேண்டும். எப்படிப்பட்ட மதத்தை சிருஷ்டித்தாலும் அதற்கு ஒரு உபதேச கர்த்தாவை சிருஷ்டித்தாக வேண்டும். அக்கர்த்தாவுக்கு தெய்வீக தன்மை ஏற்படுத்தித்தான் ஆக வேண்டும். அவர் மூலமாக ஒரு வேதத்தை ஒப்புக் கொண்டு தான் ஆக வேண்டும். அவ்வேதம் கடவுளால் அவருக்கு சொல்லப் பட்டது என்பதை ஒப்புக் கொண்டு தான் ஆகவேண்டும். அதை மாற்றுவதற்கு

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க.

# மாமாங்கம்

# மூத்திரக்குளம்.

மடமக்களே! மாமாங்கத்திற்கு உங்களை வரும்படி ரயில்வேக்காரர்களும், பார்ப்பனர்களும் வெகு கவலையாய் அழைக்கிறார்கள். விளம்பரங்கள் செய்கிறார்கள். என்? உங்களை "மோக்ஷத்திற்கு" அனுப்பவா? அல்லது ரயில் சார்ஜ் என்றும், சங்கல்ப்பமென்றும் உங்கள் பணத்தைப் பிடுங்கவா? யோசித்துப்பாருங்கள். காட்டுமிராண்டி மக்களைப்போல் மூத்திரக்குளத்தில் உள்ள சேற்றில் குளித்தால் 'மோக்ஷம்' கிடைத்து விடுமா? அல்லது உங்கள் பாவம் தான் தொலைந்து விடுமா? தோழர்களே! வீணே காசைத்தொலைத்து நசுக்குண்டு நோய் வாய்ப்பட்டு கஷ்டர்களாகாதீர்கள்.

# தொத்துநோய்வரும்

## இலங்கையில் புதிய ஏஜண்டு.

யாங்கள் தற்போது தோழர் J. F. Victoria (ஜெ. யப். விக்டோரியா)வை புதிய குடி அரசு ஏஜண்டாக நியமித்திருக்கிறோம். இனி சப்-ஏஜண்டுகளுக்கு அனுப்பப்படும் பத்திரிகைகளுக்குமினி புதிய ஏஜண்டே பொறுப்புள்ளவராவர். ஆகையால் ஒவ்வொரு சப்-ஏஜண்டு (Sub-agent)ம் தோழர் விக்டோரியாவிடமே பணத்தைக் கட்டும்படி யாசக்கேட்டுக்கொள்ளுகிறோம்.

குடி அரசு ஈரோடு.

புதிய ஏஜண்டின் விலாசம்:—

J. F. Victoria,
41⅙ Victoria Buildings,
(Opposite Fort Railway Statiou) Norris Road,
Colombo.

குடி அரசு.

ஈரோடு 1933 பிப்ரவரிமீ 26-உ

## வருணாச்சிரமம்.

—:0:—

சென்றவாரக் "குடியரசு" பத்திரிகையின் தலையங்கத்தில் "இரகசியம் வெளிப்பட்டதா?" என்றதலைப்பில்காந்தியவர்களினுடையவும், காங்கிரசினுடையவும், அரசியல், சட்டமறுப்புக் கிளர்ச்சியின் தத்துவம் இன்னது என்பதை ஒருவாறு விளக்கினோம். ஆனால் அத்தலையங்கத்தின் இறுதியில் காந்தியின் வருணாச்சிரமத்தைப் பற்றி மற்றொரு சமயம் எழுதுவதாக எழுதியிருந்தோம்; அந்தப்படியே இவ்வாரம் "வருணாச்சிரமம்" என்பது பற்றி சில விஷயங்கள் எழுதுகின்றோம். வருணாச்சிரமம் என்பதைப்பற்றி இதற்கு முன் பல தடவை எழுதி இருக்கிறோம். ஆதியில் நாம வருணாச்சிரமத்தைப் பற்றி எழுதிய காலத்தில் சில தேசிய வாதிகள் காந்தியின் வருணாச்சிரமம் இன்னது என்பதை நாம் அறியாமையால் குற்றம் சொல்லுவதாக பல "தேசியவாதிகளும்" "தேசியப்பத்திரிகைகளும்" நம் மீது பழி சுமத்தி வந்தன. ஆனால், தோழர் காந்தியவர்களே தனது வருணாச்சிரமத்துக்கு நன்றாய் வெளிப்படையான வியாக்கியானம் செய்த பிறகு, அதாவது தேசிய வாதிகள் வேதத்தைப் போல் வாசித்து வந்த "யங் இந்தியா" என்ற பத்திரிகையில் எழுதிய பிறகு "இந்த ஒரு விஷயத்தில் (வருணாச்சிரமதர்ம விஷயத்தில்) மாத்திரம் காந்தியாருடன் அபிப்பிராயப் பேதம் கொள்ளுகின்றோம்" என்று வெளிப்படையாக எழுத ஆரம்பித்து விட்டன. ஆனால் இந்தப்படி எழுதிய தேசிய பத்திரிகைகள் எல்லாம் முழுவதும் பார்ப்பனரல்லாத "தேசிய வாதிகளின்" பத்திரிகைகளே ஒழிய ஒரு பார்ப்பன தேசியப் பத்திரிகையாவது இது சரி யென்றோ, தப்பு என்றோ சொல்லாமல் திருடனைத் தேள் கொட்டியதுபோல மௌனம் சாதித்தன. காந்தியாரின் பரம சிஷ்யர்களான தோழர்கள் ராஜகோபாலாச்சாரி, ஜவஹர்லால் நேரு, முதலியவர்கள் கூட இந்த காந்தி வருணாச்சிரம தர்மத்தைப் பற்றி ஒருவார்த்தையும் நாளது வரையும் பேசாமல் இருக்கின்றார்கள். பார்ப்பனரல்லாத தேசிய வாதிகள் என்பவர்கள் காந்தி வருணாச்சிரமத்தை ஒப்புக்கொள்ள வில்லையானாலும் கண்டித்து வந்தாலும் காந்திக்குள்ள செல்வாக்கினாலும் அவரை விட்டுப் பிரிந்து தனித்து நிற்க சக்தியற்றதினாலும், பாமர மக்களின் அறிவின்மைக்கு பயந்தும், காந்தியாரின் திருவிளையாடல்களுக்கெல்லாம் பின்தாளம் போட்டே ஆகவேண்டி இருந்ததால் இதை போதிய அளவு வெளியாக்கி அதன் கெடுதிகளை எடுத்துச் சொல்ல தைரிய மற்றவர்களாகவும் மனமற்றவர்களாகவும் இருக்க வேண்டியவர்களாகிவிட்டார்கள். "தமிழ் நாடு" மாத்திரம் ஏதோ ஒரு அளவுக்குத் துணிந்து எழுதிற்று என்னலாம்.

காந்தியார் வருணாச்சிரம தர்மத்துக்கு அவர் "யங் இந்தியா" பத்திரிகையில் எழுதிய வியாக்கியானத்தை இப்பொழுதும் ஒருமுறை எடுத்து எழுதுகிறோம். அதாவது:—

1. "வருணாச்சிரமதர்மங்களில் கூறப்படும் நான்கு வருணாச்சிரம தர்மங்களிலும் எனக்கு நம்பிக்கை உண்டு.

2. அந்த வருண தர்மப் பாகுபாடுகள் பரம்பரையான தொழில்களைப் பொருத்தே ஏற்பட்டவை.

3. அதாவது, 1. பிராமணர், 2. க்ஷத்திரியர், 3. வைசியர், 4. சூத்திரர்.

4. அவர்களின் தொழில்களாவன.

A. பிராமணர் உபதேசம் செய்தல், கல்வி கற்பித்தல்.

B. க்ஷத்திரியர் பகைவர்களினின்று காத்தல்.

C. வைசியர் வியாபாரம், விவசாயம் செய்தல்.

D. சூத்திரன் சரீரத்தால் உழைத்து மேல் கண்ட மூன்று வருணத்தாருக்கும் ஏவல் வேலை செய்தல்.

இது தான் எனது வருணாச்சிரம தர்ம முறை. இந்த முறையை இந்து சமூகம் தவறி நடந்ததாலேயே வருண தருமம் அழிந்து விட்டது. கலப்பு விவாகத்தால் நாட்டில் ஒற்றுமையும், சாந்தமும் ஏற்பட்டு விடாது." என்று எழுதி இருக்கிறார்.

இந்த அபிப்பிராயமோ, வியாக்கியானமோ தோழர் காந்தியார் தன்னுடைய சொந்த வியாக்கியானம் என்று சொன்னாலும், இதே அபிப்பிராயம் தான் மனுதர்ம சாஸ்திரத்திலும் மற்றும் பல ஸ்மிருதிகளிலும், புராணங்களிலும் இருந்து வருகின்றது. ஆகவே இதில் காந்தியார் அபிப்பிராயத்தால் வியாக்கியானத்தால் எவ்வித மாறுதலும் ஏற்பட்டு விடவில்லை. ஒரு சமயம் ஏதாவது மாறுதல் உண்டா என்று ஆழ்ந்து கவனித்தால், மனுஸ்மிருதியில் வருண தர்மம் கெடாமல் அரசன் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று இருக்கின்றது. ஆனால் காந்தியாரின் ஸ்மிருதியானது, "வருண தர்மத்தைப் பற்றி அரசன் கவனிக்காததால் அரசனைத் தள்ளி விட்டு வருண தர்மத்தைக் காப்பாற்றும் அரசாங்கத்தை ஏற்படுத்தி, வருணாச்சிரம தர்மிகள் கையில் ராஜியத்தை ஒப்புவிக்க வேண்டும்" என்கிறது. அதற்காகவே அதாவது "வருணாச்சிரம தர்ம முறையைக் காப்பாற்றவே நான் சுயராஜியத்திற்கு பாடு படுகிறேன்" என்கிறார். ஆகவே காந்தியவர்களின் வருணாச்சிரமதர்மம் என்பது எப்படிப்பட்ட வியாக்கியானத்தையும், தத்துவ அடிப்படையையும் கொண்டிருந்தாலும் அவற்றின் தத்துவமெல்லாம் பொருளாதாரத்தையும் மற்றவன் உழைப்பால் சிலர் வாழும் சோம்பேறி வாழ்க்கையையுமே அடிப்படையாகக் கொண்டது என்பதே நமதபிப்பிராயம். எப்படியெனில் பார்ப்பான் பாடுபடாமல் ஊரார் உழைப்பில் வாழவேண்டியதற்கு தகுந்தபடியே அவனுக்கு உபதேசம், கல்வி கற்பித்தல் என்று சொல்லப்பட்டிருக்கின்றது. கல்வி கற்பித்தலும், உபதேசமும் யாருக்காக என்று பார்த்தோமேயானால், உபதேசம் பெறவும் கல்வி கற்று கொள்ளவும் ஆளுகளே கிடையாது என்றுதான் விளங்கும். பெரும்பான்மையான வருணத்தார் என்னும் "சூத்திரர்கள்" என்பவர்கள், மற்றவர்களுக்குத் தொண்டு செய்ய வேண்டுமென்கிற உபதேசத்தைத்தவிர வேறு என்ன இருக்கிறது. மற்றவர்கள் சொல்படியே நடக்கவேண்டியவனுக்கு என்ன உபதேசம் என்ன கல்வி வேண்டியிருக்கிறது? என்பதை யோசித்துப்பாருங்கள்.

க்ஷத்திரியர்களால் தான் "சூத்திரர்களுக்கு" என்ன பிரயோஜனம்? யார் வந்தாலும், எந்தராஜா வந்தாலும்சூத்திரன் முதல்மூன்று பேருக்கும் தொண்டுசெய்யவேண்டியவனாகத்தானே இருக்கிறான். ஆதலால் க்ஷத்திரியன் என்பவனாலும், சூத்திரனுக்கு பலன் இல்லை.

வைசியனும் அப்படியே தான், ஆனால் வைசியனுக்குத்தான் பணம் சேர்த்துக் கொள்ள அதிகாரம் உண்டு. சூத்திரனிடம் வேலை வாங்க அதிகாரம் உண்டு. அதனால்தான் சூத்திரனை பணம் சேர்க்கவிடக்கூடாது என்றும், சேர்த்துவிட்டால் பிராமணன் பலாத்காரமாய்க்கூட பிடுங்கிக்கொள்ளலாம் என்றும் மனுதர்மம் சொல்லுகின்றது. ஆனால் பிரிட்டிஷ் தர்மத்தில் சூத்திரன்பணம்சேர்க்கலாம், ஆனாலும்அதை வரி, கோர்ட்டு வக்கீல், கோயில், குளம், சடங்கு, பண்டிகை முதலியவைகளின் மூலம் பிடுங்கிக் கொள்ளலாம் என்று இருந்து வருகின்றது. ஆனால் காந்தி தருமத்தில் சூத்திரன் கைக்கு பணம் வந்து சேரவே முடியாதபடி சூத்திரர்கள் கையில் ராட்டினத்தைக் கொடுத்தாய்விட்டது.

அதுமாத்திரமல்லாமல் சூத்திரர்களுக்குக் காந்தியாரால் செய்யப்படும் உபதேசமும் அதை அனுசரித்தே செய்யப்பட்டிருக்கிறது. அதென்னவென்றால்:—

1. ராட்டினத்தையே சுற்ற வேண்டும்.

2. கைத்தறியில் நெய்யவேண்டும்.

3. மாடுமேய்த்து பால்தயிர் விற்கவேண்டும்.

4. செருப்புத் தைக்கவேண்டும்.

5. பணப் பெட்டிகளில் வெள்ளிநாணயம் இருக்கக்கூடாது.

6. பம்பாய் மில் முதலாளிகள் (வைசியர்கள்) போல் பணக்

காரர்களாக ஆசைப் படக்கூடாது.

என்றெல்லாம்உபதேசம் செய்திருப்பதோடல்லாமல் "இது தான் எனது சுயராஜ்யத்திட்டம்" என்றும் இந்த 2, 3வருஷ சட்டமறுப்பு, சத்தியாக்கிரகம் எல்லாம் இதற்காகத்தான் செய்யப்பட்டதென்றும் சொல்லியிருக்கிறார் (இந்த உண்மை அறிய வேண்டியவர்கள் 1931-ஜூன் மாதம் 12, 13-ந்தேதி "இந்து" "சுதேசமித்திரன்", "தமிழ்நாடு" பத்திரிகைகளைப் பார்த்தால் நன்ருய் விளங்கும். இதில் சிறிதும் தப்பில்லை. இன்றைக்கு தோழர் காந்திக்கு எழுதிக் கேட்டாலும் ஒப்புக்கொள்ளுவார்).

ஆகவே இந்தவித சுயராஜ்ஜியம் யாருக்கு நல்லது என்பதை யோசித்துப்பாருங்கள்.?

இன்றையதினம் உலகம் முழுவதும் எவ்வித வகுப்பு வித்தியாசமும் கூடாது என்றும், குறிப்பாக ஏழை, பணக்காரன், தொழிலாளி, முதலாளி, சோம்பேறி, பாட்டாளி என்பவை கூடாதென்றும் சொல்லி முயர்ச்சித்து உலகையே புதிய உலகம் ஆக்க வேண்டுமென்று பாடுபடுகின்ற காலத்தில், இந்தியாவில் "அன்னியஆட்சியைவிரட்டுவது" என்ற தந்திர வார்த்தையை உபயோகித்துக் கொண்டு, அன்னிய ஆட்சி மாத்திரமல்லாமல் உலகத்தில் உள்ள எந்தவித கேடான ஆட்சியைவிட கேடான ஆட்சியானதும் 2500 வருஷங்களுக்கு முன் இருந்த பழைய ஆட்சிக்கும், வருணாச்சிரம ஆட்சிக்கும்கொண்டுபோகப்பாடுபடுவதென்றால் இதை எப்படித்தான் சுயமரியாதையும், சுதந்திரவீரமும் உள்ள மனிதன் ஒப்புக்கொள்ளமுடியும் என்பதை யோசித்துப்பாருங்கள்.

மற்றும் காந்தியார் வட்டமேஜை மகாநாட்டிற்குப் போன துமகூடவருணாச்சிரமமும, ஜாதி முறையும மேல் நிலையில் இருப்பவர்கள் பரம்பரையாய் மேல நிலையில் இருக்கவும், கீழ் நிலையில் இருப்பவர்கள் பரம்பரையாய் கீழ் நிலையில் இருக்கவும் ஏற்பாடு செய்வதற்கே ஒழிய மக்கள் யாவரும் சமமாய் இருக்க ஏற்பாடு செய்வதற்கென்று யாராவது சொல்ல முடியுமா? என்று கேட்கின்ருேம். தோழர்காந்தியனது 'வருணாச்சிரமத்திலும் ஜாதிமுறையிலும், உயர்வுதாழ்வு இல்லை எல்லாரும் சமமாய் பாவிக்கப்படுவார்கள்' என்று சொல்லுகின்ருர் என்ருலும் பிரிவு உண்டு என்றும் அவனவனுக்கு ஆதியில் விதித்த வருணத்தொழில், ஜாதித்தொழில் என்பதையேதான்அவனவன் செய்தாகவேண்டுமென்றும் சொல்வதுசமதர்மத்திற்கும்,சமத்துவத்திற்கும்ஏற்றதாகுமா என்பதை யோசித்துப் பாருங்கள்? முதலாளியும், தொழிலாளியும் இருப்பான், பார்ப்பானும் பறையனும், இருப்பான் ஆனல் மேல் நிலையில் உள்ளவனைப்பார்த்து கீழ் நிலையில் உள்ளவன் வித்தியாசம் பாராட்டப்படாது என்றும் கீழ் நிலையில் உள்ளவனைப்பார்த்து மேல் நிலையில் உள்ளவன் வித்தியாசம் பாராட்டப்படாது என்றும்சொன்னல் இதற்கு என்ன அருத்தம்? என்பதைவாசகர்கள்தான் யோசித்துமுடிவுகட்டவேண்டும். மேல்நிலையில் உள்ளவன் பாடுபடாமல் சுகமாய் கூடகோபுரம்மாடமாளிகைகட்டிக்கொண்டு மக்கள் மீது பல்லக்கு சவாரிசெய்வது அவன் வருணதர்மமென்றும், கீழ் நிலையில் உள்ளவன் ஓட்டைக்குடிசையில் வசித்துக்கொண்டு போதிய ஆகாரமும் சௌகரியமும் இல்லாமல் பல்லக்கு சுமப்பது இவனது வருண தருமமென்றும் சொல்லி இந்த இரண்டு நிலைக்கும் வித்தியாசம் பாராட்டக்கூடாது என்று சொன்னல், இது யாருக்கு சுகம் யாருக்கு கஷ்டம் என்பதையோசித்துப்பாருங்கள். பல்லக்கு சுமப்பவன் இரண்டுக்கும் வித்தியாசமில்லை என்று கருதினாலும் பல்லக்கு சுமப்பவன் பாரமானது சவாரி செய்பவனுக்கும், சுமப்பவனுக்கும் யாதொரு வித்தியாசமும் இல்லாமல் ஒன்றுபோல் சமமாய் இருக்குமா என்பது தான் நமது கேள்வி.

இந்த வருணாச்சிரமம், ஜாதி முறை, ஏழைகள் இருக்கவேண்டிய தன்மை, ராட்டினம் ஆகிய விஷயங்களைப்பொறுத்த காந்தியாரின் அபிப்பிராயங்களேதான் நம்மை காந்தி சுயராஜ்ஜியத்தை விட "அன்னிய ஆட்சி" என்பது ஆயிரம் மடங்கு மேலானது என்று கருதச்செய்கின்றது.

காந்தி சுயராஜ்ஜியப்படி இந்த நாட்டில் தப்புக்கொட்ட பறையரும், செருப்புத்தைக்க சக்கிலியும், மலமெடுக்கத்தோட்டியும், மாடுமேய்க்க குடி மக்களும் பல்லக்கு ஏறப்பார்ப்பானும், கொள்ளை அடிக்கச்செட்டியும், குந்ர்களில் தானியங்களைக்கொட்டிக்கொள்ள ஜமீன்தாரனும், மிராசுதாரனும் இருந்தே தீருவான். அதுவும் தலைமுறை தலைமுறையாய் இருந்தே தீருவான். ஆனல் அன்னிய ஆட்சியிலும், இந்த நிலை இருக்குமென்று யாராவது சொல்லலாம். ஆனலும் காந்தி சுயராஜியமாதிரிஇந்தநிலைகள் ஜாதி முறைப்படி வருணதருமப்படி இருக்காது பறையனுக்கு பல்லக்கேற சந்தர்ப்பம் வந்தாலும் வரும், பார்ப்பானுக்கு செருப்பு தைக்க சந்தர்ப்பம் வந்தாலும் வரும், செட்டிக்கு மாடு மேய்க்க சந்தர்ப்பம் வந்தாலும் வரும் க்ஷத்திரிய சிங்குக்கு பங்கா இழுக்க சந்தர்ப்பம் வந்தாலும் வரும். ஆதலால்அன்னிய ஆட்சி முறையாலாவது எல்லோருக்கும் பந்தயத்தில் இடமேற்படும். காந்தி ஆட்சி முறைப்படி பந்தயமே கிடையாது பாரம்பரிய அநுபவம் தான் நிலைக்கும்.

ஆனல் இந்த முறையாகிய போட்டியும் சாந்தமற்று சதா மேல் நிலையைப் பற்றி கவலை இருப்பதும் மனித சமூகத்துக்கு நல்லதா என்று கேழ்க்கலாம். நல்லது என்றே நாம் சொல்லுவோம். ஏனெனில் எல்லாருக்கும் கஷ்டம் இருக்கின்றது என்று தோன்றினல் தான் கஷ்ட நிவர்த்திக்கு மார்க்கம் கிடைக்கும்.மார்க்கம் தேடவும் மனம் வரும். நமது நாட்டு பழைய வழக்கங்களும் மக்கள் பலர் ஜாதியின் பயனய் மனிதத் தன்மையற்று மிருகங்கள் போல் பாடு படவும் அது வெகு காலமாய் நிலைத்திருக்கவும் காரணமே இந்த வருண தருமமும் ஜாதி முறையுமேயாகும். வருண தருமமும் ஜாதி முறையும் இந்த நாட்டில் இல்லாமலிருந்திருந்தால் இன்று காணப்படும் ராட்டினங்கள் நெருப்பில் எறிக்கப்பட்டு எத்தனை காலமாயிருக்கும் என்பதையோசித்தால் தானகவே விளங்கும். ஆதலால்வருணாச்சிரமமும் ஜாதி முறையும் ஏழைகளை ஏமாற்றவும் அவர்கள் செல்வவான்களுடையவும் சோம்பேறிகளுடையும் சூழ்ச்சிகளையும் அறியாமல் இருக்கச் செய்யவும்பணக்காரர்களையும் பார்ப்பனர்களையும் காப்பாற்றவும் செய்யப்படும் தந்திரங்களே ஒழிய வேறில்லை. ஆகவே என்ன விலை கொடுத்தாவது இன்றைய காந்தியவர்களின் வருணாச்சிரம சுயராஜ்ஜியத்தையும் ஜாதிமுறை தொழில் ஆட்சியையும் அதையே திட்டமாக ஏற்றுக்கொண்ட காங்கிரசையும் மக்கள் ஒழித்தாக வேண்டியது சுயமரியாதையின்-சமதர்மத்தின் முதல்கடமையாகும்.

---

## காந்தியின் ஆலயப் பிரவேச நோக்கம்.

தோழர் காந்தியவர்கள் தாழ்த்தப்பட்ட தலைவர் ஒருவருக்கு ஆலயப்பிரவேச நோக்கத்தைப்பற்றி எழுதிய நோக்கத்தில் அடியில் கண்டகுறிப்புகள் காணப்படுகின்றன. அவையாவன:—"ஆலயப்பிரவேசத்தால் மட்டும் தீண்டாமை தீர்ந்து விடும்என்று நான் நினைக்கவில்லை" "ஆனல் பிறருடன் சரிசமமாக ஆலயப்பிரவேச உரிமை பெருதவரை தீண்டாமை தீராது" "ஆலயப்பிரவேசத்தால் பொருளாதாரம் கல்விமுன்னேற்றம் ஏற்படும்" என்ற குறிப்புகள் இருக்கின்றன. இவைகளில் எதாவது இன்றைய அநுபவத்திற்கு ஒத்து இருக்கின்றதா என்பதையோசிக்கவேண்டும். இந்து மதத்தில் தீண்டாத ஜாதியார் என்கின்ற கூட்டமல்லாமல் தீண்டக்கூடிய மக்கள் பல கோடிக்கணக்கான பேர்கள் ஆலயப்பிரவேச சம உரிமையை தாராளமாய்அநுபவித்து வருபவர்களாகவே இருந்தும் பல வகுப்புகளில் இன்று நூற்றுக்கு தொண்ணூற்றேழு பேர்கள்தற்குறிகளாகவும், நூற்றுக்கு தொண்ணூறென்பது பேர் போதிய இடமும் துணியும் உடையும் இல்லாமலும் அவர்களது பிள்ளை குட்டிகளுக்கு கல்வி கொடுக்கவோ நோய்க்கு மருந்துகொடுக்கவோ முடியாமலும் இருப்பதின் காரணம் என்னவென்று கேட்கின்ருேம். இன்று மக்களுக்கு பொதுவாக அதாவது இந்திய மக்களுக்கு மதம், ஜாதி, தீண்டாதவர் தீண்டக்கூடியவர் என்கின்ற பாகுபாடே இல்லாமல் நூற்றுக்கு தொண்ணூறு பேர்கள் மனிதத்தன்மையிழந்து மானத்தை விற்றுகஷ்டஜீவனம் ஜீவிக்கவேண்டியவர்களாகவும் அநேகர் அப்படிச்செய்தாலும் ஜீவிக்க முடியாதவர்களாகவும், மிருகங்களுக்கு இருக்கும் நிலைமையும் இல்லாமலும் இருந்துவருகிருர்கள். இதற்குக் காரணம் என்ன? இப்படிப்பட்டவர்களுக்கு என்ன மார்க்கம்? என்றுதான் கேட்கின்ருேம். ராட்டினத்தையும், கோவிலையும், காட்டுவது யோக்கியமான மார்க்கமா? மோசடியான மார்க்கமா? என்பதை வாசகர்களே யேசித்துப் பாருங்கள். இப்பொழுது தீண்டக்கூடிய மக்களுடைய பட்டினிக்கும், படிப்புக்கும் காந்தியார் கண்டு பிடித்த மருந்து ராட்டினமாகும். தீண்டப்படாத மக்களுடைய பட்டினிக்கும் படிப்புக்கும், காந்தியார் கண்டு பிடித்திருக்கும் மருந்து ஆலயங்கள் ஆகும். ஆகவே இந்த வைத்தியரின் சக்தியை நீங்களே மதியுங்கள். இந்த மாதிரி வைத்தியங்களால் காந்தியார் பணக்காரர்களுக்கும், பணக்காரர் கொள்கைகொண்ட அரசாங்கத்திற்கும் உள்ஆளாய் இருந்து உதவி செய்தவர் ஆகிருரா அல்லது ஏழைகளுக்கும்தீண்டப்படாத மக்களுக்கும் நண்பராய் இருந்து உதவிசெய்வாராகிருராஎன்பதைஉணர்ந்துபாருங்கள்.

# அவர்கள் ஏன் அப்படி! இவர்கள் ஏன் இப்படி!!

[தோழர் எஸ். வி. எஸ். இராமசாமி]

அவர்கள்:—உழுகிறார்கள், கொத்துகிறார்கள், விதைக்கிறார்கள், நடுகிறார்கள், உரிய காலத்து ஜலம் பாய்ச்சி வடிக்கிறார்கள், அறுக்கிறார்கள். பிரிக்கிறார்கள். தானியத்தைக்குன்றெனக்குவிக்கிறார்கள். இப்படிச்செய்கின்றவர்களுக்கு தினம் 1க்குஇரண்டு படி தானியமே கொடுக்கப்படுகின்றது. (தஞ்சைஜில்லாவில்)

இவன்:—ஆனால் யாதொரு வேலையும் செய்தறியான் அறுசுவைகளையும் பசியின்றி உண்கிறான். "மோட்டார்" 'ரேடியோ' 'கடற்காற்று' முதலிய நவீன சுகங்களையனுபவித்துத் திண்டில் சாய்கிறான். மாடியில் ஸ்பிரிங் கௌச்சில் ரஜாய் மெத்தையில் தூங்கி விழுகிறான், இப்படிப்பட்ட இவனே அவ்வளவு தானியத்துக்கும் உரித்தாளி என்று சொல்லி அவைகள் முழுவதையும் இவனே எடுத்துக்கொள்கிறான்.

ஆதலால் பாடுபடாத இவனுக்கு ஏனிப்படி? பாடுபட்டு உழைத்த அவர்களுக்கேனப்படி?

உழைப்பாளியாகிய அவர்கள்:—நாள் முழுதும் நெற்றி வியர்வை நிலஞ்சொட்ட தசைநார்கள் நார்பிரிகள் போலவெளியில் தெரிய பாடுபட்டு உழைத்து வீடுசேர்கிறார் இந்த இரண்டுபடி தானியம் வீட்டில் எத்தனை பேருக்கு? வரும் இன்னும் ஆடையின் தேவைவேறு அவசியமிருக்கிறது. ஜலம் போல் நீர்த்தகூழுக்கும் அவன் மக்கள் 'லபோ' கொட்டுகிறார்கள். அணிய ஒரு சிறுபழங்கந்தையுமின்றி, கையது கொண்டு மெய்யது பொத்திக் காலது கொண்டு மேலது தழுவி வாழ்கிறார்கள். அந்தோ! இதென்ன கொடுமை!!

இவன்:—உழைக்காத இவனோ, தனது எனச்சொல்லப்படும் போலி உரிமையால் எல்லா தானியத்தையும் விற்கிறான், தன் மனைவி மக்களுடன் அக்கார அடிசிலும் அல்வாவும் விழுங்கிக்கொழுக்கிறான், அவை செரிக்க, ஜீர்ணாமிருத லேகியம் வாங்கித்தின்கிறான் நவநவமான பட்டாடைகளில் பெரும்பணம் கொட்டுகிறான். இவன் மனைவி மக்களும் பொன்காய்த்தமரம் போல நிற்கிறார்கள்.

அவர்கள்:—கட்டிடங்கள் கட்டி ஆலைகள் பொருத்தி இயக்கியும் தங்கள் உயிரைக்கொடுத்து வேலை செய்தும் கோடிக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள சரக்குகளை உற்பத்தியாக்கி அதனால் பல லக்ஷம் ரூபாய்கள் லாபம் ஏற்படும்படியும்செய்து விட்டது அவர்களே, ஆனாலும் குறைந்த கூலியும் சம்பளப்பிடித்தமும், ஆட்குறைத்தலுந்தானே அவர்கள் கண்டது ஒரு சல்லியும் அதிகம் பெறுவது காந்தியால் ஏழைகள் சுகம் பெறுவது போலவேயாம்.

இவன்:—லாபமான அத்திரவியங்களை அவ்வேழைத்தொழிலாளரின் இரத்தத்தைப் பிழிந்தெடுத்த அந்த ரூபாய்களை, உழைத்து வேலைசெயயாது நிழலில் விழுந்து கிடக்கும இவன் அனுபவிக்கிறான். ரோல்ஸ்ராய்ஸ் காரில் உட்கார்ந்து பீச்சில் காற்று வாங்குகிறான்

அவர்கள்:—இரயில் வண்டிகள் என்ஜின்கள் செய்வதும், பாதைகள் செப்பனிட்டு, வண்டித்தொடர்களைச் செலுத்தியும், ஜனங்களையும் (Passengers) சாமான்களையும் (Goods) ஆங்காங்கு கொண்டு போய்ச் சேர்த்தும் அளவற்ற திரவியம் ஈட்டித்தருவது அவர்கள்.

இவன்:—அவர்களால் வயிறொடுக்கி, வாயொடுக்கிப் பெரும் பொருள் செலவில் கட்டப்பட்ட பிரமாண்டமான கட்டடங்களில், 'கிர்ரென்று' சுழன்று கொண்டிருக்கின்ற மின்சார விசிறிகளின் கீழ் அமர்ந்திருக்கும் இவன், அவர்களின் உழைப்பில் வந்த செல்வங்களையும், சுகங்களையும் அனுபவிப்பதுடன் கூலிக்குறைவு, ஆட்குறைத்தல் என்பவற்றின் பேரால் அவர்களின் கூலியைப் பெர்ஸண்ட், கணக்கில்குறைத்தும், ஆயிரக் கணக்கான ஏழைத் தொழிலாளரை வேலையை விட்டு விரட்டியடித்தும் அதனால் அவர்கள் பிள்ளை குட்டிகளுடன் உண்ண உணவும் உடுக்க உடையுமின்றித் திண்டாடித் தெருவில் நிற்பதை கண்களாரக் கண்டும் ரோம் பற்றி யெரிகையில் நீரோ பிடில் வாசித்து மகிழ்ந்தது போல மகிழ்கிறான், இவன்.

அவர்கள்:— வீடுகட்டுகிறார்கள். சும்மாயிருந்த இவன் போய் அதில் குடியிருக்கிறான். அவர்கள் குச்சு எனப்படும் குடிசைகளில் வெய்யிலும் மழையும் போட்டியிட்டு வாழ்கின்றன. அவர்கள் ஆடை நெய்கிறார்கள். ஆனால் அதை அணிய அவர்களுக்கு உரிமையில்லை! அணிவது இவனுக்குரியது. யாராவது மனமிரங்கிப் பிச்சையாக இட்ட பழங்கந்தைகளே அவர்களுக்குரியது. உணவுப் பொருள்களை விளை விப்பதும், விளைந்தவைகளை உண்ண யோக்கியமான ஆகாராதிகளாகச் சமைத்தலும் அவர்கள்வேலை. ஆனால் அவற்றைக் கஷ்டத்துடன் விழுங்குவது இவன் வேலை! ஒண்ட நிழலற்ற இருக்க இடமற்ற ஏழைத் தொழிலாளருக்கு; அவர்கள் நாளெல்லாம் பாடுபட்டு உழைத்தாலும் உடுத்த துணியுமில்லை குடிக்கப் போதுமான கஞ்சியுமில்லை.

பலன் பெறுவது—சுகம் அடைவது முதலாளிகளா?

பாடுபடுவது—பங்கமடைவது அடிமைத்தொழில் மக்களா?

முதலாளிகளென்று இச்சிலருக்கேன் இப்படி? தொழிலாளிகளென்ற அப்பலருக்கு ஏன் அப்படி?

பூர்வபுண்ணியம்பாவம்; பிரமனின் லபி; கடவுள்கட்டளை, அவரவர் ஊழ்வினை என்று பிதற்றுகிறீர்கள்! "அவர்கள் செய்தபாவம்— தீவினை;" "இவர்கள் செய்த தவம்:— நல்வினை," என்று உளறி ஏய்க்காதீர்கள்! பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து, 'உண்மை நெறியை" க்கண்டு செல்லுங்கள்! கஷ்டப்பட்டு உழைக்கும் ஏழைத் தொழிலாளரான அவர்களை இனி ஏய்க்காதீர்கள்.

——

## வேண்டுகோள்.

முந்திய வாரங்களில் நமது வேண்டுகோளின்படி தெரிவிக்கப்பட்ட சுயமரியாதைக்கிளைச்சங்கங்கள் 91. அதற்குப்பின் வந்த சங்கங்கள் பின்வருமாறு:—

92. திருத்துறைப்பூண்டி, 93. மகமதுசாகிபுபுரம், 94. மூலக்கொத்தளம் (சென்னை), 95. பட்டுக்கோட்டை, 96. வேங்கூர், 97. வாய்மேடு, 98. சங்கமங்கலம், 99. பட்டுக்கோட்டை (பனகால் அரசர் வாசகசாலை) 100. பெண்ணாடம், 101. பரங்கிமலை ஆதம்பாக்கம், 102. திருவத்திபுரம், 103. கிந்தா, ஈப்போ, 104. தெடாவூர், 105. பட்டுக்கோட்டை (சுயமரியாதைச் சங்கம்) 106. இராயகிரி, 107. பேரளம்.

மற்றுமுள்ள சங்கங்களையும் ... சங்கங்களையும், நிர்வாக சபை அங்கத்தினர்கள் பெயர்களையும் சீக்கிரம் தெரிவிக்க வேண்டுகிறோம்.

# கோயமுத்தூர் முனிசிபாலிடி.

## விளம்பரம்.

கோயமுத்தூர் முனிசிபல் சங்கத்தாருக்கு பாத்தியப்பட்ட மார்க்கட்டுகளில் 1933-34 வருஷத்தில் சுங்கம் வசூலிக்கும் பாத்தியதைகளுக்கு, சீல் செய்யப்பட்ட டெண்டர்கள் அடியிற் கையொப்பமிட்டவர் விலாசத்திற்கு 1933-ம் வருஷம் மார்ச்சு 6-ம் தேதிக்குள் சேரும்படி அனுப்பலாம்.

டெண்டரில் எவ்வளவு அதிகமான தொகைக்கு டி. பாத்தியதையை வைத்துக்கொள்ள முடியுமோ அந்த தொகையை குறிக்கவேண்டும். டெண்டர்கள் ரூ. 2500/- டிபாசிட்டு தொகையுடன் அனுப்பப்பட வேண்டியது. ஏல நிபந்தனைகள் ஆபீசில் தெரிந்து கொள்ளலாம்.

முனிசிபல் ஆபீஸ்,
கோயமுத்தூர்.
23—2—1933.

ஆர். கே. வெங்கடாசலம்,
வைஸ் சேர்மென்.

சென்னை

# சுயமரியாதை, 2-வது மகாநாடு.

5-3-33 ஞாயிறன்று நடைபெறும்.

சென்னை சுயமரியாதை, 2-வது மகாநாடு நாளது 5-3-33-ல் சென்னையில் நடைபெறும். பெரியோர்களான காஞ்சிபுரம் நாஸ்திகர் சி. கே. குப்புசாமி அவர்கள் தலைவராகவும், கே. வி. அழகர்சாமி அவர்கள் திறப்பாளராகவும், வி. பி. எஸ். மணியர் அவர்கள் வரவேற்புத்தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள். இம்மாகாணத்திலுள்ள சகல சுயமரியாதை இயக்கத் தோழர்களும் விஜயமாவார்கள்.

இப்படிக்கு,

எஸ். வி. லிங்கம்,

மகாநாட்டு சர்வாதிகாரி.

## மாமாங்க பகிஷ்காரசபை.

மகாமகத்தின் மடமையையும், புரட்டுகளையும், அதனால் மக்களுக்கு ஏற்படும் கஷ்ட நஷ்டங்களையும் வெளியாக்கி பிரசாரம் செய்வதற்காக மாயவரத்தில் மகாமக பகிஷ்காரசபை என்பதாக ஒரு சபை ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. அதன் மூலம் பல அரிய துண்டுப்பிரசுரங்கள் வெளியாக்கி ஆங்காங்கு அனுப்பப்படுகின்றன. துண்டுபிரசுரங்கள் வேண்டியவர்கள்

எம். கல்யாணசுந்திரம்,
காரியதரிசி மாமாங்க
பகிஷ்காரசபை மாயவரம்.

என்ற விலாசத்திற்கு ஸ்டாம்புடன் எழுதலாம். நன்கொடை அனுப்பக் கூடியவர்கள் அனுப்பலாம்.

—:0:—

## மன்னார் குடியில் சுயமரியாதைப்பிரசாரம்.

மன்னார்குடி கெருடஸ்தம்பத்தடியில் 17-2-33 வெள்ளிக்கிழமையன்று மாலை 6 மணிக்கு காரைக்குடி தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அதுசமயம் பூவாளூர் தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் "சமதர்மம்" என்பதுபற்றி பேசினார். பெருந் திரளான மக்கள் கூடியிருந்தார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் இரவு 9 மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

இரண்டாம் நாள் கூட்டம்.

மன்னார்குடி ரயிலடிபாலத்தின் அடியில் 18-2-33-ந்தேதி சனிக்கிழமை மாலை 2மணிக்கு காரைக்குடி தோழர் ப. ஜீவானந்தம் அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முகவுரையாக "தனிவுடமையும், பொதுவுடமையும்" என்பது பற்றி பேசினார். பின்னர் பூவாளூர்தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் தலைவிதியும், கடவுள் செயலும் என்பது பற்றி பேசினார். தலைவர் முடிவுரைக்குப்பின்னர் இரவு 9மணிக்கு கூட்டம் இனிது முடிவுற்றதென ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## விருதுநகர் க்ஷத்திரியப் பெண் பாடசாலை திறப்புவிழா.

முனிசிபல் ஆபீசுக்குப் பின்புறம் அருப்புக்கோட்டை ரஸ்தாவில் கட்டப்பட்டிருக்கும் க்ஷத்திரியப் பெண் பாடசாலை புதிய கட்டிடத்தை இராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் கனம் ஜெ ஸ்மேர O. B. E. I. C. S. அவர்களால் நாளது பிப்ரவரி மீ 26ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4-30 மணிக்கு திறந்து வைக்கப்படும். என டை சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

---

## சைதாப்பேட்டை. சுயமரியாதைப்பிரசாரம்.

சென்னை சைதாப்பேட்டை "பகுத்தறிவாளர் சங்கத்தின்" ஆதரவில் 16-2-33-ந்தேதி மாலை 6மணிக்கு தோழர் ப. ஜீவானந்தம்அவர்கள் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. அதுசமயம் தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் "சமதர்மம்" என்பது பற்றி பேசினார். தலைவர் முடிவுரைக்குப்பின் இரவு 8-30 மணிக்குக் கூட்டம் இனிது முடிவுற்றது. தோழர்கள் ப. ஜீவானந்தம் அ. பொன்னம்பலம் இரவு சைதாப்பேட்டையிலிருந்து மன்னார் குடிக்குப்பயணமானார்கள்.

## வட இந்திய சுற்றுப்பிரயாணம்.

திண்டுக்கல்லில் பிரபல இரும்பு, சாப் வியாபார செய்யும் தோழர் கா. த. ஒ. சோமசுந்தரம் அவர்களும், டையார் மகன்முத்துக்கருப்பனும்மதராசில் நடந்த நாடார் 14-வது கான்பரென்சுக்காக 28-12-32-ல் புறப்பட்டு மகாநாடு முடிந்தவுடன் 4-1-33-ல் புறப்பட்டு புனா, பம்பாய், கராச்சி, சக்கர், லாகூர், அமிர்தசரசு, டில்லி, அலிகர், ஆக்ரா, கான்பூர், பெனார்ஸ், போய் 10-2-33-ல் கல்கத்தா வந்திருக்கிறார்கள். இதை விட்டு டாட்டாநகர், ஹைதராபாத், பெஜவாடா, ராஜமகேந்திரம், பார்த்து மதராஸ் வந்து திண்டுக்கல் வர 15 நாள் செல்லும் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## பி. டி. குமாரசாமி செட்டியார் இலவசவாசகசாலை.

டை இலவசவாசகசாலையில் 18-1-33 ந்தேதி சனிக்கிழமை மாலை 7மணிக்குமேல் தோழர் சி. பார்த்தசாரதி நாயகர் அவர்கள் தலைமையின் கீழ் ஓர் கூட்டம் கூடியது. அக்கூட்டத்தில் தோழர் தி. வாசுதேவநாயகர் அவர்கள் டை வாசகசாலையின் முன்னேற்றத்தை பற்றியும் பண்டிதர் ஆ. கோவிந்தராஜிலுதாஸ் அவர்கள் கல்வியின் அபிவிருத்தியைப்பற்றியும் டை வாசகசாலையின் ஒழுக்கத்தைப்பற்றியும் விரிவாகப்பேசினார் பின்னர் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

ஒரு நிருபர்.

---

## சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்.

டைமன்றத்தின் வாராந்திரக் கூட்டம் 19-2-33 ஞாயிற்றுக்கிழமை மாலை 2-மணிக்கு தோழர் கெ. கிருஷ்ணசாமி அவர்கள் தலைமையில் கூடிற்று. அதுசமயம் தோழர் ஆர். எஸ். முத்து, டி. சம்பந்தம், ஜி. தங்கராஜ், எ. வேணுகோபால், கெ. எஸ். நாதன், பி. சந்திரசேகரன், பி. எஸ். சம்பந்தம், டி. ராதா கிருஷ்ணன் முதலியோர். "கல்விக்குத் தடை எது?" என்பது பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது கலைந்தது. என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## ஸ்ரீ வில்லிபுத்தூர்.

அறிவு வளர்ச்சி சங்கத்தில் 12-2-33-ந்தேதி தோழர் செல்லையா, அவர்கள் தலைமையில் கூடியது.

அச்சமயம் தோழர்கள் செல்லையா ஆனந்தர், எம். எஸ். நல்லதம்பி, செல்ல நாயகம் இவர்கள் முறையே "தீண்டாமை விலக்கின் அவசியம்" "பணக்காரன் சூழ்ச்சி" "கலப்பு மணத்தின் அவசியம்" என்பது பற்றி பேசிய பின் கூட்டம் இனிது முடிந்தது. என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## திறப்பு விழா.

சென்னை ஜார்ஜ்டவுன் சமரச சன்மார்க்க வாசகசாலையின் திறப்பு விழா 12-2-33-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை சென்னை ஏழுகிணற்று போலீசுக்கடுத்த மலையப்பன் வீதியுள்ள கார்போரேஷன் மாடல் பள்ளிக்கூடத்தில் தோழர் டி. சுந்தரராவ்நாயுடு பி. ஏ. பி. எல்., எம். எல். சி. அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுசமயம் தோழர் ஜே. சிவசண்முகம் பிள்ளை எம் ஏ. அவர்கள் டை வாசகசாலையின் திறப்புவிழாவை நடத்தினார். பறங்கிமலை தோழர் டி. ஜகநாதன், பி. ஏ. பி. எல். அட்வகேட் அவர்கள் கொடியேற்றினார். எஸ். ஜி. வேதமாணிக்கம் வீ. ஜ. முனிசாமிபிள்ளை ஆர். சீனிவாசராவ், தே. சி. கங்காதரபாலதேசிகர் ஆகியவர்கள் கல்வியைப்பற்றி நீண்டநேரம் சொற்பொழிவாற்றினார்கள். பிறகு தோழர் எஸ். பி ஐ. பாவகுருசிவம் மதக்கல்வியைப்பற்றியும், சுயமரியாதையை ஒவ்வொரு மனிதனும் அனுசரிக்க வேண்டுமென்பதையும் மிக உறுக்கமாகப் பேசினார்கள் அதுசமயம் தோழர் அ. பொன்னம்பலனார், ஜீவானந்தம் மற்றுமுள்ள சுயமரியாதை தோழர்கள் விஜயம் செய்திருந்தார்கள். கூட்டம் இரவு 7மணிக்குக்கலைந்தது. 8மணிக்கு டை வாசகசாலையின் பிள்ளைகளால் தென்னாலிராமன் என்னும் நாடகத்தை நடத்தினார்கள். என ஒரு நிருபர் எழுதுகிறார்.

---

## கூட்டுறவு மகாநாடு.

வட ஆற்காடு ஜில்லா பதினைந்காவது கூட்டுறவு மகா நாடு நாளது 1933ம் வருஷம் மார்ச்சுமாதம் 5, 6ம் தேதி ஞாயிறு, திங்கள் கிழமைகளில் ஆரணியில் நடைபெறும். சென்னை அரசாங்க மாஜி மந்திரி திருவாளர் எ. ரங்கனாத முதலியார் அவர்கள் பி. ஏ. பி. எல். எம். எல். சி. தலைமை வகிப்பார்கள். சென்னை அரசாங்க வளர்ச்சித் துறை அமைச்சர் கனம் பி. டி. ராஜன் B. A (Oxon) Bar-at-law அவர்கள் மகாநாட்டைத்திறந்து வைக்க அன்புடன் இசைந்துள்ளார்கள். விவசாய, கைத்தொழில், சுதேசி, கண்காக்ஷிகளும் அதுசமயம் நடைபெறும் என டை மகா நாட்டின் நிர்வாகஸ்தர் அறிவிக்கிறார்.

---

## தஞ்சை. தீண்டப்படாத கிறிஸ்துவவாலிபர் சங்கம்

டைசங்கத்தின். 1933 வருஷம் பிப்ரவரி மாதம் 11ந் தேதி சனிக்கிழமை சாயங்காலம் 5மணிக்கு தஞ்சை முனிசிபல் கவுன்சிலர் தோழர் மகாலிங்கம் அவர்களுடைய இல்லத்தில் கூடிற்று. தோழர் எ. சவுரிநாதன் அவர்கள் சங்கத்தின் தலைவராக எல்லோராலும் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

(8ம் பக்கத்தொடர்ச்சி)

யாருக்கும் அதிகாரமில்லை என்று சொல்லித்தானாக வேண்டும் பிறகு அந்தப்படி நடக்காதவனையோ, அல்லது அந்தக் கர்த்தாவை ஒப்புக் கொள்ளாதவனையோ வைய வோ கொலை செய்யவோ முயற்சித்தாக வேண்டும். இவ்வளவும் வும் மாத்திரம் அல்லாமல் அந்த வேதத்திற்கு சுயநலக்காரர்கள் சோம்பேரிகள் ஆகியவர்கள் தங்கள் நலத்துக்கு ஏற்ற மாதிரியாகச் செய்து கொள்ளும் கருத்தை எவனுவது மாற்றிச் சொன்னால் அது எவ்வளவு உண்மையாய் இருந்தாலும் அவன் மீது பாய்ந்து தான் ஆகவே இந்தப்படி தான் இது வரை நடந்து வந்திருக்கிறது. ஆகவே எந்த வழியில் எந்த மாதிரியில் எவ்வளவு நல்ல முறையில் கடவுளையும், மதத்தையும், வேதத்தையும் சிருஷ்டித்துக் கொண்டாலும் அது மனித சமூகப் பெரும்பான்மை மக்களுக்கு ஆபத்தையும், கேட்டையும் பிரிவினையும் முரட்டுத்தனத்தையும் குரோதத்தையும் அடிமைத்தனத்தையும் உண்டாக்கியே தீரும். இதுவே இன்றைய எல்லா மதத்தினுடையவும் அனுபோகம்! பிரத்தியட்ச அனுபோகம்!!

ஆதலால், கடவுள், மதம், வேதம் என்கின்றதான கற்பனைகளை ஒழிப்பதும் அழிப்பதும் தான் மனிதனுக்கு உண்மையான விடுதலையே ஒழிய மனிதனை கடவுள் உணர்ச்சியில் புகுத்தி மத வெறியில் ஆழ்த்தி வேதத்திற்கு அடிமையாக்கி கல்லில் முட்டிக் கொள்ள கோவிலுக்குள் தள்ளுவது மிகவும் மோசமும், கெடுதியுமான காரியமாகும் என்பதாக பேசினார். பிறகு காரியதரிசி மாதவன் எல்லோருக்கும் நன்றி கூற மகாநாடு 8 மணிக்கு முடிவடைந்தது அன்று இரவு புத்த சரித்திரத்தில் குமார ஆசானால் தொகுக்கப்பெற்ற ஒரு பகுதியான "கருணை" என்னும் நாடகம் நடித்துக் காட்டப்பட்டது. பிறகு ஈ. வெ. ராவும், நாகப்பட்டணம் மணியும், மறு நாள் காலை ஈரோட்டிற்குப் பிரயாணமானார்கள்.

---

## அடுத்தவாரம்

தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்களின் சேலம், இராசிபுரம் முதலிய இடங்களில் நடந்த பொதுக் கூட்ட நிகழ்ச்சிகளும், காவேரிப் பத்திரங்களுக் களித்த பதிலும், அடுத்த வாரம் வரும்.

## திருப்பூர் முனிசிபல் கௌன்சிலர் வெற்றி.

திருப்பூர் முனிசிபல் கௌன்சிலராக திருப்பூர் தாலூகாபோர்டு தலைவர் தோழர் ஆர். வி. ராமசாமிக்கவுண்டர் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

## பட்டுக்கோட்டை.

### பனகாலரசர் வாசகசாலை

14-2-33 செவ்வாய்க்கிழமை மாலை 6-மணிக்கு சங்கக்கட்டிடத்தில் உபதலைவர் எஸ். அருணாசலம் அவர்கள் தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் முகவுரைக்குப் பின் தோழர் ஆர். தங்கவேல் அவர்கள் சங்க முன்னேற்றம் யென்பது பற்றியும், எஸ். சொக்கலிங்கம் அவர்கள் வாலிபர்கள் கடமை யென்பது பற்றியும், பி. எஸ். லிங்கம், சாமிநாதன் ஆகிய இருவரும் மனிதர் நிலை யென்பது பற்றியும், கெ. எஸ். எஸ். கிருஷ்ணன் அவர்கள் சங்க அமைப்பு என்பது பற்றியும் பேசிய பின்னர் தலைவர் முடிவுரையுடன் 10.30 மணிக்கு கூட்டம் முடிவுற்றது. என காரியதரிசி எழுதுகிறார்.

## வாய்மேடு

### சுயமரியாதைச்சங்கம்.

12-2-33 தேதி திருவப்பட்ட துதோழர்கள் எ. சிதம்பரம், ஆர். மாணிக்கம், எஸ். நல்லபெருமாள், வி. கோவிந்தன், எ. அருணாசலம் முதலியோர்கள் காரிய நிர்வாகஸ்தர்களாகவும், தோழர்கள் சி. இலக்குவன், பி. எஸ். சதாசிவம் இவர்களை கூட்டுக்காரிய தரிசிகளாகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் மகா மகத்தின் வண்ட வாளங்களைப்பற்றி பேசியபின் கூட்டம் இனிது கலைந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## சுயமரியாதைத் தோழர்கள் சுற்றுப்பிரயாணம்.

சுயமரியாதை இயக்கத்தோழர்களான பட்டுக்கோட்டை கே. வி. அழகர்சாமி, நாகை என். பி. காளியப்பன், மாயவரம் எஸ். வி. லிங்கம், பூவாளூர் அ. பொன்னம்பலம் ஆகியவர்கள் கீழ்கண்ட இடங்களில் சுற்றுப் பிரயாணம் செய்வார்கள்.

24-2-33 வெள்ளிக்கிழமை- காஞ்சிபுரம் 25-2-33 சனிக்கிழமை சென்னை 26.2-33 ஞாயிற்றுக்கிழமை- திருவல்லிக்கேணி கடற்கரை 27-2-33 திங்கட்கிழமை- வேலூர் 28-2-33 செவ்வாய்க் கிழமை- ஆரணி.

இவ்விபரப்படி ஒவ்வொரு தினம் மாலை. 6-மணிக்கு முறையே இயக்கத் தோழர்களால் "சுயமரியாதை இயக்கம்" "சமதர்மம்" என்பது பற்றி பிரசங்கங்கள் நடைபெறும்.

(குறிப்பு) கும்பகோணம் மகா மக பகிஷ்காரத்துண்டுப் பிரசுரங்களும் வழங்கப்படும் மற்று வேறு பலயிடங்கட்குச் செல்லும் விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

---

## மதிப்புரைகள்.

### வர்த்தகஊழியன்.

திருச்சியினின்று தோழர் டி. வி. கே. நாயடு அவர்களை ஆசிரியராகக் கொண்டு வெளிவரும் வர்த்தக ஊழியன் என்ற மாத சஞ்சிகை வரப்பெற்றோம். இதில் வர்த்தக முன்னேற்றங்கருதிய கட்டுரைகள், செய்திகள் முதலியன காணப்படுவதோடு வர்த்தகசம்பந்தமான கணக்குகள் ஏற்றுமதி, இறக்குமதி சரக்குகள் முதலியன பல புள்ளி விபரங்களோடு காணப்படுகின்றன. வியாபாரிகளுக்கும், தொழிலாளிகளுக்கும் மிகவும் உபயோகமானது.

விலை பிரதி 1'க்கு 1அணா
வருட சந்தா ரூ 1—0—0
விலாசம்:—மானேஜர்,
வர்த்தக ஊழியன்,
திருச்சி.

### ஞானதீபம்.

கொளும்பினின்று வெளியாகும் ஞான தீபம் என்னும் மாதசஞ்சிகை வரப்பெற்றோம். இதில் முஸ்லீம்களுக்கு உபயோகமான பல கட்டுரைகளும் செய்திகளும் காணப்படுவதோடு இஸ்லாத்தின் கொள்கைகள், நபிகள் நாயகத்தின் மார்க்க போதனைகள் முதலியன விளக்கப்பட்டுள்ளன. இதன் ஆசிரியர் தோழர் எம். எச். மாதர்சாகிப் அவர்களாகும்.

விலாசம்:—
ஞான தீபம்.
41. கிராண்ட்பாஸ் ரோடு, கொளும்பு.

### "நாவலர் நடைப்பாங்கு"

என்ற சிறியநூல் ஒன்று மதிப்புரைக்காக வரப்பெற்றோம். அஃது கொழும்பு விவேகானந்தசபையின் மூலம் குற்றம்புரிந்ததாக தண்டிக்கப்பட்ட சிறைச்சாலையிலுள்ள மக்களுக்கு நல்லுபதேசம் புரிந்து வரும், சமூக சீர்திருத்த விருப்பமுடையாரும், தமிழ்ப்பண்டிதருமான தோழர். சி. சரவணனுர் என்பவரால் தனித்தமிழ்க்காதலோடு எழுதப்பட்டிருக்கிறது. இந்நூலில் தமிழ்மொழிக்குப் பெருந்தொண்டாற்றிய ஆறுமுகநாவலர் அவர்களின் உரை நடையை வியந்து அவர்களெழுதிய நூற்களைப்புகழ்ந்தும், தமிழுக்கு தொண்டாற்றிய பல அறிஞர்களைப்போற்றியும், கடவுள் தன்மையைப்பற்றிஆறுமுகநாவலரின் கருத்தும் மடாதிபதிகளின் மடமையைக்குறித்து ஆறுமுக நாவலர் எழுதிய கண்டனக்குறிப்புகளையும் நாவலரைப்பற்றி காலஞ்சென்ற தமிழறிஞர்களின் புகழுரைகளையும் புகுத்தி இந்நூல் ஆக்கப்பட்டிருக்கிறது. நாவலரின் தமிழ்த் தொண்டையும், தமிழ்மொழியின் நடைப்பாங்கையும் இந்நூலாசிரியர் தனித்தமிழ் தன்மையும் அறிய விரும்புவர்க்குஇந்நூல் பெரிதும் பலன் கொடுக்கும் என்பதில் சிறிதும் ஐயமின்று. இதன் விலைபத்துச்சதம், விரும்புவோர் சி. சரவணனுர், விவேகானந்தசபை கொழும்பு என்ற விலாசத்திற்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

---

### யாதார்த்த பிராமண வேதாந்த விபரம்.

மேற்கண்ட புத்தகம் ஒன்று நமது பார்வைக்கு வரப்பெற்றோம். இது ஆண்டர்சன்பேட்டை சித்தார்த்தா புத்தகசாலையின் வெளியீடுகளில் ஒன்றாகும். இதில் உண்மை பிராமணன்யார்? அவன் எப்படி இருக்க வேண்டும்? அவன் மக்களுக்கு எவ்வகையில் சேவை புரியக்கடமைப்பட்டுள்ளான் என்பன போன்றவை தெளிவாய் விளக்கப்பட்டிருப்பதோடு வேஷபிராமணர்களின் சூட்சியும், பிராமணர்கள் என்றும், முகத்தில் பிறந்தவர்கள் என்றும் சொல்லிக்கொள்ளும் பிராமணர் தற்காலம் எவ்வாறு ஆசாரம் விட்டு, அனுஷ்டானம் கெட்டு, பிராமண தர்மத்திற்கு விரோதமாய் தொழில் புரிந்து, சேவகம் செய்து ஆசார ஹீனர்களாயிருந்து வருகிறார்கள் என்பதும் சுருதி, ஸ்மிருதி, புராணம், சித்தர்கள் பாடல்கள் முதலிய மேற்கோள் உதாரணங்களால் விளக்கப்பட்டிருக்கிறது. ஜாதிப்பாகுபாடு சமயவேற்றுமை, உயர்வுதாழ்வுக்கொடுமை முதலியவற்றிற்கு இந்த வேஷப்பிராம்ணீயமே காரணமென்பதும் வற்புறுத்தப்பட்டிருக்கிறது. நரகம் மோட்சம், பாபம், புண்ணியம், பேய் பிசாசு முதலியனவெல்லாம் பிராமணீய தந்திரமும் சூட்சியுமெனக்காட்டப்பட்டுள்ளது. உண்மையறிந்து நம்மை நாமறிய இஃதோர் சிறந்த புத்தகமாகும். இதன் விலை அணா 3

விலாசம்
சித்தார்தா புத்தகசாலை.
ஆண்டர் சன்பேட்டை.
கோலார் தங்கவயல்.

### "நகரதூதன்."

மணவை தோழர் ரெ. திருமலைசாமி அவர்களை ஆசிரியராகக்கொண்டு திருச்சியிலிருந்து வெளிவரும் நகரதூதன் என்னும் வாரப்பத்திரிகை சில மாதங்களாய் நின்றிருந்து இவ்வாரம் மீண்டும் வெளிவந்துளது. அதன் முதல் இதழ் வரப்பெற்றோம். சாதாரணமாய் பத்திரிகைகளுக்கு ஏற்படும் தொல்லைகளும், கஷ்டங்களும் நகரதூதனுக்கு அடிக்கடி ஏற்படுவது கண்டு விசனிக்கிறோம். இனிமேலாவது எவ்வித இடையூறுகளுமில்லாது சரிவர நடக்குமென்று நம்புகிறோம்.

வருட சந்தா ரூ 2—0—0
விலாசம்
மானேஜர்
"நகரதூதன்."
உறையூர் திருச்சி.

## திருச்சி.
### திராவிட முன்னேற்ற சங்கம்.

12- -33-தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 7.30 மணிக்கு ஷை சங்கத்தின் ஆதரவில் ஒரு பொதுக் கூட்டம் கூடியது. கூட்டத்திற்கு தோழர் கெ. நஞ்சையன் அவர்கள் தலைமை வகித்தார். தோழர்கள் பி. சுப்பையன், எஸ். மதிவாணன் ஆகியவர்கள் இனிய சுயமரியாதைக் கீதங்கள் பாடினார்கள். தலைவர் முகவுரையாகச் சிறிது பேசிய பின் கோவை சுயமரியாதை வாலிபர் சங்கக் காரியதரிசி தோழர் ஆர். கிஸன் அவர்கள் "மதமும், மனித வாழ்க்கையும்" என்னும் பொருள் பற்றி சுமார் 1 30 மணி நேரம் பேசினார். அதில் மக்களிடை சமத்துவ உணர்ச்சியும், சமதர்ம நோக்கமும் பரவுதற்கு மதங்கள் அடியோடு ஒழிந்தாக வேண்டும் என்பதை வலியுறுத்திக் குறிப்பிட்டார். பின்னர் தலைவர் முடிவுரை கூற வந்தனோபசாரத்துடன் இரவு 9 30-மணிக்கு கூட்டம் இனிது முடிந்தது என ஒரு நிருபர் எழுதுகிறார்.

## மணமகள் தேவை.

சோழிய வேளாளர் வகுப்பில் தோன்றியவரும், 25, வயதினையுடையவரும், போஸ்ட்மேன் தொழில் 7, வருடம் சர்வீஸ் உடையவரும் மாதச் சம்பளம் ரூ-22 உடைய வாலிபரொருவருக்கு, மணமகள் தேவை.

மணமகள்:— 20 வயதிற்கு உட்பட்டவரும், சோழிய வேளாள வகுப்பைச் சேர்ந்தவராகவும், சுமாரான படிப்புள்ள வராகவும், நற்குணமுடையவராகவும் இருத்தல் வேண்டும்.

மணம் பூரண சுயமரியாதை முறையில் நடைபெறும். [illegible] இரகசியமாக வைக்கப்பட்டு வேண்டுவன செய்யப்படும். பதிலுக்கு 0-1-3 தபால் தலை வைத்து அனுப்ப வேண்டும்.

விலாசம்:—

ச. ம. சி. பரமசிவம்
காரியதரிசி
தமிழ்நாடு புரோகித மறுப்புச்சங்கம்,
22 பாளையப்பஜார்
உறையூர், திருச்சி.


## அமுத ரத்னாகரம்.

(சிறந்த தாது புஷ்டி லேகியம்)

[illegible] வயோதிகருக்கும் நல்ல [illegible] கொடுத்து, உயிர் [illegible] சக்தியைப் பெருக்கி, ஆயுளை வளர்க்கும். 40 நாள் சாப்பிட்டபின் உடலின் நிறை அதிகப்படா விட்டால் பணம் வாபஸ் தருகிறோம்

40 நாளுக்கு ரூ. 4 20 நாளுக்கு ரூ. 2--4—0.

## இன்பமணி.

ஸ்வப்னஸ்கலிதம், தாது நஷ்டம், நரம்புத்தளர்ச்சி முதலியவைகளை நீக்கி, பூரண இன்பசுகம், வாலிபத்தன்மை, திட காத்திரம் ஆகியவைகளை அளிப்பதில் இதற்கிணையானவை வேறொன்றும் கிடையாது. 30 மாத்திரை ரூ. 5—0—0.

## ஜீரணாதி.

(ஒப்பற்ற மலச்சிக்கல் நிவாரணி)

உண்ட உணவைச் செரிக்கச் செய்து தினந்தோறும் மலத்தைக் கழிக்கும். மலச்சிக்கலினால் உண்டாகும் நோய்கள் எதுவாக இருந்தாலும் தவறாமல் குணமாக்கும். பசியின்மை, நெஞ்செரிவு, புளிச்ச ஏப்பம், வயிற்றுவலி, குன்மம், வாந்தி, அஜீரணம், தூக்கமின்மை, அசதி ஆகிய நோய்களையும் கண்டிப்பாய் நீக்கும். விலை ரூ. 2.

சித்தானந்த வைத்தியசாலையில் செய்யப்பட்டது.

சகல வியாதிகளுக்கும் உத்தரவாதமும், குணமுமுள்ள மருந்துகள் [illegible] விபரத்திற்கு எழுதுங்கள். மலாய் நாட்டு வாசிகள் அட்வான்சுடன் ஆர்டர் அனுப்பவேண்டும். [illegible] இனாம்.

ஏஜண்ட், அருணகிரி அண் கோ.,

தபால் பெட்டி 2[illegible], நெ. 49 லிங்கசெட்டி தெரு, சென்னை.



# The Rational Books Publishing Society Ltd.

## பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.

தலைமை ஆபீஸ்: ஈரோடு

—:0:—

மூலதனம்: ரூ. 30,000.

பங்கு 1க்கு ரூ. 10 வீதம் கொண்ட 3000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது.

பங்குப்பணங்கள் 4 தடவையாக வசூலிக்கப்படும்.

தமிழ்ப்பாஷையின் அபிவிருத்தியையும், மக்கள் முன்னேற்றத்தின் அவசியத்தையும், அறிவு வளர்ச்சியையும் கருதி சிறந்த இங்கிலீஷ் நூல்கள் பல வற்றையும் மற்ற பாஷைகளிலுள்ள பகுத்தறிவு நூல்களையும் விஞ்ஞான நூல்களையும் தமிழில் மொழிபெயர்த்தும் வெளியிடவும் தமிழிலுள்ள அறிவின் நூல்களை எளிய பாஷைகளில் மொழிபெயர்த்து வெளியிட்டும் மூட நம்பிக்கைகளையும் குருட்டுப் பழக்க வழக்கங்களையும் ஒழித்து எங்கும் பகுத்தறிவு ஜோதி தோன்றச் செய்ய உழைக்கும்.

பகுத்தறிவு இயக்க அபிமானிகள் தங்களாலியன்ற பங்கெடுத்து இக்கழகத்தை ஆதரிக்குமாறு விரும்பிக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

அப்ளிகேஷனுடன் பங்கு ஒன்றுக்குள்ள ரூ. 10ல் ரூ. 2½ வீதம் எடுத்துக்கொண்ட பங்குகளுக்குரிய முதல் வாய்தா பணம் செலுத்தவேண்டும்.

குறிப்பு:— விபரம் அறிய விரும்புவோர் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதிக்கொள்ளவும்.

அ. இராகவன்,
காரியதரிசி, பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,
43, கச்சேரி வீதி, ஈரோடு.



## டாக்டர் சிங்காரம் அவர்களின் கெந்தக நெய்.

இம்மருந்தால் குணமாகும் நோய்கள்.

செம்மேகம், கருமேகம், மேக ஜுரம், தடிப்புடன் கூடிய மேகப்படைகள், கண்டமாலை, விப்புருதி கட்டிகள், வலி குன்மம், கிரந்தி, குஷ்டம், விரணப்புற்று, சூலை கணுச்சூலை, பாரிச வாய்வு, முடக்கு வாய்வு, சரீரத்தில் ஸ்பரிச உணர்ச்சியில்லாதிருத்தல், கை கால் பிடிப்பு, மதமதப்பு, திமிர் வாய்வு, புண், புரைகள் ஆறாத ரணங்கள், நரம்பு பிடிப்பு முதலிய பலவித கடின நோய்களை குணம் செய்யும். இரத்தத்திலுள்ள எவ்வித துர் நீரையும் போக்கி சரீரத்திற்கு நல்ல தேஜஸைக் கொடுக்கும். பத்தியமில்லை.

60 வேளை மருந்து விலை ரூ. 10—0—0.
20 ,, ,, 4—0—0.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்.

மலாய்நாட்டு வாசிகள் ஆர்டருடன் முன்பணம் அனுப்பவும்.

முழுவிலாசம் தெரிவிப்பவர்களுக்கு கேட்லாக் இனமாய் அனுப்பப்படும்.

டி. சி. சிங்காரம் அன் கோ.,
சித்த-ஆயுர்வேத வைத்தியசாலை,
தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி

## தென்னிந்திய செங்குந்தர் 4-வது மகாநாடு வரவேற்பு க்கழகத்தார்க்கு ஓர் வேண்டுகோள்.

செங்குந்தர்மகாநாடுகூடப்போவது கேட்டுபெருமகிழ்வடைகிறோம். ஆயினும் நெடுநாட்களாக புறக்கணிக்கப் பட்டுவரும் மிகமுக்கியமான விஷயத்தை இவர்களும் புறக்கணிக்காதபடி இவர்களுக்கு ஞாபகமூட்டுகிறேன்.

ஒரு தேசமோ, ஒரு சமூகமோ முன்னேறுவது அத்தேச சமூகபெண்கள் நிலையைப்பொருத்துள்ளது. பெண்கள் அறிவுவாய்ந்தவர்களாய், உலகப்போக்கை உணர்ந்து அதற்கேற்ப வாழ்க்கையை ஒழுங்கு படுத்தினவர்களாய், தேசத்தோடொப்பத் தாங்களுந்திருந்தி உலகசேவையின் முன்னணியில் நிற்கவேண்டு மென்ற உணர்ச்சியுடையவர்களாய், பழைய குருட்டுப் பழக்க வழக்கங்களையும் மூலையிலேயே முடங்கிக் கிடக்கவேண்டுமென்ற முட்டாள் கொள்கையினையும் விட்டவர்களாய் அறிவினலாய்ந்து நடக்கும் ஆண்மையுடையவர்களாய் எந்நாட்டில் எச்சமூகத்தில் இல்லையோ அந்நாடும் அச்சமூகமும் முன்னுக்கு வருவது முடியாத காரியம். ஆனல் இதனை செங்குந்த குலாபிமானிகளுடைய தலைமைச்சங்கத்தினரும்மறந்துவிட்டது வருந்தத்தக்கது. சமூக வாலிபர், வர்த்தகர் மகாநாடுகளைக் கூட்டுகிறார்களே ஒழிய பெண்கள் மகாநாட்டை இதுவரை கூட்டவில்லை. இவ்வாண்டும் கூட்டுவதற்கான முயற்சியைக்காணேம். நன்கு யோசித்து பெண்கள் மகாநாட்டைத் தவறுமல இவ்வாண்டு கூட்டும்படிவரவேற்புக்கழகத்தாரையும் தலைமைச்சங்கத்தாரையும்வேண்டுகிறேன் எனகாஞ்சி மா. அபிராமி அம்மாள் எழுதுகிறார்.

### திருமயம் வாலிபர் முன்னேற்றசங்கம்.

15-2-33 புதனன்று மாலை 5-30 மணிக்கு ஷை சங்க மாதாந்திரக் கூட்டம் மனவாளி நந்தவனத்தில் கூட்டப்பட்டது தோழர்எஸ். என். ராஜன் தலைமை வகித்தார். அதில் சங்க மெம்பர்களும், இதரர்களும்கலந்து கொண்டனர். பின்பு சங்கத்திற்குக் கட்டிடம் ஒன்று கூடிய சீக்கிரத்தில் அமைப்பதென்றும், அதற்கு வேண்டிய பொருளுதவிபுரியும் படி எல்லோரையும் கேட்டுக் கொள்வதெனவும் தீர்மானித்து பின் சமபந்தி சிற்றுண்டி வழங்கப்பட்ட பின் கூட்டம் இனிது கலைந்தது. என ஒரு நிருபர் எழுதுகிறார்


## ஏஜண்டுகள் தேவை

சென்னை மாகாணத்தில் சிறந்த தேசிய "வெடிகுண்டு" என்னும் தமிழ்வாரப்பத்திரிக்கைக்கு இன்றே நான்கு வாரத்திய பிரதிகளுக்கு அட்வான்ட்சாக முன்பணம் கட்டி நமது ஏஜண்டாக பதிவுசெய்துக்கொள்ளுங்கள். ஏஜண்டுகளுக்கு மாத்திரம் பிரதி ஒன்றுக்கு இரண்டு பைசாவீதம் கமிஷன் கொடுக்கப்படும். வருட சந்தா ரூ2—0—0 ஆறமாதத்திற்கு 1—1—0 வெளிநாடுகளுக்கு வருட சந்தா ரூ3—0—0. தனிப்பிரதி விலை அரையணு. முன்பணம் கட்டாத எந்தஆர்டர்களையும் அங்கீகரிக்கப்படமாட்டா.

மானேஜர்
"வெடிகுண்டு"
தெற்குவாசல், மதுரை.



# லெனினும், மதமும்



இது ரஷிய தேசத்தின் மதப்பித்தையும், பாதிரிகள் புரட்டையும் ஒழித்து, கொடுங்கோலரச குடும்பத்தை வேறுடன் விழக்கி ஏழை பணக்காரத்தன்மையை அழித்து, தோட்டி முதல் ஆண்டவர் வரை எல்லோருடைய வாழ்க்கையையும் ஒரே மாதிரியாக்கி தொழிலாளிகளால் தேசம் முழுவதும் ஆக்ஷி புரியும்படி செய்த ஒப்பற்ற பொது உடமைக்கொள்கை வீராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழி பெயர்ப்பாகும். இதை வாங்கிப் படிப்பவர்களுக்கு மதத்தைப்பற்றி சுயமரியாதை இயக்கத்தாரின் கொள்கை என்ன என்பதும், அவர்கள் ஏன் தங்களை நாஸ்திகர்கள் என்று சொல்லிக்கொள்ளுவதில்லை என்பதும், பின்னை ஏன் அவர்கள் நாஸ்திகப்பிரசாரம்செய்பவர்களாகக்காணப்படுகிறார்கள என்பதும், சுயமரியாதை இயக்கக்காரர்கள் காங்கிரசையும், காந்தீயத்தையும், தேசியத்தையும் ஏன் குற்றம் சொல்லுகிறார்கள் என்பதும், காந்தியின் குருவென்னும் டால்ஸ்டாயை ரஷியர்கள் ஏன் வெறுத்தார்கள் என்பதும் நன்ருய் விளங்கும். மற்றும் தொழிலாளிகளும் சரீரத்தினல் பாடுபட்டு உழைக்கும் மக்களும், பாடுபட்டு அப்பாட்டின் பயன்பெருமல் கஷ்டப்படக் காரணம் என்ன என்பதும், அவர்கள் விடுதலையடைய மார்க்கம் என்ன என்பதும் நன்ருய் விளங்கும். ஆகவே இப்புத்தகத்தை ஒவ்வொரு தொழிலாளியும், ஒவ்வொரு சுயமரியாதைக்காரரும் அவசியம் படிக்கவேண்டியதாகும்.

சுமார் 100 பக்கங்கள் கொண்ட பிரதி 1-க்கு விலை அணு 0—4—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கும், சுயமரியாதை சங்க அங்கத்தினர்களுக்கும் விலை அணு 0—3—0
விலையுடன் ஒரு அணு ஸ்டாம்பு சேர்த்து அனுப்புகிறவர்களுக்கு புக்போஸ்டில் அனுப்பப்படும்.

மானேஜர்,
குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

அவசியமான கல்வி பொருளாதாரம் அரசியல் போன்ற முன்னேற்றங்களை நசுக்கி அவர்களுக்கு அடியோடு ஒன்றுமில்லாமல் செய்யவும், தாழ்த்தப்பட்ட சமூகத்துக்கு இருந்து வரும் தீண்டாமையை "பிராயச்சித்தம்" என்பதின் பெயரால்ஸ்திரப்படுத்தியும் அவர்களுடைய அவசியமான விடுதலையில் அவர்கள் நாட்டம் கொள்ளாமலும் அவர்களுடைய விசேஷ காலத்தை இவ்வியர்த்தமான சேவையில் செலவழித்து இறுதியில் தாழ்த்தப்பட்டவர்களுடைய பழைய நிலையில் கொஞ்சம்கூட மாறுதலில்லாமல் "அவர்கள் பிறவியின் பயனை, அனுபவிக்கவேண்டியதற்கும், இரண்டாவது லண்டன் மகாநாட்டிலும் பிறகு பட்டினி கிடந்தும் தோல்வியடைந்த காரியத்தை ஆலய தரிசனத்தின் பெயரால் நிறைவேற்றவே தோழர் காந்தியால் செய்யப்படும் சூழ்ச்சி! சூழ்ச்சி! சூழ்ச்சி! என்பதை தாழ்த்தப்பட்டவர்கள் உணரவேண்டும். அருணோதயத்துக்குப் பின் சூரிய உதயமாவது போல் ஆலய தெரிசன உரிமை ஆதிதிராவிடர்கள் பெற்றுவிடில் அரசியல் பொருளாதாரக் கல்வி தானாகவே தோன்றி விடுமென்று காந்தி சொல்லுவதில் ஏதாவது கடுகளவு நியாயமிருக்கிறதா என்பதை தாழ்த்தப்பட்டவர்களும், அவர்களை அனுதாபித்து காந்தியை பின்பற்றுகிறவர்களும் கவனிக்க வேண்டும். இதுவரை ஆலய தரிசனத்துக்கு உரிமை பெற்றவர்கள் என்று சொல்லிக்கொண்டு திரியும், சைவத் திருமேனிகள், வைஷ்ணவஸ்தர்கள் போன்ற சாதி இறுமாப்புடைய இந்துக்களில் எவ்வளவு பேருக்கு கல்வி, பொருளாதாரம் எல்லாம் தானாக வந்திருக்கிறதென்பதை தோழர் காந்தியைக் கேட்பதில் குற்றம் ஒன்றுமே இல்லை.

தோழர். காந்தியார் சுயராஜியத்துக்கு கிளர்ச்சி புரியும் காலத்தில் சமூக ஊழல்களையும், தீண்டாமையையும் பற்றி கேட்டால சுயராஜ்யம் வந்ததும் எல்லாம ஒரு சட்டத்தில் ஒழிந்து விடுமென்றும், ஆலயப்பிரவேச கிளர்ச்சிபுரியுங்காலத்தில் எல்லா முன்னேற்றமும்தானாகவே ஏற்பட்டு விடுமென்றும், கைராட்டை சுற்றும் போது எல்லாம, கைராட்டையை சுற்றிக்கொண்டிருந்தால போதுமென்றும், உப்புக்காச்சும்போது கேட்டால் உப்பு ஒன்றிலேயே எல்லாம ஏற்பட்டு விடுமென்றும் சொல்லி தனக்கே எவ்வித அடிப்படையான கொள்கையுமில்லாமல் "எனக்கு கடவுள் சொல்லியவைகளைநான் அறிந்த வழிகளில் வினயமாக செய்து வருகிறேன்" என்று ஒரு கடவுளை காட்டி அவ்வப்போது வாயில் வந்ததைச் சொல்வதும், இஷ்டப்பட்டதை செய்வதும், இக்காரியத்துக்கு ஒத்து ஊத சர்க்கரவர்த்தி ஆச்சாரி மாதிரி பல ஆசாமிகள் நாட்டைக் கெடுப்பதற்கு சேருவதுமான காரியமே இன்று நடைபெறுகிறது. இந்தியாவிலுள்ள 35 கோடி மக்களுக்கு ஏக ப்பிரதிநிதியாகவும் வீண வேதாந்தம் பேசிக்கொண்டிருக்கும் நமது காந்தி அவர்கள் இந்தியாவுக்குத் தலைமை தாங்குவதற்கு என்ன லாயக்கிருக்க முடியும்? என்னதான் லாயக்கிருக்கிறது. அடிமை நாட்டுக்கு விடுதலை சம்பாதித்துக் கொடுக்கக் கூடிய ஒருவன் பொது ஜனங்களுடைய நம்பிக்கை ஒருபுறமிருந்தாலும், தான் எடுத்துக்கொண்டிருக்கும் எந்த ஒருகொள்கையையும், தனது உயிர் நாடியாக்கருதவேண்டும் அக்கொள்கை எந்தக் கடவுள் வந்து சொன்னாலும் விட்டுக்கொடுப்பதென்பது முடியாத காரியமாகும். குறிப்பிட்ட ஒருவர் தனது கொள்கையை பொது ஜனங்கள் ஆதரித்தாலும், ஆதரிக்கா விட்டாலும அதனைப்பற்றிக் கவலைப்படாமல் தன் கொள்கையை வற்புறுத்துபவராகவே இருக்கவேண்டும் கொள்கையை ஸ்திரம் பண்ணுவதில் உயிரை மாய்த்துக்கொண்டாலும் பாதகமில்லை. கொள்கையை விட்டுக்கொடுப்பவர்ஒருக்காலும் எத்தேசத்தையும் விடுதலை செய்துவிடமுடியாது. இது வரை காந்தியவர்கள் எடுத்துக்கொண்ட சேவைகளில் ஏதாவது ஒரு லக்ஷியத்தை கடைப்பிடித்தொழுகியதென்பதை எவரும் தைரியமாகச் சொல்ல முன்வர முடியுமா?

தோழர் காந்தியாரின் பொது சேவையின் படலத்தைப் பரிசீலனை செய்தால் ஒவ்வொரு கிளர்ச்சியின் முடிவும் ஒவ்வொருவருக்காகவும், கடவுள ஆக்ஞைக்காகவும் விட்டுக்கொடுத்ததாகவே ஏற்பட்டிருக்கும், பிரஸ்தாப ஆலயப்பிரவேசக் கிளர்ச்சியும வைதீகர்களின் மனம் நோகாதபடி செய்வதாகவும் சொல்லிக்கொண்டு மாளவியா சொன்னதற்காகவோ, அல்லது ஆலயப்பிரவேச கிளர்ச்சியைச் செய்யச்சொன்ன கடவுள் ஆக்ஞைக்காகவே விட்டு விட்டு பெரிய அறிக்கை இரண்டொன்றை சமர்ப்பித்து விட்டு படுத்து விடுவார். இதுதான் நடக்கப்போகும் விஷயம். இவ்வளவு அஸ்திவாரமிலலாத ஒரு ஆளை வைத்துக்கொண்டு அடிமையே உருவாயமைந்த இந்தியநாட்டை எப்படி விடுவிக்க முடியும். தோழர் காந்தி அவர்களால் இந்தியாவுக்கு எவ்வித விடுதலையுமில்லை! இல்லை! இல்லை என்பதையும் அவருடைய கூச்சலும், பாமர ஜனங்களின் ஆரவாரமும், ஹர்த்தால்களும், தேசிய வாரங்கள், சில குறிப்பிட்டவர்களின் விழாக்களும், இறந்து போனவர்களின் கொண்டாட்டங்களும், ஆலயப்பிரவேசம், ஹரிஜன சேவை, தீண்டாமை விலக்குத் திருநாள் போன்ற எல்லாம் மேன்மேலு பாமரத்தன்மையைஅபிவிருத்தி செய்வதோடுகொண்டாட்டதுக்குரிய பாக்கியமாக பிறந்தவர்கள் விழாக்களுக்குரிய பிறவி, இறந்தும் ஜனங்களால் போற்றப்படுகிறார்கள். நந்தனையும், திருப்பாணாள்வாரையும் கோவில்வைத்து கும்பிடுவதுமாதிரி தீண்டாமை விலக்கு திருநாளை செய்யும்படி அதாவது தீண்டாதார் தேர் இழுத்தால் தீட்டில்லை என்று நினைத்துக்கொள்வது மாதிரி தீண்டாமைத்திருநாளை கொண்டாடுவதும் தீட்டில்லை என்பது போன்ற முறையில் மக்கள் பிரமை கொண்டு எதிர்காலத்தில் தோழர் காந்தியை கடவுளாகவும், தெய்வமாகவும், ரிஷியாகவும், யோகியாகவும், ஞானியாகவும் வைத்துக்கொண்டு கூத்தடிக்கப்போவதை தவிர காந்தியாரால் காணப்போவது ஒன்றுமே இல்லை. அந்த முறையில் தோழர் காந்தியாரும் எதிர்காலத்தில்தான் ஒரு கடவுளாக எல்லார் மனதிலும் பதியும்வண்ணம் என்னென்ன செய்யவேண்டுமோ அவ்வளவையும் இப்போதிருந்தே செய்துகொண்டிருக்கிறார். ஆகவே காந்தியமென்பது அடியோடு ஒழிவதற்கு வேலை செய்வதுதான் தற்காலம் செய்யும உண்மையான சமூகத்தொண்டு. தோழர் காந்தியைப் போலுள்ள அரைவேஷ்டிதாரிகளையும், அதுகூடஇல்லாத கோவணாண்டிகளையும் ஆயிரக்கணக்கான வருஷமாய் கட்டி அழுததெல்லாம் போதும். அதனால் இந்தியநாடு அடைந்த பலன் என்ன? வருணாச்சிரமம், மதம், சாஸ்திரம் போன்றவைகளை உருவாயமைந்த காந்தி சொல்வதை எல்லாம் ஒரு பைத்தியக்காரன் சொல்வதாக இந்திய ஜனங்கள் என்று வெளிப்படையாக சொல்கிறார்களோ அன்றுதான் இந்தியாவுக்கு புதிய உலகம் தோன்றும்காலமாகும். அல்லது காந்தி தனது வாழ்நாளில் தாழ்த்தப்பட்டவர்களுக்கு உருப்படியானவேலை செய்வதாக இருந்தால் பிறவியின் எவ்வித பயனுமில்லை என்றும் தீண்டாமைக்கும். வகுப்பு பேதத்துக்கும் உயிர் நாடியாக இருக்கும் வர்ணாசிரமத்தையும், பகவத்கீதையையும் தீயிட்டுக்கொளுத்தினதாக காந்தியே பகிரங்கப்படுத்த வேண்டும். பிராமணன் குழந்தை இறந்ததற்காக தபஸ் செய்த சூத்திரனை கொலை செய்த ராமராஜ்யமென்பதை மறந்தேன், மறந்தேன், மறந்தேன் என்று மூன்றுதரம் சொல்லவேண்டும். ஏன் இதைச்சொல்கிறேனென்றால் இவையெல்லாம் தீண்டாமைக்கும், அடிமை புத்திக்கும் உயர் நாடியாகும. இவைகளையெல்லாம் காந்தியார் அப்படியே வைத்துக்கொண்டு கோயிலைக் காட்டி தீண்டாமையையொழிக்கப்போகிறேன் என்றால் அதில் ஏதாவது அர்த்தமிருக்கிறதா?

இன்று கோயிலில் இருக்கும் தெய்வங்களே தாழ்த்தப்பட்டவர்களுக்கு பெரும் தீங்கை விளைவித்துக் கொண்டிருக்கின்றன. நமது காந்தியைப்போலுள்ள புராதீன மகான்கள் கோயிலைக்கட்டி, பாவம், புண்ணியம், மோட்சம், நரகம், போன ஜென்மம், இந்த ஜென்மம் போன்ற அர்த்தமிலலாதவைகளை சொல்லி இயற்கையை சூரையாடிய ஒரு பாபமே, இன்று கோடிக்கணக்கான மக்கள் தாழ்த்தப்பட்டவர்களாகவும், கஷ்டப்படவும், சோத்துக்கு இல்லாமல் கப்பல் ஏறவும், பட்டினிகிடந்து சாகவும், பிச்சை எடுக்கவும், தெருத்தெருவாய் அலையவும், திருடவும் போன்றகாரியங்களை போனஜென்மத்தில்செய்தவினைப்பயனாகவேஇக்கொடுமைநடப்பதாக ஒரு சிறிய கூட்டம் நினைத்து அவர்கள் உழைப்பை போனஜென்மத்தில் செய்த புண்ணிய வசத்தால் தின்பதாக தின்று கொழுத்து மெத்தையில் படுத்துறங்கவும, மோட்டாரில் போகவும், வைரநகைகளாய் அணியவும், அயோக்கியத்தனங்கள் செய்யவுமாகிய காரியங்கள் நடைபெறுகின்றன. இச்சிறிய கூட்டமாவது போக்கிரித்தனத்தாலும், போன ஜன்ம விசேஷத்தாலும், கல்நெஞ்சத்தாலும், பிறவிச்செருக்காலும், பேடித்தனத்தாலும் தாழ்த்தப்பட்டோர்களான இளைத்தோரை துன்புறுத்தி தின்று கொழுக்கிறார்கள். என்றால் காந்தியார் சொல்கிறபடி இந்துமதத்தை புனிதமாக்குவதும், தாழ்த்தப்பட்டவர்களுக்கு புதிய வாழ்வை சிருஷ்டிக்கக்கூடியதாயுமிருக்கிற ஆலயங்களிலிருக்கும் கல்லாலும், செம்பாலும், செய்யப்பட்ட தெய்வங்களுமா! மெத்தையில் படுக்கவும், கல்யாணம். காட்சி, தேர், திருவிழா, பெண்டாட்டி பிள்ளைகள், தேவடியாள்வீடு, 5 காலம் 6-காலம் 7-காலம் என்பதாக படையல் போன்ற சுகபோகங்களை அனுபவித்துகொண்டிருக்கவேண்டும்.ஒரு பக்கம் தாழ்த்தப்பட்டோர்களுடைய உழைப்பை பணக்காரன், ஜமீன்தார், மிராசுதார், போன்றவர்களும், இன்னொரு பக்கம் கோவிலில இருக்கும்தெய்வங்களும் தின்றுகொண்டு இருதலைக்கொள்ளி எறும்பு போல் தவிக்கும் தாழ்த்தப்பட்டவர்களின் நிலையை பார்க்கும்போது சமதிருஷ்டியுடையவர்களின் கண்கள் சிவக்கிறது. நரம்பு நாடிகளெல்லாம் துடிக்கிறது, கோயிலில் இருக்கும் தெய்வங்களை தூள்தூளாக உடைக்கவேண்டுமென்கிறார்கள். பணக்கார உலகத்தை அழிக்கவேணுமென்கிறார்கள். இந்த சமதிருஷ்டி சேவையில் கிடைக்கும் தூக்குகயிறுகளை தோழர் காந்தியார் சூட்டிக்கொள்ளும தர்மாலையாகவே கருதுகிறார்கள். இம்மகத்தான உணர்ச்சி ததும்பி நிற்கும இக்காலத்தில் மகாத்மா, அவதாரம்போன்ற சோம்பேறிப் பெயர்களை சூட்டிக்கொண்டு பணக்காரக்கொடுமைக்கும், கோயிலில் இருக்கும் தெய்வங்களுடைய அட்டகாசத்துக்கும் இடையில் மாட்டிக்கொண்டு பிரிக்கமுடியாமல் பரிதபிக்கும் தாழ்த்தப்பட்டவர்கள் அதாவது உலகமே தின்று கொழுப்பதற்கு உயிர் நாடியாக இருப்பவர்களைப்பார்த்து உங்கள் கஷ்டமெல்லாம்போன ஜென்மத்தில் செய்த தவப்பலன்! என்றும், பிறவி விசேஷமென்றும் உரைமோர் ஊற்றும் பிரஸ்தாப காந்தியை என்ன செய்வது?

ஆகவே, தாழ்த்தப்பட்டவர்களே!! ஜாக்கிரதை! ஜாக்கிரதை!! ஜாக்கிரதை!!! தன்னை எக்காலத்திலும் தீர்க்கதரிசி என்று ஒரு பாமர உலகம் கொண்டாடினால் போதுமென்ற நியதியோடு ஒரு காந்தியார் உங்கள் முன் உலவிக்கொண்டிருக்கிறார். கல்விப்பொருளாதாரமெல்லாம் உங்களுக்குக் கேவலம் என்று சொல்லுகிறார். தாங்காதீர்கள்! தாங்காதீர்கள்!! உங்கள் எதிர்கால முன்னேற்றம் கல்வி, பொருளாதாரத்தைப்பொருத்திருப்பதால் அத்துறையில் விசேஷ கவனம் கொள்ளுங்கள். காந்தி ஒருவர் இருப்பதாக கனவில்கூட நினையாதீர்கள். உங்கள் சமூகத்தின் கோடாறியே காந்தியமென்பது. அதை அடியோடு அழிப்பதற்கு ஒரு புதிதான யுவர் உலகம தோன்றியிருக்கிறது, பயப்படாதீர்கள்! பயப்படாதீர்கள்!! பயப்படாதீர்கள்!!!

---

([illegible]ம் பக்கத் தொடர்ச்சி)

கராச்சாரி முதலிய எந்த சங்கராச்சாரிகளும் தங்கள் சுகம் வியாதி மருந்து வைத்தியம் மற்ற சௌகரியங்கள் முதலியவைகளுக்கெல்லாம் ஆங்கிலேய பாஷையின் தோஷ புத்தியையும், விஷத்தையும் அனுபோகத்தில் உபயோகப்படுத்தித் திருப்தியடைந்து வருகிறார்களேயல்லாமல் தோஷமில்லாத சமஸ்கிருத புத்தியின் பிரசாதத்தையோ, விஷமல்லாத சமஸ்கிருத மந்திரத்தையோ உபயோகித்துக் கொள்ளுவதுமில்லை. அதனால் வாழ்வதுமில்லை. அதனால் திருப்தியடைவதுமில்லை. ஆனால் தீண்டாமை போகவேண்டும், எல்லாருக்கும் தெரிசன உரிமை வேண்டுமென்று கேட்பதுமட்டும் ஆங்கிலேய பாஷையால் ஏற்பட்ட தோஷ புத்தியாம். இந்த இடத்தில் மட்டும் பூரி சங்கராச்சாரிக்கு ஆங்கில பாஷை எப்படி அய்யா விஷமாயிற்று என்பதை ஆலோசித்துப்பாருங்கள்.

பிராமணன் ஆங்கிலம் படிக்கப்படாது, பல தொழில் செய்யப்படாது, அதிலும் சேவகாவிர்த்தி கூடவே கூடாது. இதைச்செய்வானேயானால் அவன் கர்மச்சண்டாளனாகிறான் என்று வேதம் சொல்லுகிறது.

சண்டாளத்தன்மையை நீக்கிக்கொள்ள சனாதன தருமமென்னும் பழைய சமஸ்கிருத மருந்தைக் குடிக்கமாட்டார்கள். சங்கராச்சாரிகளும் உபதேசிக்கமாட்டார்கள். தீண்டாமை போகவேண்டும் ஆலய தெரிசனம் வேண்டும் என்று உண்டான தோஷ புத்திக்கு மட்டும் சனாதன மென்கிற பழைய சமஸ்கிருத மருந்தைக் குடிக்கவேண்டுமாம் சங்கராச்சாரிகள் செய்யும் பிரசங்க தோரணையைப் பார்த்தீர்களா?

ஆங்கில பாஷையானது உலகத்தின் கண்களுக்கு முன்னே பல நூற்றாண்டுகள் வருந்தி சித்தி பெற்றவிடுதலையின் கொடியைத் தூக்கிக்காட்டுகிறது. கொள்கையில் விடுதலை, செய்கையில் விடுதலை. யோசனையில் விடுதலை, கலையிலும், இலக்கியத்திலும்ஆதர்சியங்களிலும்விடுதலை. அந்த ஆங்கிலேய பாஷையின் தத்துவம், நியாயம், உண்மை, விடுதலை என்ற ஆதர்சங்களை யதார்த்தமாக நம்புகின்றன: அவை பல வழியிலும் காட்டப்படுகின்றன. அந்த பாஷை ஸ்தம்பித்து நிற்கவில்லை. முன்னேறுகின்றன. அதன் வாழ்க்கைகள் அதன் சரித்திர மூலமாக மாறியும் விசாலமெய்தியும் வருகின்றன. அது ராஜ்யத்தையும் வியாபாரத்தையும் மாத்திரம் கவனிக்கவில்லை. அதனுடைய ஜாதீய ஜீவன், இலக்கியம், சாஸ்திரம், கலை, ஊர்க்குடித்தனம் முதலியவைகளிலெல்லாம் உலக முழுவதும் முழுவெள்ளமாகப் பாய்ந்து செல்லுகிறது. அப்பாஷையின் பண்டிதர்கள் புரோகிதர்கள் தமது சித்தத்தை ஆத்மபலியென்ற ஒளியினால் துழாவி அவ்வொளியால் மனுஷிய சரித்திரத்தைப் புதுமாதிரி வாசிக்கப்பழகி பழக்குகிறார்கள். மனுஷிய ஜாதியை அவமானப்படுத்தி அதற்கெதிரே மத கர்வத்தை ஓயாமல் நிறுத்துவதனால் போபத்து வருமென்பதை அப்பாஷை கற்றுக் கொண்டிருக்கிறது. ஐரோப்பாவில் கோவிற் கட்டுக்குக் குருட்டுத்தனமாகக் கீழ்ப்பட்டிருந்த தளையை வெட்டித் தன்மதிப்பைக் காக்கச் செய்த பாஷையும் அதுவேயாகும். நமது நாடு அப்பாஷையில் உயர்ந்த பரீட்சை கொடுத்திருக்கிறது. பயிற்சியும் பெற்றிருக்கிறது அல்லாமல் உயர்ந்த யோசனைகள் பண்ணவில்லை. பள்ளி உடுப்பைப்போலவே பாஷையையும் மூளையில் மாட்டிக் கொண்டோம். பள்ளி உடுப்பைக் கழற்றி, வீட்டு பழைய உடுப்பை மாட்டிக்கொள்ளுவது போல பள்ளி பாஷையை புஸ்தகத்தில் போட்டு உபயோகமற்ற பழைய புராணக்குப்பை கூளங்களை மண்டையில் மாட்டிக் கொள்ளுகிறோம். அதனால் அப்பாஷைக்கு ஏற்ற வாகனம் நம்மிடை இல்லாமல் போகிறது. சமயக்கட்டிலும், ஜனக்கட்டிலும், ராஜ்யக்கட்டிலும் குற்றம் வெளிப்பட்டால் அதையெல்லாம் பொது ஜனங்களும் உண்மை விளக்கால் சோதித்துத்திருத்த அப்பாஷைவிலாசமெய்தியிருக்கிறது. இதனால் கிடைக்கும் சகதியும் விடுதலையும் எல்லாருக்கும்பயன்பட்டு நம்பிக்கையையும், தைரியத்தையும் உண்டாக்குகின்றன. இந்த உண்மை மாயமந்திர இருளில் மறைந்து கிடக்கவில்லை. தத்துவ ரகசியங்களில் புதைந்து கிடக்கவில்லை. சனாதன தருமத்திற்குள், அதற்கு அப்பாலாம். அப்பாலுக்குள் அடங்கிக் கிடக்கவுமில்லை. மதத்தில் புகுந்து மறுஜென்மத்தில் வந்து உயர்ந்த ஜாதியாரை உடல் பெருக்கச் செய்து தாழ்ந்த ஜாதியாரைத் தரைமட்டமாக்கித் தனியாகத் திரிந்து கிடக்கவுமில்லை, திறந்த வெளியில் எல்லாரும் காணும்படி தானும் வளர்ந்து பிறரும் வளரும்படி செய்கிறது.

இந்த ஆங்கிலேய பாஷையை இந்தியாவில் பிராமணன் தவிர மற்ற ஜாதிக்காரர்கள் படிக்கப்படாது என்கிற ஒரு விதியை எந்தப்பார்ப்பனர்களும் வேதத்தில் எழுதிவைக்காதது பூரி சங்கராச்சாரிக்குப் பெருங் கவலையாகும். பிர்மாவின் நான்கு முகத்திலிருந்தோ சிவபெருமானின் ஐந்து முகங்களிலிருந்தோ ஆங்கில பாஷை உண்டாகாதது நமது அதிர்ஷ்டமேயாகும். நம் தெய்வங்களுக்குத் தெரியாமல் அவர்கள் எல்லைக்கு அப்பால் ஆங்கில பாஷை உண்டானதே விசேஷமாயிற்று. மற்றசமூகங்களைத் தன்மதிப்புக்கொண்டு போய்ச் சேர்த்து விடுமென்பதை முன் சங்கராச்சாரிகளுக்குத் தெரிந்திருந்தால் ஆங்கிலபாஷை பிர்மாவின் கழுத்திலிருந்தும் சிவபெருமானின் முதுகிலிருந்தும் வந்தது, அதனால் சூத்திரனும் சண்டாளனும் ஆங்கில பாஷை படிக்கப்படாதென்று எழுதி, பிர்மா சொன்னார், சிவன் சொன்னார், விஷ்ணு ஆமோதித்தார், ரிஷிகள் கேட்டார்கள், மனு எழுதினார் என்று சொல்லி, சங்கராச்சாரிகள் அதற்கு உரையுமெழுதி விடுவார்கள். இதையே படித்து சாஸ்திரிகளெல்லாம் பகவத் கைங்கிரியமென்று பிரசங்கம் செய்வார்கள். சாஸ்திரிகளே ஆங்கில பாஷை உண்டானதெங்கே. நமது பிர்மாவுக்கும் சிவபெருமானுக்கும் அந்த ஊர் தெரியாதே நீங்கள் சொல்லுவதில் ஒரு பொருத்தமுமில்லை என்று கேட்டால் ஆங்கிலேய பாஷை பிர்மாவின் கழுத்திலிருந்து பிறந்ததினால் தான் ராஜபாஷையாகவிருக்கிறது. சிவபெருமானின் முதுகிலிருந்து பிறந்ததினால் தான் க்ஷத்திரியர்களைப் போலிருக்கிறார்கள். பகவான் பொய் சொல்லுவாரா? அவர் சொன்ன வேதத்தில் தானே அதுவுமிருக்கிறது. மற்ற விஷயங்களெல்லாம் நீ தர்க்கம் பண்ண அதிகாரியல்ல. சூத்திரனுக்கும சண்டாளனுக்கும் கடவுள சொன்னதைச் சொல்லப்படாதென்று வேதம் சொல்லுகிறது. சாஸ்திரியவர்களே சூத்திரன் சண்டாளன் என்றால் யார்? பிராமண் தாசி மகன் சூத்திரன். அந்த சூத்தரர்கள் யார? பிராமணன் சூத்திரன் என்கிற இரண்டு ஜாதி தானே கலியுகத்திலிருக்கிறது என்று தானே சங்கர் மடத்து சாஸ்திரிகள் டி. ஆர். ராமச்சந்திர அய்யர், டி எம். கிருஷ்ணசாமி அய்யர் முதலியபிராமணோத்தமர்கள்சொல்லுகிறார்கள் இந்த சூத்திரனுக்கும் பிராமணப் பெண்ணுக்கும் பிறந்தவன் சண்டாளன் என்று காந்தியைச் சேர்ந்த பண்டிதர்களும் அவருக்கு விரோதமான கட்சிப் பண்டிதர்களும் சொல்லிவிட்டார்கள். இவ்விதம் சாஸ்திரிகள் சொல்லவும் ஏதுவில்லாமல் போயிற்று.

தீண்டாமை விலக்கவும் எல்லாருக்கும் ஆலயப் பிரவேசம் வரவும வேண்டுமென்று வந்த குணம் ஆங்கில பாஷையால் உண்டான தோஷ மென்றுசொல்லும் பூரி சங்கராச்சாரி கீழே காட்டப்படும் இரண்டு விஷயத்தை கவனிக்கவில்லை. ஆதிசங்கராச்சாரிக்கு தீண்டாமை விலக்கவேண்டுமென்று உபதேசம் செய்த காசி விஸ்வநாதர் ஆங்கிலம் படிக்கவுமில்லை. ஆங்கில தோஷபுத்தி அவரைப்பற்றவுமில்லை அதை ஏற்றுக் கொண்ட ஆதி சங்கராச்சாரிக்கும் ஆங்கிலேய பாஷையின் விஷமேறினதுமில்லை. ஆலயப்பிரவேச உரிமை எல்லாருக்குமளித்த ராமானுஜரும் ஆங்கிலேயம்படிக்கவில்லை. கோபுரத்திற்கு மேலிருந்து குருவின் உபதேசத்தை எல்லாருக்கும் வீசி எறிந்த ராமானுஜருக்கு ஆங்கிலேய பாஷையின் விஷம் ஏறினதுமில்லை. எத்தனும் ஒரு ஜாதியானுக்கு பெரிய அனுபூதியுண்டாயின அது பிறருக்கும் கொடுக்கத்தக்கது என்பதை எல்லாஜாதியாரும் [illegible] வேண்டும்.

---

# மாஸ்கோ நவீன திட்டம்.

## தலைமயிரால் ஜோடுகள் செய்யும் விநோதம்.

மாஸ்கோ (ரஷ்யா) நகரிலிருந்து வெளியான ஒரு செய்தியிலிருந்து கீழ்கண்ட விஷயம்பிரசித்தமாகிறது. அதாவது கார்கி என்ற ஊரில் தலைமயிரால் ஜோடுகள் செய்யப்படும் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த யோசித்துள்ளார்கள். அதற்காக ஏராளமான மயிர் சேகரம்செய்யப்பட்டிருக்கிறது. மாஸ்கோவிலுள்ள 550 நாவிதர் கடைகளிலிருந்தும், ஒவ்வொருவருஷமும் 1500 டன் தலைமயிர் கிடைக்குமெனக்கணக்கிடப்பட்டிருக்கிறது. கம்பளத்தோடு கலக்கப்பட்ட 1-டன் தலைமயிரால் ஆயிரம்ஜதைஜோடுகள் செய்யலாம். ஆகையால்மாஸ்கோநகர ஜனங்களால் கழியும் மயிரானது 1கோடி ஜதை ஜோடுகள் செய்யப் போதுமானதாயிருக்குமாம்

---

# சர்க்கார் அறிக்கை.

17-2-33ந்தேதி சர்க்கார் அறிக்கை வருமாறு:—

நடப்பு வருஷத்தில் விவசாயப் பொருள்களின் விலை வாசிகள் மலிந்து விட்டதால் கந்தாயததை குறைக்க வேண்டு மென்று சட்டசபையில் விவாதிக்கப்பட்டது

விலை வாசிகள் கிராக்கியாய் விற்கும் போது கந்தாயத்தை அதிகப்படுத்து வதும், மலிந்து விற்கும் போது குறைப்பதும் சர்க்கார் முறையாகாது. அப்படிக் குறைப்பதானல் சர்க்காருக்கு அதிக நஷ்டமுண்டாகும். அதைச் சரிப்படுத்துவது முடியாமலு மிருக்கும். ஆகையால் விவசாயப் பொருள்களை விற்பதற்கு சர்க்கார் தங்களாலான எல்லா உதவிகளையும் செய்வார்கள்.

## விற்பனைக்காக நம்மிடம் உள்ள
## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

1. சிதம்பர ரகசியம் ... 0—8—0
2. சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை 0—4—0
3. மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை 0—8—0
4. ஆராய்ச்சி அணிகலம் ... 0—12—0
5. ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் ... 0—6—0
6. பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மா இல்லை 0—6—0
7. மோட்டாக்கார் இயந்திர சாஸ்திரமும் அதன் அநுபோகப்பயிற்சியும் (50 படங்களுடன் 200 பக்கங்கள் அடங்கிய பெரிய புஸ்தகம் ஆர்டருடன் 4 அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும்) ... 2—0—0

சுயராஜ்யம் யாருக்கு ... 0—1—0
சாமிகளின் அடிமைகள் ... 0—12—0
சென்னை லோக்கல் போர்டு ஆக்ட் ... 2—0—0

The crux of the Indian Problem
By Dr. PARANJPYE (in English.)
விலை ரூ. 1—0—0
"குடி அரசு" சந்தாதாரர்களுக்கு ரூ. 0—8—0

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிறயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணுவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாக பைண்ட் செய்து புஸ்தகமாக வைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை பைண்ட் செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம்,
ஈரோடு.

## ஆஸ்திக நாஸ்திக சம்வாதம்.

கடவுளைப்பற்றி தெள்ளத்தெளிய ஆராய்ந்து முடிவு கட்டும் ஓர் அரிய நூல். டிமமி 170 பக்கம் கொண்டது.
பிரதி ஒன்றுக்கு விலை அணு. 0—6—0
நாஸ்திகன்
C. K. குப்புசாமி, சேலம் பட்டு ஜவுளி, பெரியகாஞ்சிபுரம்.

## "SUPERSTITION OF KHADI"

A Discussion By S. Ramanathan, Pattabhi Sitharamyya, & N. S. Varadachari in English.
Price annas. 0-2-0

சுயமரியாதை
### தங்கரத்தினத் தெம்பாங்கு.

இது விருதுநகர் 3வது சு. ம. மகாநாட்டின்போது ஈ. வெ. ரா. முன்னிலையில் படிக்கப்பட்டது. சுயமரியாதைக் கொள்கை முழுதும் தழுவிய அரிய பாடல்கள் வாய்ந்தது.

புத்தகம் 1க்கு விலை ரூ. 0-1-0
,, 12க்குத் தபாற் செலவுள்பட ,, 0-12-0
,, 100க்கு ,, ,, 5-4-0
தனிப்பிரதி வேண்டுவோர் 0-1-6 அணு ஸ்டாம்பு அனுப்புதல்வேண்டும்.

M. R. மத்தரன், கல்வார்பட்டி.,
காசிபாளையம் போஸ்டு,
[திண்டுக்கல் வழி]

## "புரட்சி ஓங்குக!
## பொதுவுடமை
## தோணுக!!"

## "சன்மார்க்கன்"

வாசக நேயர்களுக்கு

இடமாறுதலுக்காக எதிர்பார்த்திருந்த அரசாங்கத்தாரலனுமதி கிடைத்து விட்டது. இனிநாளிதுவரையும் விட்டுப்போன பிரதிகளுடன் பக்கம் அதிகப்படுத்தி அடுத்ததிங்களிலிருந்து பத்திரிகை தவறாது வெளிவரும்

ஆண்டு சந்தா:—
உள்நாடு ரூ 1—0—0
வெளிநாடு ரூ-1—8—0.
தனிப்பிரதி ரூ-0—2—0.

(ஆசிரியர்)
சுவாமி சிவநேசம்.
"சன்மார்க்கன்" திண்டுக்கல்

---

உங்கள்.

## கண்ணையும்
## காதையும்

கவனித்துக் கொள்ளுங்கள்

### பூவிழல் !!

கண்ணில் பூவிழுந்து பார்வையைத் தடுப்பதை அபரேஷன் இல்லாமல் சுகப்படுத்தப்படும். நிலைமை எவ்வாறு இருப்பினும் நான்கு வாரங்களில் [illegible] குணப்படுத்தி விடுவோம்.

### செவிடு !!

பாதி அல்லது முழுவதும் செவிடாயிருந்தால் கூடப் பரவாயில்லை. காதிரைச்சல், தலைவலி இருந்தாலும் அச்சமில்லை. சுத்தமாக நிவர்த்திக்கப்படும். குணத்திற்கு உத்திரவாதம்.

விபரங்களுக்கு இங்கிலீஷில் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

"Sri" Works
Beadon St. Calcutta.

## பண்டிட் ஆனந்தரின்,
### அற்புத இயற்கை வைத்தியம்.

அநேக நோயாளர் அநேக மருந்துகளை பல நாள் அருந்தியும், நோய் நீங்காமல் துன்பமடைந்துக்கொண்டிருந்தவர்கள் கடைசியாக பண்டிட் ஆனந்தரின் அற்புத இயற்கை வைத்திய முறைகளால் நோய் நீங்கி நலமடைந்து வருகின்றார்கள்.

அநேக நோய்கள் அநேக டாக்டர்களால் ஆபரேஷன் செய்யவேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்ட பின்னர் பண்டிட் ஆனந்தம் அவர்கள் ஆபரேஷன் இல்லாமல் இயற்கை வைத்தியத்தாலும், உள்ளுக்கு மருந்து கொடுப்பதாலும், நோய் நீங்கி சுகமடைந்து வருகிறார்கள்.

மேகநோய், குஷ்டநோய், மதுமேக நோய், க்ஷயநோய் முதலிய கொடி வியாதிகளுக்கு இயற்கை வைத்தியத்தோடு, செயற்கை வைத்தியமாகிய நவதாம்பிரம், தங்கம், முத்து, சுவர்ன அப்பிரேகம் முதலிய உயர்ந்த பஸ்ப சிந்தூரங்களாலும் நோய் நீக்கப்படுகிறது. நோயாளர் நேரில் வந்தேனும், தபால் மூலமாகவேனும் பண்டிட் ஆனந்தரின் ஆலோசனையின்படி நடந்து சுகமடையலாம்.

மானேஜர், பண்டிட் ஆனந்தரின் வைத்தியசாலை,
221, தங்கசாலை வீதி, சென்னை.

# குடி அரசுப் பதிப்பக புஸ்தகங்கள்.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது கைவல்ய சாமியாரவர்களால் எழுதப்பட்ட கட்டுரைகளைத் தொகுத்து வெளியிடப்பட்டது. இங்கட்டுரைகளைப் படிப்பதால் அநேக சாஸ்திர புராண, இதிகாசங்களையும் அவற்றில் உள்ள சாதிப்புரட்டு சமயப்புரட்டு, முதலியவைகளையும் உணர்ந்து நிகரற்ற பண்டிதராகலாம். இதன் விலை அணா. 0—8—0

## இராமாயண ஆராய்ச்சி.

இதில் இராமாயணத்தின் ஆபாசங்களை அறியலாம். கம்பஇராமாயணம், வால்மீக இராமாயணம் இரண்டிலும் உள்ள ஊழல்களையும், ஒன்றுக்கொன்று உள்ள வேறுபாடுகளையும் ஆராய்ந்து அவற்றில் உள்ள தெய்வீகப் புரட்டுகளை வெளியாக்குவது.

இதன் விலை முதற்பாகம் பாலகாண்டம் அணா. 0—4—0
இரண்டாம் பாகம் அயோத்தியா காண்டம் அணா. 0—8—0

## ஞானசூரியன்.

இதில் வேதம், புராணம், ஸ்மிருதி முதலியவைகளின் ஆபாசங்களைக்காணலாம். மதங்களின் ஆபாசங்களையும், மதச் சடங்குகளின் ஆபாசங்களையும் அறியலாம். இதை ஒரு முறை படித்தால் ஆரியர்களின் புராதன நாகரீகத்தின் வண்டவாளம் முழுதும் தெரியும் பெரிய புத்தகம் 150 பக்கம். இதன் விலை அணா. 0—4—0

## ஈ. வெ. இராமசாமியின் சீர்திருத்த மகாநாட்டுச் சொற்பொழிவு.

இதில் ஜன சமூகம், சீர்திருத்தம் பெற்றுச் சுகமாக வாழ வேண்டியதற்கான வழிகளைக் காணலாம். மக்கள் அடிமைப்பட்டுப் பகுத்தறிவின்றி வாழ்வதற்குக் காரணங்களை உணரலாம், ஈ. வெ. ராமசாமியின் சொற்பொழிவுகளில் இது தலை சிறந்ததாகும்.

இதன் விலை அணா. 0—2—0,

## தர்மபரீக்ஷை அல்லது புராண ஆபாசம்.

இது ஒரு பழைய நூல். இதில் புராணங்களின் பொருத்தமற்ற கதைகளையும், முன்னுக்குப்பின் முரணான கொள்கைகளையும் தெள்ளத்தெளிய உணரலாம். இரண்டு இளைஞர்கள் மாறுவேடம் பூண்டு பொதுஜனங்களுக்குப் புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் முறையில் எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 0—3—0

## பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை.

இது ஒரு நாடகம், பார்ப்பனர்களின் புரட்டுக்களையும், ஜாதி வேற்றுமை, மதக்கொடுமை, சாஸ்திரக்கொடுமை முதலியவற்றையும் விளக்கிச் சமதர்மத்தைப் போதிப்பது. இதுவே தமிழில் உள்ள முதல் சுயமரியாதை நாடகம்.

இதன் விலை அணா 0—4—0

## மேயோகூற்று மெய்யா? பொய்யா?

இது அமெரிக்க நாட்டு மாதாகிய "கன்னிமேயோ" எழுதியதிலுள்ள உண்மைகளையும், அதில் சொல்லப்படாமல் இருக்கும்—நமது நாட்டிலுள்ள வேறு பல ஆபாசங்களையும் எடுத்துக் காட்டிச் சீர்திருத்த வேண்டுமென்னும் உணர்ச்சியை உண்டாக்குவது.

இதன் விலை அணா 0—3—0

## அகத்தியர் ஆராய்ச்சி.

இதில் முச்சங்கங்களின் புரட்டுக்களையும், அகத்தியர் சரித்திரப் புரட்டுக்களையும் தமிழ்நூல் ஆதாரங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது. சென்னை, பண்டிதர் கா. நமச்சிவாய முதலியாரால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0—2—0

## கடவுளை நிந்திக்கும் கயவர்கள் யார்?

இதில், கடவுளை நிந்திப்பவர்கள் சுயமரியாதைக்காரர்கள் அல்லவென்றும், புராணமரியாதைக்காரர்கள் தான் கடவுளை நிந்திக்கும் கயவர்களென்றும், இதிகாசப் புராணங்களின் ஆதாரங்களைக்கொண்டே விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. பண்டிதர் அ. ராகவன் அவர்களால் எழுதப்பட்டது.

இதன் விலை அணா 0 2—0

## கடவுளும், பிரபஞ்சமும்.

"கடவுள்" என்ற ஓர் அர்த்தமற்ற வார்த்தையை நம்பிகாலத்தையும், செல்வத்தையும், அதற்காகச்செலவு செய்து சோம்பேரிகளாய் வாழ்வது மதியீனமும் அறியாமையுமென்பது இப்புத்தகத்திலிருந்து தெளியலாம். சிறந்த ஆராய்ச்சி நூல். கல்லினுள் தேரையும், மாங்கொட்டையில் புழுவும் எப்படி ஜீவிக்கின்றன? கோழிமுந்தியதா? முட்டை முந்தியதா? என்ற கேள்விகளுக்கு விடையுடன் கூடியது.

இதன் விலை அணா 0—4—0.

## சத்தியாக்கிரகமா சண்டித்தனமா?

விலை பை. 0—0—3

## காந்தியின் உண்மைத் தோற்றம்.

விலை பை. 0—0—3

## இராமசாமியின் இலங்கை உபன்யாசம்.

விலை பை. 0—0—6

## இந்தியாவின் குறைபாடுகள்.

டாக்டர் பராஞ்சிபே எழுதியது விலை அணா. 0—8—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—6—0
Crux of the Indian Problem இங்கிலீஷ் விலை ரூ. 1—0—0
குடி அரசு சந்தாதாரர்களுக்கு விலை அணா. 0—8—0

## மநுநீதி மருமம்.

விலை அணா. 0—2—0

## இராமலிங்க சுவாமிகள் பாடல் திரட்டு.

விலை அணா. 0—2—0

## சுயமரியாதைப்பாடல்.

விலை அணா 0—2—0.

## கதர்-மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)

விலை அணா 0—2—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

உண்மை விளக்கம் பதிப்பகத்தில் அச்சிடப்பட்டு தோழர் நாகம்மாள் அவர்களால் வெளியிடப்பட்டது.